கிராம நலம்

CONNEMARA PUBLIC LIBRARY
7 - SEP 1961
MADRAS

மக்கள் துயர் தீர-
அமைச்சர்களின் நேரடி மேற்பார்வையில்
வெள்ள நிவாரண வேலைகள்...

ஆகஸ்டு '61
13 ந.பை

"வாழ்க்கைக் கலை பண்பட"

"கிராம வாழ்வை அபிவிருத்தி செய்து, மற்ற நாடுகளுடன் சமாதானமாய் வாழ்ந்து, எளிய ஆனால், உயர்ந்த வாழ்வுக்கு உதாரணமாக விளங்கினால்தான், உய்யும் வகை அறியாது உழலும் உலகுக்கு, இந்தியா தன் கடமையைச் செய்ய முடியுமென்று நான் நம்புகிறேன். பணத்தையே தெய்வமாகத் தொழுது, வசதிகளை அதிகரிக்க விரும்பி, தேவைகளைப் பெருக்கிக் கொண்டு போகும் வாழ்க்கை முறை, உயர்ந்த சிந்தனை வளர இடம் கொடுக்காது. எளிய, ஆனால், உயர்ந்த, வாழ்க்கை நடத்த நாம் கற்றுக்கொண்டால்தான், வாழ்க்கைக்கலை பண்படும்."

மகாத்மாவின் மணிமொழி

CONNEMARA PUBLIC LIBRARY
7 - SEP 1961
MADRAS

கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 6 | ஆகஸ்ட் 1961 | படி 11

பொருளடக்கம்

	பக்கம்.
பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு வேண்டுகோள்	2
சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்—சில்லமரத்துப்பட்டி	3
பஞ்சாயத்துக்களும் குடி மராமத்தும்	5
டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகளின் கவனத்திற்கு:	6
மரம் நடும் முறைகள்	6
மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழுவின் கூட்டம்	7
பஞ்சாயத்துக் கும்மி (பாட்டு)	8
பூர்வாங்க வாக்காளர் பட்டியல்	9
பாமாருக்கு விஞ்ஞானம்—''ஐவகை ஆற்றல்-நீர்''—திரு. ஆர். கே. விசுவநாதன், எம். ஏ.	11
காந்தியடிகளும் கிராம வாழ்க்கையும்—திரு, வெ. சாமிநாத சர்மா	13
கல்லூரிகளில் தமிழ் மொழிப் பயிற்சி	15
மாவட்ட நிர்வாக அமைப்பைச் சீரமைப்பது	17
நட்டுவாங்கப் பயிற்சிக்கான உபகாரச் சம்பளம்	18
அகதி வித்வான்களுக்கு உதவி மான்யம்	18
கேள்வியும் பதிலும்	19
அனைவரின் கவனத்தையும் கவர்ந்த ஆமூர்	20
கடிதக் கருத்தரங்கு	20
''நவ இந்தியாவை உருவாக்கும் திருப்பணியில் இளைஞர்களின் பங்கு''	21
அமெரிக்க தூதரின் சென்னை விஜயம்	22
கிராமிய மறுமலர்ச்சியில் நூலகங்களின் பங்கு—திரு. நா. சி. அரங்கசாமி	27
" வழிகாட்டி " (நாடகம்) திரு. எஸ். சீனுவாசன்	32

பகுதி 2—பஞ்சாயத்து—அரசினர் இதழ்

அரசாங்க ஆணைகள் .. .. i–xii.

'கிராம நல' இதழ் ஆலோசனைக் குழு

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்.,
பிரதமச் செயலாளர்.

ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி
கிராம அபிவிருத்திக் கமிஷனர்

ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை
துணைக் காரியதரிசி [பஞ்சாயத்து

ஸ்ரீ கே. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
பஞ்சாயத்து நிதி இயக்குநர்

ஸ்ரீ டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [வேலைமுறை]

ஸ்ரீ எஸ். வேங்கடரமணன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி, நிதித்துறை [திட்டம்]

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,
பொதுஜனத் தொடர்பு அதிகாரி-ஆசிரி

"கிராம நலம்" பத்திரிகையில் வெளியிட கதை, கட்டுரை, பாட்டு முதலியனவும் அவை சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனைத்தும் "ஆசிரியர், "கிராம நலம்", கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கிராம நலம்–சந்தா விவரம்:

ஆண்டு சந்தா ரூ. 1·50 ந.பை.
ஆறுமாத சந்தா 0·75 ந.பை.
தனிப் பிரதி 0·13 ந.பை.

சந்தா, மற்றும் "கிராம நலம்" பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா கடிதப்போக்குவரத்துகளும் 'பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு எழுதப்படவேண்டும். ஸ்டாம்புகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டா. வி. பி. பி. மூலம் பிரதிகள் அனுப்பப்படமாட்டா.

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு வேண்டுகோள்

பஞ்சாயத்துத் தலைவர்களே,

சென்ற பல ஆண்டுகளாக தமிழ்நாடு அரசாங்கம் மாதர் நலத்துறையின் மூலமாக பணிகள் பல ஆற்றி வருகிறது. மாவட்டங்களில் மாதர் நல நிலையங்களை இத்துறை நிறுவிச் செயலாற்றி வருகின்றது. இந்த நிலையங்களின் சார்பில் மாதர் நலக் கிளைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் கிராமப் பெண்களுக்கு தையல், பின்னல், நூற்றல், பாய் முடைதல் முதலான கைத்தொழில்களில் பயிற்சி வழங்கப் படுகிறது. மேலும் கிராம மாதர்களுக்குக் கைத்தொழில்கள் பலவற்றில் பயிற்சி அளிப்பதன் வாயிலாக, அவர் தம் குடும்ப வருவாயைப் பெருக்கவும், துணை செய்கிறது. அன்றியும், சேவையில்லங்களை நடத்தி, ஆதரவற்ற பெண்களுக்குக் கைத்தொழில் முதலியவற்றில் பயிற்சி வழங்கி, அவர்களுக்குச் சமுதாயத்தில் புனர் வாழ்வை அளிக்கின்றது. மாதர் நலத்துறையின் தலைவர், மாவட்டங்களிலுள்ள மாதர் நல உதவி அதிகாரி, மாதர் நல நிலையங்களிலே பணி புரியும் அமைப்பாளர், இவர்களுடன் பணியாற்றும் பணியாளர்கள் ஆகியோர், இத்துறையில் பணியாற்றி வருவோராவர்.

1958-ஆம் ஆண்டையத் தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் இப்பொழுது அமுல் செய்யப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்கீழ், 1961 அக்டோபர் 2-ஆம் தேதிக்கு முன்னால், இந்த மாநிலத்தின் வளர்ச்சி வட்டாரங் களில் மூன்று பகுதிகளாகப் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட வேண்டும். அன்றியும் தாய் சேய் நலப் பணிகளை முன்னேற்றமடையச் செய்யும் பொறுப்பு, பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்தகைய தாய் சேய் நலப் பணிகளைப் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கப்பட்ட தேதி யிலிருந்து மாதர் நலம், குழந்தைகள் நலம் சம்பந்தமான வேலைகளைப் பஞ்சாயத்து யூனியனின் ஒரு குழு நிர்வகிக்கும்.

பஞ்சாயத்து யூனியனின் பிற குழுக்களைப் போன்றே இந்தக் குழுவும் அதிகாரங்களைப் பெற்றிருக்கும். பஞ்சாயத்து வளர்ச்சியின் திட்டமிட்ட வரவு செலவுத் திட்டத்தில், குறிக்கப்பட்டுள்ள மாதர் நல, குழந்தைகள் நல மானியங்களைச் செலவழிக்கும் விஷயம், பஞ்சாயத்து யூனியன்களின் தாய் சேய் நலத் திட்டங்கள் நிர்வாக சம்பந்தமான விஷயம், ஆகியவை அடங்கிய, மாதர் நல, குழந்தைகள் நலத் திட்டத்துடன் தொடர்பு கொண்ட வேலைகளின் நிர்வாகத்துக்கு, இந்தக் குழு பொறுப்பாளியாகிறது.

இந்தக் குழு "மாதர் நலக் குழு" என வழங்கப்படும். இதற்குத் தலைவராக, ஒரு பெண் இருப்பார்.

பஞ்சாயத்து யூனியனுடைய மாதர் நலக் குழுவின் பொது மேற் பார்வையுடனும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் அன்றாட நேரடி நிர்வாகத்தின் கீழும், இவர்கள் பணியாற்றுவர்.

ஆகவே மாதர் நலம், குழந்தை நலப்பணிகள், வெற்றிகரமாக நாடெங்கும் நிறைவேற, பஞ்சாயத்து யூனியன், மிக்க பொறுப்பையும், உழைப்பையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இத்திட்டங்கள் நிறைவேற பஞ்சாயத்துக்களில், மாதர் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். எனவே, ஒவ்வொரு பஞ்சாயத்துத் தலைவரையும், ஒவ்வொரு பஞ்சாயத்திலும், மாதர் சங்கம் அமைக்குமாறு வேண்டுகிறோம். இந்த மாதர் சங்கத்திற்குத் தலைவராக அந்தப் பஞ்சாயத்திலுள்ள பெண் அங்கத்தினர் அமைவார். இந்த மாதர் சங்கம் அமைக்கப்பட்டு அதன் திட்டங்கள் சங்கத்தின் வாயிலாக நிறைவேற்றத் தொடங்கும் போது, அதற்கு வேண்டிய நிதி வசதி முதலியன பற்றி உங்கள் அனைவருக்கும் விரைவில் அறிவிக்கப்படும். எனவே, மாதர் சங்கங்கள் அமைப்பதே, உங்கள் முதற் கடமை ஆகும். மாதர்களைப் போற்றிய மகாத்மா பிறந்த நாளாகிய அக்டோபர் இரண்டாம் நாள், தமிழ்நாடு முழுவதும், மாதர் தினம் கொண்டாட, முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது வெற்றிகரமாக நிறைவேற, செப்டம்பர் 20-ஆம் தேதிக்குள்ளாக, மாதர் சங்கங்கள் அமைக்கப்படவேண்டும். இதில் இயன்ற உதவிகள் அனைத்தும் வழங்க, மாவட்ட மாதர் நல உதவி அதிகாரிகளுக்கும், வட்டார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கும், சமூகக் கல்வி அமைப்பாளர்களுக்கும், அறிக்கை விடுத்துள்ளோம். பஞ்சாயத்து யூனியன் சட்டம், செயல் முறையில் வர, நீங்கள் உங்களது முழு ஒத்துழைப்பையும் வழங்கினீர்கள்; அவ்வாறே, மாதர், குழந்தை நலத் திட்டங்களும் வெற்றிகரமாக நிறைவேற, மாதர் சங்கங்கள் அமைப்பதிலும், உங்கள் அரிய ஒத்துழைப்பை மீண்டும் வழங்குவீர்களென உறுதியாக நம்புகிறோம்.

வணக்கம்.

எஸ். அம்புஜம்மாள்,
சென்னை இராஜ்ய சமூக நல போர்டு தலைவர்.

கோ. வேங்கடாசலபதி,
கிராம அபிவிருத்திக் கமிஷனர்.

சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்

சில்லமரத்துப்பட்டியின் சிறந்த கல்விப் பணி

திரு. ப. சுருளிவேல், தலைவர், சில்லமரத்துப்பட்டி பஞ்சாயத்து, மதுரை மாவட்டம்.

["கிராமப் பஞ்சாயத்து வளர்ச்சிப் பணிகள்" என்ற தலைப்பில் சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள் என்ற வரிசையில் கட்டுரைப்போட்டி ஒன்று நடத்த "கிராம நலம்" முன்வந்தது அனைவரும் அறிந்ததே. இந்தப் போட்டிக்கான கட்டுரைகள் குறிப்பிடத்தக்க அளவில் வந்துள்ளன. மேலும் மேலும் பெருவாரியான கட்டுரைகளை வரவேற்கிறோம். இந்தக் கட்டுரைப் போட்டியைத் துவக்கினதிலிருந்து, கிராம மக்களிடேயே இந்தப் போட்டியில் கலந்துகொள்ளவேண்டும் என்ற ஆவல் பன்மடங்காகப் பெருகியுள்ளதை அறிந்து மகிழ்கிறோம். என்னென்ன செய்யவேண்டும் என்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்காமல், செய்துள்ள சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, எழுதப்படும் கட்டுரைகள்தான் தேவை. கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ப வர்கள் இதை மனத்தில் கொண்டு கட்டுரைகளை எழுதி அனுப்பவேண்டும்.

இக்கட்டுரைப்போட்டி தொடர்ந்து நடைபெறும். தொடர்ந்து மாதாமாதம், கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவைகளுக்கு பரிசுகள் அளிப்பதுடன், கட்டுரைகள் "கிராம நலத்தில்" வெளியிடப்படும்.

மதுரை மாவட்டத்தில் உள்ள சில்லமரத்துப்பட்டி பஞ்சாயத்தின் கல்விப் பணியைப் பற்றி கூறுகிற இக்கட்டுரை ஆகஸ்ட் மாத முதல் பரிசைப் பெற்றுள்ளது.

—ஆசிரியர்]

"வயது வந்த குழந்தைகள் எல்லோருக்கும் கல்வியறிவு புகட்ட, பஞ்சாயத்துக்கள் செய்ய வேண்டியதென்ன ?"

மதுரை மாவட்டம் போடிநாயக்கனூர் வட்டாரத்தில் தேவாரம்-போடி பாட்டையில் அமைந்தது **சில்லமரத்துப் பட்டிக் கிராமம்.** 1951-ம் ஆண்டின் மக்கள் கணக் கெடுப்பின்படி இவ்வூர் மக்கள் தொகை 4,262. கிராமங் களுக்கே இயற்கையாய் அமைந்த பூசல்களின் காரண மாக மனவிரோதங்கள் நிறைந்திருந்த இக்கிராமத்தில் சிலர் முயற்சியால் ஒற்றுமையடைந்து 1-4-1956 தேதி யில் இவ்வூருக்கு மட்டும் தனிப்பஞ்சாயத்து அமைத்த னர். சுமார் மூன்று சதுர மைலுள்ள குறுகிய நிலப் பரப்பும், நிறைந்த மக்கள் தொகையும், வரண்ட நிலப் பிரதேசமும் உடையது இப்பஞ்சாயத்து. பஞ்சாயத்து அமைத்தபின், இருமுறை தேர்தல் நடத்தும் ஒவ்வொரு முறையும் கிராமக் கூட்டம் கூடி, **தலைவரையும் அங்கத் தினர்களையும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தனர்.** மிகக் குறுகிய காலத்தில் இவ்வூர் அடைந்துள்ள வளர்ச்சி மெச்சத்தக்கதோடு, போடி சமுதாய நல வட்டாரத்தி லேயே இவ்வூர் சிறந்த கிராமமெனவும், மதுரை மாவட் டத்தில் இரண்டாவது கிராமமெனவும் தேர்ந்தெடுக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வியக்கத்தக்க முறையில் பணியாற்றும் விவசாய பாங்க்

இங்கு அமைக்கப்பட்டுள்ள விவசாய வங்கி பத் திரிகைகளாலும் தலைவர்களாலும் "தமிழ் நாட்டிலேயே சிறந்த வங்கிகளில் ஒன்று" எனப் புகழப்பட்டிருக் கிறது. மேலும் ரூபாய் 15,000 செலவில் கிட்டங்கியும் ரூபாய் 10,000 செலவில் அலுவலகமும் கட்டி முடிக்கப் பட்டும் தங்கும் விடுதி ஒன்று கட்டப்பட்டும் வருவதுடன் சுமார் நான்கு இலட்ச ரூபாய்களுக்கு மேல் கடன் கொடுத்து ஒழுங்காய் வசூலித்து வருவது மற்றொரு சிறப்பாகும்.

பஞ்சாயத்து புரிந்துள்ள சாதனைகள்

இரு தெருக்களுக்கு சாக்கடைக் கால்வாய்கள் கட்டியும் ஆறு, கிணறுகளை ஆழப்படுத்தி சீர்திருத்திக் கட்டியும் முடித்திருப்பதோடு, பள்ளிக் கட்டிடம், சமுதாய நல மன்றக் கட்டிடம் முதலியன கட்டி முடிக்கப் பெற்றிருக் கின்றன. ரூபாய் 38,800 மதிப்பீட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மேல் நிலைத்தொட்டி கட்டும் வேலை நடைபெற்று வருகிறது. அம்மாபட்டி வரை பாட்டையும் பாலங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. தெருவெங்கும் மின்விளக்கு கள் அமைத்திருப்பதோடு, சுமார் 100 தோட்டக் கிணறு

களுக்கு மின்சார நீர் இறவை இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு இரும்புக் கலப்பைகளால் உழவு செய்தல், சர்க்கார் பண்ணைகளிலிருந்து உயர்ந்த விதை வித்துக்கள் வாங்கி உபயோகித்தல், பயிர் நோய்களுக்கு மருந்துகள் தெளித்தல் முதலிய சீர்திருந்திய விவசாய முறைகளைப் பின்பற்றிப் பெரும்பாலும் பயிர்த்தொழில் நடைபெறுகிறது. ஊருக்கு மேற்கே பாலைவனம்போல் காட்சி தரும் வெண் மணல் பரப்பையும் பண்படுத்தி வேர்க்கடலைபோன்ற விவசாயம் வெற்றிகரமாகச் செய்யப்படுகிறது. இவ்வூர் கூட்டுறவு விவசாய வங்கியின் ஆதரவில் தேனீ கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலிருந்து இங்கு கிளை விற்பனை நிலையம் ஒன்றை ஏற்படுத்தி மகசூல் அறுவடை காலங்களில் இங்கு விளையும் பருத்தி, நவதானியங்களை வாரம்தோறும் ஏலம் கோரி விற்பனை செய்கின்றனர். ஏலதினம் பலவூர் வியாபாரிகளும் கூடுவதால் இப்பக்கத்திலுள்ள விவசாயிகளின் விளை பொருள்களுக்கு நியாயமான நல்ல விலை கிடைக்க வசதி ஏற்பட்டிருக்கிறது. இங்கு சுமார் 30 ஆண்டுகளாக இருந்த கிளை அஞ்சல் நிலையம் (Branch Post Office) தந்தியுடன் கூடிய பெரிய நிலைய (Sub-Post Office)-மாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. ஊழியர்கள் சிலரைக்கொண்டு ஊர்க்காவல் அமைத்து எங்கும் "களவு" என்பதே இல்லாமல் ஒழிக்கப்பட்டிருக்கிறது.

"பயிற்றிப் பல கல்வி தந்து...."

இவைகளையன்றி வயது வந்த குழந்தைகள் எல்லோருக்கும் கல்வி அறிவு புகட்ட விரும்பி எடுத்துக்கொண்ட முயற்சிகளை விளக்குவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

பல சிற்றூர்களுக்கு மத்தியில் அமைந்தது இவ்வூர். இங்கு உயர்தர ஆரம்பப்பள்ளிகள் இரண்டு நடந்து வந்தன. 1960–1961 கல்வி ஆண்டில் இவ்விரு பள்ளிகளிலும் 941 மாணவ, மாணவிகள் கல்வி பயின்றனர். 37 ஆசிரியர்கள் பணியாற்றி வந்தனர். 1959–60-ம் ஆண்டில் இரு பள்ளிகளிலும் எட்டாம் (E. S. L. C.) வகுப்பு சர்க்கார் தேர்வில் நூற்றுக்கு நூறு மாணவர்கள் வெற்றி பெற்றதன் காரணமாக மாவட்டப் பரிசை இரு பள்ளிகளும் அடைந்தன. எட்டாம் வகுப்புக்கு மேல் படிப்பதற்கு மூன்றரை மைலுக்கு அப்பாலுள்ள போடிநாயக்கனூருக்கு இக்கிராமத்திலிருந்தும் அண்டை அயல் கிராமங்களிலிருந்தும் மாணவ, மாணவிகள் கால் நடையாய் நடந்து சென்று படித்து வந்தனர். அவர்கள் தமக்கு வேண்டிய பகல் உணவை கையில் எடுத்துக் சென்றனர். வீட்டில் உணவு தயாரிப்பதில் காலதாமதம் ஏற்பட்டு விட்டால் குழந்தைகள் வகுப்புக்கு ஓடிப்போய்ச் சேரும் காட்சி பரிதாபகரமானதே. இந் நிலைமையை மாற்றி "ஏழை பணக்காரக் குழந்தைகள் அனைவரும் இலகுவாய் உயர்நிலைக் கல்வியெய்த உள்ளூரிலேயே உயர்நிலைப்பள்ளி அமைக்க வேண்டும்" என்ற எண்ணம் ஒரு சில பிரமுகர்கள் மனதில் உதயமாயிற்று. ஆனால், இவ்வூரில் ஒக்காலிக சமூகத்தினரும் தேவாங்க சமூகத்தினரும் இரு பெரும் சமூகத்தினர். இரு சமூகத்தினரும் தம்தம் சமூகத்தின் பெயராலேயே பள்ளிகளை நடத்தி வந்தனர். இதுவே இக்கிராமத்தில் போட்டியும் பொருமையும் பூசல்களும் ஏற்படக் காரணமாய் இருந்து வந்தது. இவ்விரு பள்ளி நிர்வாகத்தையும் மாற்றியமைத்து பள்ளிகள் இரண்டையும் கிராமத்தின் பொது உடைமையாக்கி சாதி, சமய பேதமின்றி எல்லா மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு கமிட்டியின் நிர்வாகத்தில் கொண்டு வந்தாலன்றி உயர்நிலைப் பள்ளி அமைப்பது சிரமமெனத் தோன்றிற்று. ஒவ்வொரு பள்ளியின் சாமான்களும் கட்டிடங்களும் பல்லாயிரக் கணக்கான ரூபாய் மதிப்புடையவை. "குறிப்பிட்ட சமூகங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை கிராமப் பொதுவுக்கு வழங்க சமூக மக்கள் அனைவரும் ஏகமனதாக ஒத்துக்கொள்ள வேண்டுமே; அதற்கு வழி என்ன?" என்ற சிந்தனை இருந்து வந்தது.

13-7-1959 தேதி ஊராட்சி மன்றத் தலைவனாக நான் தேர்ந்தெடுக்கப்பெற்று பணியாற்றி வருகிறேன். 30-5-1960 தேதி நடைபெற்ற வட்டார அபிவிருத்தி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் "எங்கள் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி அமைக்க சர்க்காருக்கு சிபார்சு செய்ய வேண்டும்" என்ற தீர்மானம் ஒன்றைப் பிரரேபித்தேன். அன்று கூட்டத்துக்குத் தலைமை வகித்த கோட்டாட்சித் தலைவரிலிருந்து அனைத்து மெம்பர்களும் உயர்நிலைப் பள்ளியற்ற எங்கள் வட்டாரத்தில் முதன் முதல் அமையப்போகும் பள்ளியை வரவேற்று வெகுவாக ஆதரித்துப் பேசி ஏகமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

15-6-1960 தேதி மனமகிழ் மன்றம் பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு. பாரதி நாராயணசாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அன்று இரவு உயர்நிலைப் பள்ளி அமைப்பு சம்பந்தமாய் ஆலோசனைக் கூட்டம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடை பெற்றது. கூட்டத்தில் வட்டார வளர்ச்சி அதிகாரி உயர்திரு. அழகு சிங்கம் அவர்களும் பாராளுமன்ற உறுப்பினரும் கலந்து கொண்டனர். கிராமப் பெரியோர்களின் ஒத்துழைப்பாலும் விருந்தினர்களின் சொற்சாதுர்யத்தாலும் பள்ளிகள் இரண்டையும் பொது உடைமை ஆக்கியதோடு இத் தாலூகாவிலேயே சிறந்த தேச பக்தரும் தியாக சீலரும் அரசியல் அறிவை ஊட்டியவருமான திரு. பாரதி நாராயணசாமி அவர்களின் பெயரையே பள்ளிகளுக்குச் சூடுவதெனத் தீர்மானித்ததுடன் கல்லூரிப் பட்டப் படிப்பு பெற்றும் கிராம நல ஊழியம் புரிந்து வருபவரும் கூட்டுறவு வங்கித் தலைவருமான உயர்திரு. எஸ். ஹரிஜக்கையப்பன், பி.ஏ., அவர்களைத் தலைவராகவும் சிறந்த சேவை

(31-ம் பக்கம் பார்க்க)

"பஞ்சாயத்துக்களும் குடி மராமத்தும்"

தஞ்சை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசாங்கப் பிரதமச் செயலாளரின் சுற்றுப்பயணம்

1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ந் தேதி அன்று தமிழ்நாடு பிரதமச் செயலாளர் ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ். அவர்கள், தஞ்சை மாவட்டத்தில் உள்ள பாபநாசம், கிழ்வேளூர், மற்றும் இதர பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் செய்துள்ள குடிமராமத்து வேலைகளை நேரில் கண்டறிந்துகொள்ளுவதற்காக, தஞ்சை மாவட்டத்திற்கு விஜயம் செய்தார். ஆனைக்காரன் சத்திரத்தில் அரசாங்கத்தாரால் ரூ. 42,750 செலவில் கட்டப்பட்ட பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டிடத்தை அவர் திறந்து வைத்தார். கட்டிடத்தைதிறந்து வைத்துப் பேசுகையில், புதிய பஞ்சாயத்து சட்டத்தை அமுலாக்குவதில் பஞ்சாயத்துத்தலைவர்களுக்குள்ள பங்கை மேற் கொள்ள வற்புறுத்தினர்.

ஜூலை மாதம் 3-ம் தேதி அன்று குடந்தை நகர ஆட்சி மன்றக் கூடத்தில் கூட்டப்பட்ட விசேஷக் கூட்டத்தில் கலந்துகொண்டார். பாபநாசம், திருப்பனந்தாள், திருவிடமருதூர், அம்மாபேட்டை, கும்பகோணம், ஆகிய தொகுதிகளிலிருந்து வந்திருந்த பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், குடிமராமத்து வேலையை சென்ற கோடையில் மேற்கொண்டு செய்வதில் ஏற்பட்ட கஷ்டங்களையும், அபிப்பிராயங்களையும் விவரிக்க, கேட்டறிந்தார். பாபநாசம் பஞ்சாயத்து யூனியன் தலைவர், தன்னுடைய தொகுதியில் எவ்வாறு குடிமராமத்து வேலை செய்யப்பட்டது என்று கூறினர். அவரை அடுத்து பல பஞ்சாயத்துத் தலைவர்கள் பேசினர்கள். குடிமராமத்துக் வேலையை எந்தக் காலத்தில் செய்தால் சுலபமாக இருக்கும், கூலி ஆட்களும் கிடைப்பார்கள் என்பது குறித்து அதாவது, ஐப்பசி அல்லது கார்த்திகை மாதம் எடுத்துக்கொள்வதா அல்லது பங்குனி மாதம் எடுத்துக் கொள்வதா என்பது பற்றி பலவேறு பட்ட அபிப்பிராயங்களையும் தெரிவித்தார்கள்.

பிரதமச் செயலாளர் தன்னுடைய முடிவுரையில், எந்த மாதத்தில் வேலையை மேற்கொள்ள வேண்டும் என்று பஞ்சாயத்துக்களே தீர்மானிக்கவேண்டும் என்றும், குடிமராமத்து வேலையை அரசாங்கம் ஏற்று பொதுப்பணித்துறையின் மூலம் நடத்துவது இயலாது என்றும், பஞ்சாயத்துக்கள் தான் இந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்றும் கூறினர்.

ஜூலை மாதம் 4-ம் தேதி காலையில் கீழ்த் தஞ்சையில் உள்ள கிழ்வேளூர், மாயூரம், சீர்காழி செம்பனர் கோயில், தொகுதியிலிருந்து வந்திருந்த பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களிடமிருந்து குடிமராமத்து வேலையை செய்வதில் உண்டான அநுபவங்களை நேரில் கேட்டறிந்தார். பஞ்சாயத்துத் தலைவர்கள் பேசுகையில்சில பஞ்சாயத்துக்களின் நிதிநிலைமை இப் பணியை முழுப்பொறுப்புடன் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது என்றும், அரசாங்கம் அதற்கான தொகையை முன்பணமாகக் கொடுத்து உதவவேண்டும் என்றும் கூறினர்கள். பிரதமச் செயலாளர் தனது உரையில் "ஏ" பிரிவு வாய்க்கால்களில் "மாதிரி தொகுதிகள்" (Model Section) ஏற்படுத்து வதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்வதாக கூறினர். மேலும் பஞ்சாயத்துக்களுக்கு முன் பணம் கொடுப்பது பற்றி உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் பஞ்சாயத்துக்கள் கூடுமானவரை மிகக் குறைந்த செலவில் மேற்படி வேலையைச் செய்ய வேண்டும் என்றும் கூறினர். இம்மாவட்டத்தில் இந்த ஆண்டில் 2,200 மைல் நீளமுள்ள வாய்க்கால்களை வெட்டியதைப் பாராட்டினர். இது போல் அடுத்த ஜூன் மாதக் கடைசிக்குள் இந்த மாவட்டத்தில் 25,000 மைல்கள் நீளமுள்ள வாய்க்கால்களையும் வெட்டி முடிக்கவேண்டும் என்றர். மேலும், வெற்றிப்பாதையில் காலடி எடுத்து வைத்து கணிசமான அளவு முன்னேறி இருப்பதைப் பாராட்டி, முழுமையான லட்சிய சித்திபெற வெகுவாக பாடுபடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பின்பு, நகராட்சி மன்றத்தில் கூட்டப்பட்டிருந்த அலுவலர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு, குடிமராமத்து வேலைகளை எல்லா தொகுதிகளிலும் செய்வதற்கான ஏற்பாடுகளைப்பற்றி விவாதித்தார். குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமாக பேசுகையில் ஒவ்வொரு தொகுதிக்கும் தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையான 250 யை பூர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கக் கோரினர்.

டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகளின் கவனத்திற்கு :

சுமார் 12,000 பஞ்சாயத்துக்கள் விவரம் வெளிவரும்.

தமிழ் நாட்டில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய முழுப் பட்டியல் ஒன்றைத் தயாரித்து வெளியிட முயற்சிகள் நடை பெற்று வருகின்றன. எல்லாப் பஞ்சாயத்துக்கள் பற்றிய சரியான விவரங்கள் அடங்கிய இந்தப் பட்டியல் "கிராம நல" இதழின் அநுபந்தமாக வெளிவரும்.

புதிய பஞ்சாயத்து ஆட்சி அமுலுக்கு வந்து நடைபெறும் இந்தச் சந்தர்ப்பத்தில், பஞ்சாயத்துக்கள் பற்றிய சரியான விவரங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பது, பொதுமக்களுக்கும், அதிகாரிகளுக்கும் தெரிந்திருக்கும். இந்த மாநிலத்தில், சுமார் 12,000 பஞ்சாயத்துக்கள் தற்சமயம் இயங்கிவருகின்றன, இவை அத்தனை பற்றிய விவரங்களையும் தொகுத்து வெளியிடுவது மிகவும் சிரமமான வேலை. "கிராமநலம்" இந்த வேலையைச் செய்ய முன் வந்துள்ளது. இந்த விஷயத்தில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள். குறிப்பாக, வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், பஞ்சாயத்து டிவிஷனல் அதிகாரிகள் ஆகியோர்களுக்கு இந்த விஷயத்தில் பெரும் பொறுப்பு உள்ளது. பஞ்சாயத்து டிவிஷனல் அதிகாரிகள் தங்களுடைய கோட்டத்தில் (Revenue Division) உள்ள பஞ்சாயத்துக்கள் பட்டியல்களை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிருர்கள். "கிராம நலம்" வெளியிடப்போகும் இந்தப் பட்டியல், தவறில்லாமல், சரியான பட்டியலாக இருக்கவேண்டுமென பெரு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். ஆகவே, பஞ்சாயத்து டிவிஷனல் அதிகாரிகள் அனுப்பும் பட்டியல் தவறுகள் இல்லாமல் சரியாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இந்த விஷயத்தை தெளிவாகப் புரிந்து கொண்டு, அதிகாரிகள், உடனடியாக ஆவன செய்வார்களென நம்புகிறோம். செப்டெம்பர் மாத மூன்ருவது வாரத்தில், பட்டியல்களின் தமிழ் புரூப் பிரதிகள் டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு அனுப்பப்படும். அவர்கள் அதைப் பார்த்து, வேண்டிய திருத்தங்களைச் செய்து, இரண்டு தினங்களுக்குள்ளாக அவற்றைத் திருப்பி அனுப்பிவைக்கவேண்டும். பட்டியல்களை அனுப்பிவைப்பதுபோலவே, புரூப்களையும் திருத்தி உடனே அனுப்பிவைப்பதன்மூலம், தங்களுடைய ஒத்துழைப்பை நல்கவேண்டுமென டிவிஷனல்பஞ்சாயத்து அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர் "கிராம நலம்"

மரம் நடும் முறைகள்

ஒரு தேசத்தின் பொருளாதார சுபிட்சத்திற்கும், தொழில் அபிவிருத்திக்கும் மரங்கள், காடுகள், வனந்திரங்கள் முதலியன எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது யாவரும் அறிந்ததே. காடுகள் ஒரு தேசத்தின் உஷ்ண மழை நிலையை பாதிக்கிறது. இவைகள் சரியான விகிதத்தில் இல்லாவிடில் சீதோஷ்ணம் பாதிக்கப்பட்டு, விவசாயத் துறையிலும் மற்ற துறைகளிலும் குறைபாடு ஏற்படுகிறது.

மேற்கண்ட திட்டங்கள் நன்கு பலனளிக்க சரியான விஞ்ஞான முறைப்படி காடு நடவு செய்தல் மிக அவசியம். மேலும் இத் திட்டங்களில் வெற்றி அடையலாமென்றல், மண்ணரிப்பைத் தடுத்தல், நாட்டில் கைத்தொழிலுக்குத் தேவையான மர ஜாதிகளை நடுதல், மேலும் எந்தெந்த ஜாதி மரங்கள் என்னென்ன பலனை தரக்கூடியவை, எப்பேர்ப்பட்ட நில சீதோஷ்ண நிலைகளில் நன்கு வளரக்கூடியவை, அவைகளை எந்த முறைகளில் உற்பத்திச் செய்ய முடியும் என்ற வெவ்வேறு பலா பலன்களைத் தழுவியிருப்பதால், விஞ்ஞான முறைப்படி திட்டங்களை வகுப்பது மிக முக்கியமாகும்.

மேற்படி திட்டங்களை நன்கு நடத்தி உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் ஐக்கிய நாட்டு சபை காட்டிலாக்காவின் பிரிவிலிருந்து "வரண்டபிரதேசங்களில் மரம் நடும் முறைகள்" என்னும் நூல் எழுதியுள்ளார்கள். பொதுவாக வரண்டபிரதேசங்களில் மரம் நடுதலில் கையாளப்படவேண்டிய விஞ்ஞான . முறைகளைப்பற்றி விரிவாக இந்நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இதே வகையில், நமது ராஜ்ய சீதோஷ்ண நிலைக்குத் தக்கவாறு என்னென்ன விஞ்ஞான முறைகள் கையாளத் தகுந்தவை என்பதைக் காட்ட சென்னை விவசாயத் துறை "மரம் நடும் முறைகள்" என்ற நூலைப் பிரசுரம் செய்திருக்கிறது. இந்நூல் சர்க்கார் திட்டம் அல்லாமல், தனியார் காடுகளிலும் தக்க மரங்களையும் வனந்திரங்களையும் உண்டாக்கி நம் ராஜ்யத்தில் வனச் செல்வத்தைப் பன்மடங்கு பெருக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிறு குடியானவர்களும் படித்துப் பலனடைய வேண்டி, இந்நூல் குறைந்த விலையில் (50 நயா பைசா) விநியோகிக்கப்பட்டு வருகிறது. எல்லா விவசாய டிப்போக்களிலும் விலைக்கு கிடைக்கும்.

மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழுவின் கூட்டம்

—0—

28—6—1961 அன்று, தமிழ்நாடு அரசாங்கத் தலைமை அலுவலகத்தில், மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழுவின் (State Informal Consultative Committee) கூட்டம் நடைபெற்றது. இந்தக் குழுவில் மக்கள் பிரதி நிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள். சமுதாய அபிவிருத்தித் துறையிலும், புதிய பஞ்சாயத்து ஆட்சியைச் செம்மையான முறையில் அமுல் நடத்துவதிலும், இக்குழுவினரின் அநுபவமும், அறிவாற்றலும் தக்க முறையில் பயன் படவேண்டியது மிகவும் அவசியம் என்று அரசாங்கம் கருதியதால், இக்குழு அமைக்கப்பட்டு, செயலாற்றி வருகிறது.

• முதல் அமைச்சர் **ஸ்ரீ காமராஜ்** 28—7—1961 அன்று நடந்த கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். பாராளுமன்ற உறுப்பினர்கள், ஸ்ரீ கே. டி. கே. தங்கமணி, ஸ்ரீ எம். அய்யாக்கண்ணு, ஸ்ரீ பி. சுப்பையா அம்பலம், ஸ்ரீ எஸ். ஆர். ஆறுமுகம், ஸ்ரீ என். எம். அன்வார் ஆகியோரும், சட்டசபை உறுப்பினர்கள் ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம், ஸ்ரீ பி. வேதமாணிக்கம், ஸ்ரீ ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, ஸ்ரீ டி. எம். நல்லசாமி, ஸ்ரீ எம். பி. சுப்பிரமணியம், ஸ்ரீ வி.கே. ராமசாமி முதலியார், ஸ்ரீ. எஸ். நாகராஜமோனிகார், சட்ட மேல் மன்ற உறுப்பினர்கள் ஸ்ரீ எம். சேஷாச்சாரியார், எம்.எல்.சி., ஸ்ரீ வி. கே. பழனிசாமி கவுண்டர், எம்.எல்.சி., மற்றும் மாநில சமூகநல போர்டு தலைவர் ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள், மாநில அமைச்சர்கள் ஸ்ரீ வி. ராமையா, ஸ்ரீமதி லூர்தம்மாள் சைமன் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இரு பிரச்சினைகளின்மீது விவாதம்..

தமிழ்நாட்டில் புதிய பஞ்சாயத்து ஆட்சியின் நடைமுறை வேலைகளைப் பற்றியும், சாதனைகளைப் பற்றியும் பரிசீலனை செய்து மத்திய அரசாங்க அதிகாரிகள் இருவர் சமர்ப்பித்துள்ள அறிக்கையின் மீதும், இந்த மாநிலத்தில், புதிய பஞ்சாயத்து ஆட்சியின் வேலை முறைகளைப்பற்றி தமிழ்நாடு அரசாங்கப் பிரதமச் செயலாளர் **ஸ்ரீ ஆர். ஏ. கோபால சாமி**, ஐ.சி.எஸ். அவர்கள் அளித்த அறிக்கையின் மீதும் விவாதம் நடைபெற்றது.

வேளாண்மைத் துறையில்..

கிராம உணவு உற்பத்தித் திட்டம் பற்றி விவாதிக்கப் பட்டது. [இது பற்றிய "கிராம உணவு உற்பத்தித் திட்டம்" என்ற விசேஷ வெளியீடு; 24 பக்கங்கள் கொண்டது— விவசாய அமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம் அவர்களின் முன்னுரையோடு தொடங்குவது ஒன்றை எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் அனுப்ப கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.] கிராம மக்கள் விவசாயத் திட்டத்தை உருவாக்கும் வேலையில் முழுப் பங்கு கொண்டு, திட்டமிட்ட முறையில் செயலாற்ற என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பது பற்றி விவாதம் நடந்தது.

ரசாயன உர விநியோகம் இப்பொழுது நடைபெற்று வரும் முறை, நடைமுறை விநியோகத் திட்டத்தில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அவைகளை எப்படிப்போக்க வேண்டுமென்பது பற்றியும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. ரசாயன உரங்கள் விநியோகம்பற்றிய விவரங்களை **"கிராமநலம்"** இதழில் அவ்வப்போது வெளியிடலாம் என்று ஓர் அங்கத்தினர் அபிப்பிராயம் தெரிவித்தார். பின்பு கடன் தரும் வசதிகள் பற்றிய பரிசீலனை செய்யப்பட்டது. குறைந்த காலத் தவணைக் கடன்கள், இதுவரையில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவே நடைபெற்று வருகின்றன. விவசாயக் கடன்கள் பற்றித்தான் பரிசீலனை செய்யப்பட்டது. நீண்ட காலத் தவணைக் கடன்கள் பற்றி இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. மேற்கொண்டுள்ள பெரும் பணியைச் செம்மையான முறையில் நிறைவேற்றி முடிக்கும் வகையில் பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு மிடையே சுமுகமான சூழ் நிலையும், உறவும் நிலவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், இந்த இரண்டு ஸ்தாபனங்களும் வேற்றுமையின்றி, இணைந்து பணியாற்ற வேண்டியது பற்றியும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

அளவுள்ள குடும்பம் பற்றி..

குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தைப் பொறுத்த வரையில், இந்த வேலை, கிராம அளவில், பஞ்சாயத்து ஸ்தாபனங்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் இதுவரையில் கண்டுள்ள முன்னேற்றம் மிகவும் உற்சாகத்தையும் ஊக்கத்தையுமளிப்பதாகவே உள்ளது. ஆண்களுக்குச் செய்யும் அறுவை சிகிச்சை முறை ["வாசக்டமி"] செய்ய அனுமதி பெற்று 119 மருத்துவச் சாலைகள் மாநிலத்தில் இப்பொழுது இயங்கி வருகின்றன.

எஸ். கே. டே அவர்களின் அரிய உரை..

தமிழ் நாட்டில் ஜூலை மாதக் கடைசியில் ஆறு, ஏழு தினங்கள் ஐந்தாறு மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து பஞ்சாயத்து ஆட்சியின் வேலை முறைகளை நேரில் பார்வையிட்டு வந்த மத்திய அரசாங்க சமுதாய அபிவிருத்திக் கூட்டுறவுத் துறை அமைச்சர் **ஸ்ரீ எஸ். கே. டே** அவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். சுற்றுப் பயணத்தில் ஏற்பட்ட அனுபவங்களை ஒட்டி, தன்னுடைய அபிப்பிராயங்களை அவர் விரிவாக எடுத்துரைத்தார். நாடு

பூராவும் பஞ்சாயத்து ஆட்சியின் பல்வேறுபட்ட நடைமுறை வேலைகளைப்பற்றி ஆய்ந்து அறிய, மத்திய அரசாங்கம் ஓர் ஆய்வுக் குழுவை நியமித்துள்ளது என்று அவர் அறிவித்தார். புதிய பஞ்சாயத்து ஆட்சியை ஏற்றுக் கொண்டிருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரப் பற்றற்றவர்களுக்கும் போதிய பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினர். கூட்டுறவு ஸ்தாபனங்கள்—பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்குள்ளேயே இருக்க வேண்டிய உறவு, வேலை முறைபற்றி பரிசீலனை செய்ய அகில இந்திய அடிப்படையில் ஓர் ஆய்வுக்குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது என்றும் ஸ்ரீ எஸ். கே. டே அவர்கள் குறிப்பிட்டார்.

பஞ்சாயத்துத் தலைவராக இருப்பவர் சட்டமன்ற உறுப்பினராகவோ, பாராளுமன்ற உறுப்பினராகவோ இருக்கக் கூடாது என்றும், அதற்கேற்ற வகையில் இப்பொழுதுள்ள சட்டத்தில் திருத்தங்கள் தேவையானல் செய்துகொள்ள வேண்டுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஆனல் அதே சமயத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் அநுபவமும், ஆலோசனையும், கிராமப் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்ட அபிவிருத்தி மன்றம் முதலிய ஸ்தாபனங்களுக்கு, தக்க வகையில் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. பிரதமர் நேரு அவர்களை தலைவராகக் கொண்ட 130 பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு கமிட்டி புதிய பஞ்சாயத்து ஆட்சிபற்றி பரிசீலனை செய்து, முடிவுகள் எடுக்கும் வகையில் இயங்கி வருகிறது என்றும் ஸ்ரீ எஸ். கே. டே தெரிவித்தார்.

"கிராம சபைகள்" கூட்டப்படவேண்டுமென்றும், கிராமத்தில் உள்ள வயது வந்த ஜனங்கள் அத்தனைபேரும் கிராம அபிவிருத்தி வேலைகளிலும், திட்ட சம்பந்தமான நடவடிக்கைகளிலும் நேரடிப் பங்கு எடுத்துக்கொண்டு பணிபுரியும் வகையில் இக்"கிராம சபைகள்"இயங்கவேண்டுமென்றும் ஸ்ரீ எஸ். கே. டே கருத்துத் தெரிவித்தார். கொள்கையளவில் இந்தக் கருத்து மிகவும் சிறந்தது என்றாலும், நடைமுறையில் ஏற்படக்கூடிய பல்வேறு சிக்கல்கள் ஆராயப்பட்டன.

விவசாய அபிவிருத்தி மகாநாடு

1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மூன்ருவது வாரத்தில், கலெக்டர்கள், மாவட்ட விவசாயத்துறை அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறைத் தலைவர்கள், மற்றும் பலர் ஆகியோர்களைக் கொண்ட ஒரு விசேஷ மகாநாடு, "கிராம உணவு உற்பத்தித் திட்டம்" பற்றி விவாதிப்பதற்காகக் கூட்டப்பெறும் என்ற செய்தி பிரதமச் செயலாளரின் அறிக்கையில் காணப்பட்டது.

—0—

பஞ்சாயத்துக் கும்மி

கவிரத்ன காஞ்சி அமிழ்தன்

கும்மியடி பெண்ணே கும்மியடி—தினம்
குதிச்சி குதிச்சி கும்மியடி
நம்மை யாளும் பஞ்சாயத் யூனியன்
நாளும் வளர்ந்திட கும்மியடி.

இல்லை யெனும் நிலை யில்லையடி—இங்கு
எல்லோரும் ஓர்குல மானேமடி
செல்வம் கொழித்துக் குவியுமடி—கிராமச்
சிருடைப் பஞ்சாயத் யூனியனல்.

கிராமப் பஞ்சாயத்துப் பாருங்கடி—அங்கு
காந்தியத் தத்துவம் பாடுதடி
இராம ரா சிய மானதடி—வேலை
இல்லை யெனும் தொல்லைப் போனதடி.

ஐந்தாண்டுத் திட்டங்கள் ஆமாமடி—மக்கள்
ஆனந்த வாழ்வுக்குத் தேனுமடி
நைந்தோர் சிறப்புற வாழ்வாரடி—கிராம
நலமெல்லாம் பஞ்சாயத் தாகுதடி.

உழவர் ஆனந்தப் பள்ளிசைப்பார்—நன்கு
ஊராளும் பஞ்சாயத் யூனியனல் ;
பழ மரமோ மந்த யூனியனை—நிதம்
பாடி வணங்கிட வாருங்கடி.

கைத்தொழில் பூத்துக் குலுங்குதடி—தூய
காந்தியின் எண்ணம் துலங்குதடி ;
வைத்தியம் கல்வி சிறு சேமிப்பு—அங்கு
வாழ்ந்து வளர்ந்து களிக்குதடி !

பஞ்சாயத் யூனியன் தேவையடி—நாட்டில்
பஞ்சம் பசிப்பிணி சாகுமடி ;
அஞ்சுதர் ஞ்சிடு மக்களினைப்—பெற்ற
ஆன்மீகப் பஞ்சாயத்து துண்மையடி

கட்சிப் புயலங்கு வீசாதடி—செய்யும்
கடமையில் தென்றல் மணக்குதடி ;
எச்சல் இலையோடு போராடிடும்—நிலை
என்றுமே அங்கு இருக்காதடி

ஒழுங்கு ஒற்றுமை வாழுமடி—அங்கு
உதவாச் செய்கைகள் வீழுமடி
பழுதில்லா பண்பாட்சி அவ்வாட்சி—அதைப்
பார்த்துப் புகழ்ந்திடச் சேருங்கடி

அளவோடு பிள்ளைகள் பெற்றிடுவோம்—வாழ்வில்
அருளோடு அன்பறம் உற்றிடுவோம் ;
தெளிவோடுச் சிந்தித்துச் செய்திடுவோம்—காதித்
துணிகளைச் சூடுவோம் வாருங்கடி !

வாக்காளர் கவனத்திற்கு:—

பூர்வாங்க வாக்காளர் பட்டியல்

மனு அல்லது ஆட்சேபமனு செய்வோர் கவனிக்கவேண்டியவை

தமிழ்நாட்டில் இந்த ஆண்டில் பூர்வாங்க வாக்காளர் பட்டியல், சில அசெம்பிளி தொகுதிகளுக்கு இப்பொழுது வெளியிடப்படுகிறது. இதர அசெம்பிளி தொகுதிகளுக்கு விரைவில் வெளியிடப்படும்.

அந்தந்த வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் பட்டியல் வெளியிடப்படும். அதாவது சென்னை நகராட்சி ரெவின்யூ அதிகாரி, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள், சேலம், திருச்சி, மதுரை, கோவை ஆகிய நகராட்சிகளின் கமிஷனர்கள், நீலகிரி கலெக்டரின் தனி உதவியாளர் ஆகியவர்களின் அலுவலகம் தொகுதிக்குள் இருக்குமானால் அந்த அலுவலகத்திலும், அவரது அலுவலகம் தொகுதிக்கு வெளியே இருக்குமானால், அந்த அதிகாரியால் தெரிந்தெடுக்கப்படும் இடத்திலும் பட்டியல் வெளியிடப்படும். மேற்கண்ட இடங்களில் வாக்காளர் பட்டியல் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும். அது சம்பந்தமாக அங்கு, அறிக்கையும் இருக்கும். ஒவ்வொரு யூனிட்டுக்குமான வாக்காளர் பட்டியல், அதாவது ஒவ்வொரு கிராமத்துக்கும் 2-வது வகுப்பு பஞ்சாயத்துக்கும், ஒவ்வொரு பிரதேசத்துக்கும் அல்லது வட்டாரப் பகுதிக்குமான பட்டியல்கள் அந்தந்த யூனிட்டில் வைக்கப்பட்டிருக்கும். பட்டியல் வெளியீடு பற்றிய அறிக்கையாவது முதல் வகுப்பு பஞ்சாயத்துக்கள், நகரசபைகள், கன்டோன்மெண்டுகள், டவுன்ஷிப்புகள் ஆகியவற்றின் அலுவலகங்களிலும் ஒட்டப்பட்டிருக்கும். வாக்காளர் பட்டியலின் நகல் பஞ்சாயத்து போர்டு தலைவர்களுக்கும் அனுப்பப்படும்.

ஒவ்வொரு அசெம்பிளி தொகுதி விஷயமாகவும் பட்டியல் வெளியிடப்பட்ட பின்பு, பட்டியலில் பெயர் சேர்க்கப்பட தகுதி உள்ளவர்களாக இருந்து, ஆனால் பேர் சேர்க்கப்படாமல் விடுபட்டுப் போனவர்கள், பெயரைச் சேர்க்கும்படிக் கேட்டு மனு செய்யுமாறு வேண்டப்படுகிறது. பட்டியலில் உள்ள எந்தப் பெயரை சேர்க்கும் விஷயமாகவும் அல்லது தம்மைப்பற்றி அதில் பதிந்துள்ள விவரங்கள் குறித்தும் எந்த ஓட்டர் வேண்டுமானாலும் ஆட்சேபம் தெரிவிக்கலாம். ஒரு நபர் இந்தியப் பிரஜையாக இருந்து, 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியில் 21 வயதுக்குக் குறைவில்லாமல் இருந்து, அந்தக் குறிப்பிட்ட பிரதேசத்தில் வசிப்பவராகவும், பதிவு செய்து சொள்வது சம்பந்தமாக வேறு தகுதிக் குறைவுகள் இல்லாதவராகவும் இருந்தால், வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட அவர் தகுதியுடையவர் ஆவர்.

ஒரு நபர், ஒரு தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில் மட்டுமே தம் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம். ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளின் பட்டியல்களில் அவர் பெயர் பதிவு செய்யப்படாது.

ஒரு நபர், வாக்காளர் பட்டியலில் தமது பெயரைச் சேர்ப்பது சம்பந்தமாக, அல்லது வாக்காளர் பட்டியலிலிருந்து வேறு நபர் பெயரை நீக்குவது சம்பந்தமாக பொய்யான அல்லது உண்மைக்கு மாறுபட்ட தகவல்கள் தந்திருப்பாரானால், 1950-ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 31வது பிரிவின்படி ஒரு வருஷம் வரை சிறை தண்டனையோ அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படுவதற்கு உரியவராவார்.

மனுக்களை 6-வது நமூனாவிலும், ஆட்சேபனை மனுக்களை 7-வது நமூனாவிலும், பதிந்துள்ள விவரம் சம்பந்தமான ஆட்சேபனைகளை 8-வது நமூனாவிலும் தாக்கல் செய்யவேண்டும். வாக்காளர் பதிவு அதிகாரி, கிராம அதிகாரிகள், பிர்க்கா ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், முதல் வகுப்புப் பஞ்சாயத்து, கன்டோன்மெண்ட் போர்டு, டவுன்ஷிப் ஆகியவைகளின் நிர்வாக அதிகாரிகள், நகராட்சிகளின் கமிஷனர்கள், ஆகியவர்களிடமிருந்து இந்தப் பாரங்களை எளிய கட்டணத்தில் பெறலாம். அச்சடிக்கப்பட்ட பாரங்கள் கிடைக்கவில்லையானால் டைப் செய்யப்பட்ட சைக்லோஸ்டைல் செய்யப்பட்ட அல்லது கையால் எழுதப்பட்ட பாரங்களை உபயோகிக்கலாம். பெயரை சேர்க்கக் கோரும் மனுவில் மனுதார் கையொப்பமிட்டிருக்க வேண்டும். மனுதார், பட்டியலின் எப்பகுதியில் தம் பெயர் இடம் பெற வேண்டும் என்று கேட்கிறாரோ, அப்பகுதியில் உள்ள பதிவான வாக்காளர் ஒருவரும் அதில் கையெழுத்திட வேண்டும். ஆட்சேபனை விஷயத்திலும் ஆட்சேபதார் கையொப்பமிடவேணடும். பட்டியலின் அப்பகுதியில் ஏற்கனவே பதிவான வாக்காளர் ஒருவரும் கையெழுத்துப் போடவேண்டும். ஆட்சேபதார், தொகுதியின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் வாக்காளராக இருக்கலாம். ஆனால் உடன் கையெழுத்துப் போடும் வாக்காளர், பட்டியலில் அப்பகுதி வாக்காளராக இருக்க வேண்டும். பதிவான விஷயம் குறித்து ஆட்சேபனை தெரிவிப்பதானால், அந்தப் பதிவு விஷயம் யாரைப் பொருத்ததோ அந்த நபர் மட்டுமே ஆட்சேபனை தெரிவிக்கலாம். அத்தகையவர் விஷயத்தில் வேறு ஒரு வாக்காளர் கையெழுத்துப் போடுவது அவசியமில்லை. தமது பெயர் அல்லாத வேறு ஒரு பெயர் பதிவு விவரம் குறித்து ஒரு வாக்காளர் ஆட்சேபம் தெரிவிக்க முடியாது. மனுதார், அல்லது ஆட்சேபதார், தாமே, நமூனாவில் எல்லா விஷயங்களையும் பூர்த்தி செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் விஷயமாக ஆட்சேபனை தெரிவிப்பதாக இருந்தால், அத்தகைய ஒவ்வொரு நபர் குறித்தும் 7-வது நமூனாவில் தனியாக ஆட்சேபம் தெரிவிக்க வேண்டும். மனுக்களையும் ஆட்சேபனைகளையும் வாக்காளர் பதிவு அதிகாரியிடம்

அல்லது மேலே குறிப்பிட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும். அல்லது வாக்காளர் பதிவு அதிகாரிக்கோ, அல்லது வாக்காளர் பதிவு உதவி அதிகாரிகளுக்கோ பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள்ளாக அதாவது பட்டியல் வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள்ளாக அனுப்பப்பட வேண்டும். பட்டியலில் தகப்பனார் அல்லது கணவன் பெயர் பற்றி தவறான தகவல்கள், எழுத்துப் பிழைகள், அச்சுப் பிழைகள் போன்று இருக்குமானால், கடிதம் மூலம் வாக்காளர் பதிவு அதிகாரிக்குத் தகவலை அறிவிப்பது போதுமானது.

ஒவ்வொரு மனு அல்லது ஆட்சேப மனுவையும் பற்றி, திருத்த அதிகாரி, மனுதார் அல்லது ஆட்சேப மனுதாருக்கு முன்கூட்டி தெரிவிக்கப்பட்ட இடத்தில் அந்த நாளில் விசாரணை நடத்துவார். விண்ணப்பதார் அல்லது ஆட்சேப மனு சமர்ப்பித்தவர், தமக்குரிய சாட்சியங்களுடன் அங்கு ஆஜராக வேண்டும். மனுக்கள், ஆட்சேப மனுக்கள் விஷயமாக, திருத்த அதிகாரியின் உத்திரவுகளை அனுசரித்து, இறுதியான திருத்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, வாக்காளர் பட்டியல் முடிவாக வெளியிடப்படும். அப்படி வெளியிடப்பட்டவுடனே, அந்தந்தத் தொகுதிக்கான முடிவான வாக்காளர் பட்டியல் அமுலுக்கு வந்துவிடும்.

மனு, ஆட்சேப மனு மீது வாக்காளர் பதிவு அதிகாரியின் முடிவை ஆட்சேபிப்பதானால், அந்த முடிவு அறிவிக்கப்பட்ட 15 நாட்களுக்குள் அப்பீல் அதிகாரிக்கு அப்பீல் செய்ய வேண்டும். சென்னை நகர் விஷயத்தில் சென்னை நகராட்சிக் கமிஷனரும், மற்ற இடங்களில் கலெக்டர்களும் அப்பீல் அதிகாரிகளாவார்கள். அப்பீல்தார் கையெழுத்திட்டு யதாஸ்து வடிவில் அப்பீல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; அப்பீல் அதிகாரிக்கு குறிப்பிட்ட காலத்துக்குள் சேரும்படியாக நேரடியாகக் கொடுக்க வேண்டும்; அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அப்பீல் அதிகாரியின் முடிவே இறுதியானது. ஆனால் வாக்காளர் பதிவு அதிகாரியின் முடிவை மாற்றுவதாக அது அமையுமானால், அப்பீல் தீர்ப்பு நாளிலிருந்தே அது அமுலாகத் தக்கது.

வாக்காளர் பட்டியலை, கூடுமானவரை மிகச் சரியாகத் தயாரிக்க சாத்தியமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது. ஆனால் பொது மக்களும், அரசியல் கட்சி தகுதி பெற்ற நபர்களும், குறிப்பிட்ட தேதிக்குள்ளாக மனுப் போடுவதிலும், ஆட்சேபம் தெரிவிப்பதிலும் அக்கறை கொண்டாலொழிய, மிகச் சரியான, பூரணமான வாக்காளர் பட்டியல் வெளியிடுவதென்பது கஷ்டமாகும். இப்போது தயாரிக்கப்படும் வாக்காளர் பட்டியல் 1962 பொதுத் தேர்தலுக்குப் பயன்படுத்தப்படும். ஓட்டராவதற்குத் தகுதி உள்ளவர்கள், பதிவு செய்து கொள்ள இப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டாலொழிய வரும் பொதுத் தேர்தலில், அவர்கள் வாக்கு அளிக்க இயலாமல் போகும். எனவே ஓட்டராகத் தகுதி உள்ள அனைவரும் பதிவு செய்து கொள்ள முன் வர வேண்டும். அத்தகைய ஒத்துழைப்பு கிடைக்கும் என்றே வாக்காளர் பதிவு அதிகாரிகள் எதிர் பார்க்கிறார்கள்.

எழுத்தாளர்களின் கவனத்திற்கு

பிறர் எழுதிய கதைகளையும், நாடகங்களையும், கட்டுரைகளையும் தழுவாமலும், மொழிபெயர்க்காமலும் சொந்த கற்பனை அல்லது அனுபவத்தையொட்டி, எழுதியனுப்பப்படும் சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், நாட்டுப் பாடல்கள், கிராம நலம் பற்றிய கட்டுரைகள் முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து கிராம நலத்தில் வெளியிடுவதற்காக ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. கிராம நலத்தில் பிரசுரிக்கப்பட்ட பிறகு, அவைகளில், சிறந்தவற்றிற்கு ஒவ்வொரு மாதமும் கீழ்க்கண்டவாறு சன்மானம் வழங்கப்படும் :—

சிறு கதை.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், இது 5 பக்கங்களுக்குட்பட்டு இருக்கவேண்டும்)—ரூ. 25.

ஓரங்க நாடகம்.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், 6 பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 25.

பாடல்கள்.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், இவை ஒரு பக்கத்துக்குள் அடங்கவேண்டும்)—ரூ. 10-லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு.)

கிராம வளம், காந்திய நிர்மாணத் திட்டங்கள் பற்றிய கட்டுரைகள்.—(இவை "கிராம நலத்தில்" வெளியிட்டால், இரண்டு பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 10-லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு.)

முக்கிய குறிப்பு—சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், நாட்டுப் பாடல்கள் முதலியவை பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், காந்திய தத்துவம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுவதுடன், விவசாயம் பற்றியோ சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில் தமக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களை யொட்டியோ எழுதப்பட்டவையாக இருத்தல் வேண்டும். சிறந்த கதைகளுக்கும், நாடகங்களுக்கும், நாட்டுப் பாடல்களுக்கும், கட்டுரைகளுக்கும் சன்மானமளிப்பது பற்றி ஆசிரியர் செய்யும் முடிவே இறுதியானது. "கிராம நலத்தில்" பிரசுரிக்கப்படாத கதைகள், கட்டுரைகள் முதலியவற்றைத் திருப்பி அனுப்புவது சாத்தியமல்ல. எனவே, தங்கள் எழுத்தோவியங்களின் மூலத்தை அனுப்பாமல், நகலினை மட்டும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அரசாங்க உத்தியோகச் சார்புள்ளவர்களும், இந்தப்பணியில் நேரடியாகக் கலந்துகொள்ளலாம். அரசாங்கப் பத்திரிகையான "கிராம நலத்திற்கு" எழுத, அவர்களுக்கு எந்த விதத் தடையும் இல்லை. சன்மானம் பெற அவர்களும் உரிமை உள்ளவர் ஆவர்.

சிறப்பாக, புதிய எழுத்தாளர்கள்—கிராம சேவையில் ஊறியவர்கள்—தாம் பெற்ற அனுபவங்களை மற்றவருடன் பகிர்ந்துகொள்ளும் தொண்டுள்ளமும் கலை ஆர்வமும் படைத்தவர்கள்—இந்த வாய்ப்பை உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டு, திறமை மிக்க எழுத்தோவியங்களை உடனடியாக அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர், 'கிராம நலம்',

கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9.

“ பயிற்றிப் பல கல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திடல் வேண்டும். ”

பாமரருக்கு விஞ்ஞானம்!

“ கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் ”

“ புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் ;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

சொல்லவும் கூடுவதில்லை—அவை
சொல்லுந்திறமை தமிழ்மொழிக்கில்லை ;
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசையோங்கும் ”

“ என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ !
இந்த வசையெனக் கெய்திடலாமோ ?
சென்றிடுவீர் எட்டு திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குசேர்ப்பீர் !

தந்தை யருள்வலியாலும்—இன்று
சார்ந்த புலவர் தவ வலியாலும்,
இந்தப் பெரும் பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்.”

—பாரதியார்.

பாரதியார் மனங்குளிர . . .

[உலகில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளும், ஒழுங்கான சில நியதிகளை, அதாவது, உண்மைகளை, தத்துவங்களை, அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றன. நிரந்தரமாக உள்ள இந்த உண்மைகளை அறியும் முயற்சியில், மனித சமுதாயம் பல்லாண்டுகளாக ஈடுபட்டு வந்துள்ளது. மனிதன் தன் அறிவின் கூர்மையால், பல்வேறு ஆராய்ச்சிகள் செய்து, உலகப் பொருள்களின் உண்மைகளைப் பகுத்தறியத் தொடங்கினான். அதன் காரணமாக, “ விஞ்ஞானம் ” (Science) என்ற அறிவியல் வளர்ந்து வருகிறது.

“ விஞ்ஞான சாதனைகளை மக்களின் நல்வாழ்வுக்கே பயன்படுத்த வேண்டும் என்ற கொள்கை, இப்போது உலகெங்கும் பரவி வருகிறது. உணர்ச்சி வயப்படும் சாதாரண மக்களுக்கு, விஞ்ஞான உண்மைகள் சரியாகப் புரிவதில்லை. எனவே, அவை புத்திக்கு எட்டாத அற்புத இரகசியங்களாகத் தோன்றுகின்றன. காரண காரியங்களைப் பகுத்தறியும் பழக்கமோ, படிப்போ, அனுபவமோ, அவகாசமோ, இல்லாதவர்களுக்கு இவை அதிசய மர்மங்களாகவும், விந்தை நிகழ்ச்சிகளாகவும், திகைப்பூட்டுகின்றன. ஆனால் இதைக் கண்டு யாரும் மிரள வேண்டியதில்லை. “ இயற்கை சக்திகளின் அடிப்படை உண்மைகளை உள்ளபடி தெரிந்து கொள்ள வேண்டும் ” என்ற ஆவல் ஏற்பட்டுவிட்டால், விஞ்ஞானம் சுலபமாக விளங்கிவிடும். விஞ்ஞான அறிவு மக்களிடையே பரவினால், அறியாமை விலகி, சமுதாயத்தில் தெளிவு பிறக்கும்.

நம் நாட்டிலே உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், “ விஞ்ஞானம் ” பற்றிய பல்வேறு பாடங்கள், தக்க முறையில் கற்பிக்கப் படுகின்றன. பல் கலைக் கழகங்களிலும், தேசிய விஞ்ஞான நிலையங்களிலும் அநேக ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆயினும், பள்ளிப் படிப்பும், கல்லூரி வாழ்வும் பெற வாய்ப்பில்லாத மக்கள் பலர், நம் நாட்டில், குறிப்பாகக் கிராமங்களில் வாழ்கின்றனர். அப்படிப்பட்ட மக்களுக்குப் பயன் படும் வகையில், ஒரு சில விஞ்ஞான உண்மைகளை விளக்கும் கட்டுரைகளை, எளிய முறையில், “ கிராமநலம் ” வாயிலாக வெளியிட அரசாங்கம் முடிவு செய்துள்ளனர். விஞ்ஞானத் துறையில் அனுபவம் வாய்ந்த அறிஞர்களின் எழுத்தோவியங்களை, இனிமேல், “ கிராம நலம் ” இதழ்களில் காணலாம்.

முதலாவதாக வெளிவரும் கட்டுரையின் ஆசிரியர், “ பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்களைச் ” சுவைபடக் கூறத் தொடங்குகிறார். இந்தப் புதிய “தொடர் கட்டுரை ” பற்றி, நேயர்களின் கருத்துக்களை அறிய விரும்புகிறோம்.

—ஆசிரியர்.]

ஐவகை ஆற்றல் – நீர்

[பேராசிரியர் திரு ஆர். கே. விசுவநாதன், எம்.ஏ., அண்ணுமலைப் பல்கலைக் கழகம்]

நிலம், நீர், காற்று, நெருப்பு, விசும்பு இவற்றின் ஆற்றல் உலகை ஆட்டி வைக்கின்றது. இதன் பொருட்டு ஆக்க வேலைகளும், அழிவு வேலைகளும் எப்போதும் நடைபெற்று கொண்டே இருக்கின்றன. ஆக்க வேலைகள் சந்தடி இல்லாமல் ஒழுங்காக நடை பெற்றவண்ணமே இருப்பதனல் மக்கள் இவற்றை எளிதில் உணருவதில்லை. சற்று நிதானித்தே உணர வேண்டும். எனவே மக்க ளில் பலர் இவற்றை பொருட்படுத்துவது கூட கிடையாது. காந்தியடிகளை நாம் முற்றிலும் புரிந்து கொண்டோமா? ஆனல் அழிவு வேலைகள் அப்படி இல்லை. திடீரென்று அவை ஏற்படுவதோடு பெருத்த சேதத்தையும் நொடிப்-பொழுதில் உண்டாக்கி விடும். ஹிட்லரின் செயல் மேற் கூறியதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. எனவே பூகம்பம், எரிமலை, வெள்ளம், புயல், மின்னல் போன்ற நிகழ்ச்சிகளைக் கண்டு மக்கள் திகில் அடைவதில் வியப் பொன்றும் இல்லை. மனிதனது சக்திக்கு அப்பாற்பட்டவை என்று கருதி எல்லா நாடுகளிலும் இவற்றை தெய்வங்களாக போற்றி வந்தி ருக்கிறார்கள். தமிழ் நாட்டில் உள்ள திரு ஆரூர், திரு ஆனைக்காவல், திருவண்ணுமலை, காள ஹஸ்தி, சிதம்பரம் முதலிய புண்ணிய தலங்களை அறியாதவர் ஒருவரும் இருக்கமாட்டார்கள். இவ் விடங்களில் நம் முன்னோர்கள் கட்டி வைத்துள்ள பெருங் கோயில்களில் உள்ள மூர்த்திகளைப் பற்றி ஒரு தத்துவம் உண்டு. இதை பலர் கேள்விப் பட்டிருக்கலாம். திருவாரூரில் உள்ள சிவலிங்கம் நிலத்தைக் குறிப்பதற்கும், திருவானைக்கா வில் உள்ள சிவலிங்கம் நீரைக் குறிப்பதற்கும், காள ஹஸ்தியில் உள்ள சிவலிங்கம் காற்றை குறிப்பதற்கும், திருவண்ணுமலையில் உள்ள சிவலிங்கம் நெருப்பைக் குறிப்பதற்கும், சிதம்பரம் ஆகாயததைக் குறிப்பதற்கும், வகை செய்து, இவை ஒவ்வொன்றையும் தனித்தனியே வழி படுவதற்கு நம் முன்னோர்கள் ஏற்பாடு செய்துள் ளார்கள்.

உலகின் இரகசியத்தை உணர......

தொன்று தொட்டு மனிதன் இந்த உலகின் இரகசியத்தை உணருவதற்கு மேற் கொண்டு வழிகள் இரண்டே ஆகும். அவற்றை ஞான மார்க்கம், விஞ்ஞான வழி என்று கூறுவார்கள். இரண்டின் நோக்கமும் ஒன்று தான். இதை விளக்கவும் நம் முன்னோர்கள் நமக்கு ஒரு கதையைச் சொல்லி வைத் திருக்கிறார்கள். பரமசிவனும், பார்வதியும் கைலாயத் தில் ஒரு சமயம் தங்கள் குமாரர்களான முருகப் பெருமானுக்கும், விநயகருக்கும் ஒரு போட்டி வைத் தார்களாம். போட்டியில் வெற்றி பெறுபவருக்கு ஒரு மாங்கனி அளிக்கப்படும் என்று கூறினர்கள். உடனே முருகனும், விநயகரும் போட்டி யாது என்று கேட் டார்களாம். இந்த உலகத்தை சீக்கிரத்தில் யார் முத லில் ஒரு முறை சுற்றி வருகிறார்களோ அவருக்கே இந்த மாங்கனி அளிக்கப்படும் என்று பதில் சொன்னர் சிவ பெருமான். முருகப் பெருமான் உட னேயே தன் மயில் வாகனத்தில் ஏறிக் கொண்டு உலகைச் சுற்றி வர சென்று விட்டார். விநயகரது உருவம் தான் நமக்குத் தெரியுமே? அவரால், முரு கனுடன் போட்டி எப்படி போட முடியும்? ஆனல் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனேயே பரமசிவனையும், பார்வதியையும் ஒரு முறை சுற்றி வந்து கையை நீட்டினர். பரமசிவனும் மாங்கனியை அவருக்குக் கொடுத்து விட்டார். முருகப் பெருமான் உலகைச் சுற்றி வந்து விநயகர் போட்டியில் வெற்றி கண்டதைப் பார்த்துத் திகைத்துப் போனர் என்று கதை முடிகிறது. இதன் உட் கருத்தைப் பற்றி எனக்கு ஒன்று தோன்றுகிறது. இக்கதை நம் முன் னோர்களுக்கும், தற் காலத்து விஞ்ஞானிகளுக்கு மிடை யே உள்ள வித்தியாசத்தை நன்கு எடுத்துக் காட்டு வதாக நான் கருதுகிறேன். கதையில் வரும் முருகப் பெருமானைப் போல விஞ்ஞானிகள் இந்த உலகத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளே முழு உண்மையும் புலப்படுத்தி விடும் என்று எண்ணுகிறார்கள். எது சரி எது தப்பு என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்க வேண்டாம். இப்போது நடப்பது விஞ்ஞான சகாப்தம். எனவே இந்த ஐவகை ஆற்றல்களை உடைய உலகத்தைப்பற்றிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ள விவரங்களை தமிழ் மக்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இப்போது நாம் இந்தியாவின் பல இடங்களில் வெள்ளத்தினல் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பற்றி பத் திரிக்கைகளில் படித்து வருகிறோம். தமிழ் நாட்டில் முக்கியமாக திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் நீரின் அழிவு வேலை நடைபெற்று வருகிறது. ஆறுகள் எல் லாம் கட்டுக்கடங்காமல் ஆங்காங்கே வழிந்தோடு கின்றன. இதன் விளைவாக பல இடங்களிலிருந்து கிராம மக்கள் தம்மிருப்பிடங்களை விட்டு வெளியேறி விட்டதாகத் தெரிகிறது. வெள்ள நிவாரண வேலை யும் உடனுக்குடன் நடைபெற்று வருவதைக் கேட்க நமக்கு ஒருவாறு ஆறுதல் உண்டாகிறது.

நீரின் அற்புத ஆற்றல்

நீர் ஓடினலும் தேங்கி நின்றாலும் அதற்கு மிகுந்த ஆற்றல் உண்டு. ஓடிவரும் நீரின் ஆற்றல் அதன் அளவைப் பொறுத்தும் அது ஓடி வரும்

(30-ம் பக்கம் பார்க்க)

பஞ்சாயத்து—பழமையான ஒரு சொல்

கி.மு. 327–ஆம் வருஷம் மகா அலெக்ஸாந்தர் இந்தியின் மீது படையெடுத்து வந்தான். கி.பி. 1757–ஆம் வருஷம் பிளாசி யுத்தம் நடைபெற்றது. இந்த இரண்டு வருஷங்களுக்குமிடையில், அதாவது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குள், இந்தியாவின் மீது எத்தனையோ பேர் படையெடுத்து வந்தனர். எத்தனையோ அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆயினும், இந்தியாவின் கிராம வாழ்க்கை சீர்குலையவில்லை. சமுதாயத்தின் கட்டுக்கோப்பு தளர்ச்சி 'அடையவில்லை.

அந்நிய ஆதிக்கம் வேரூன்றத் தொடங்கியது

பிளாசி யுத்தத்திற்குப் பிறகு தான், இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆதிக்கம் வேரூன்றத் தொடங்கியது. இதற்குக் காரணமாயிருந்தவன் ராபர்ட் கிளைவ். உட்பகைமைகளைக் கிளறிவிட்டும், சூழ்ச்சிகள் பல செய்தும் மேற்படி யுத்தத்தில் வெற்றிக்கொடி நாட்டிவிட்டான் இவன். "லார்ட்" (பிரபு) பட்டமும் பெற்றான்.

இங்கு ஒரு வேடிக்கையான செய்தி. பிளாசி யுத்தம் முடிந்த பிறகு, கிளைவ், தன் சொந்தத்திற்கென்று 2,34,000 பவுன் எடுத்துக்கொண்டான். பவுனுக்குப் பதினைந்து ரூபாய் என்று மதிப்புப்போட்டுப் பார்த்தாலும் இது சுமார் முப்பந்தைந்து லட்சம் ரூபாயாகிறது. இதை யாரிடமிருந்து எப்படி எடுத்துக்கொண்டான் என்பதெல்லாம் வேறு விஷயம்; அது நீண்ட கதை. இப்படி எடுத்துக்கொண்டதோடல்லாமல், தான் விரும்பியிருந்தால் இன்னும் அதிகமான தொகை எடுத்துக்கொண்டு இருக்கலாமென்றும், ஆனால், பணத்தில் தனக்கு அதிக ஆசையில்லை என்றும், இதனாலேயே இவ்வளவு சொற்பமான தொகையை எடுத்துக்கொண்டதாகவும் இவன்—கிளைவ்—பின்னர் கூறிக்கொண்டான். இ∴திருக்கட்டும்.

பிளாசி யுத்தத்திற்கு முந்தி, கிளைவ் சென்னையில் அலுவல் பார்த்து வந்தான். அப்பொழுது இவன் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளுக்கு, 3,682 ரூபாய் பெறுமான மகரகண்டி என்ற கழுத்தணி ஒன்றைச் செய்வித்து, கொடுத்தான். வரதராஜப் பெருமாள்மீது இவனுக்கு என் இவ்வளவு பக்தி ஏற்பட்டதென்பது தெரியவில்லை. ஒருகால், இந்த சிறிய காணிக்கையை முன்னாடி செலுத்தினால், பின்னாடி பெரிய தொகை கிடைக்குமென்ற நம்பிக்கை இவனுக்கு இருந்ததோ? அல்லது பிரிட்டிஷ் ஆதிக்கம் நிலைபெற வேண்டுமென்பதற்காக, தான் செய்யவிருக்கும் நேர்மையற்ற செயல்களுக்கெல்லாம் முன் கூட்டியே கழுவாய்த் தேடிக்கொள்கின்ற முறையில் இந்தக் கழுத்தணியைச் செய்வித்துப் போட்டானோ? எப்படியோ இருந்து போகட்டும். பொதுவாகச் சொல்லவேண்டுமானால், ராபர்ட் கிளைவும், வாரன் ஹேஸ்டிங்ஸும் என்னென்னவோ முறைகளை எப்படி எப்படி எல்லாமோ கையாண்டு இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் நிலைபெறுவதற்குப் பலமான அஸ்திவாரம் போட்டுவிட்டனர். அதே சமயத்தில், நூற்றுண்டுகள் கணக்கில் தொடர்ந்து நிலவிவந்த கிராம நாகரிகத்தை, கிராமக் குடியரசை நிலைபெயரச் செய்துவிட்டனர். முன்னது, அவர்கள் அறிந்து செய்தது. பின்னது, அந்தச் செயலினால் நிகழ்ந்தது.

சமுதாயத்தின் கலங்கரை விளக்கம்

பாரதச் சமுதாயமென்னும் திரு மாளிகை, ஒரு கணமும் அசையாது, ஆடாது நிலைத்திருக்க வேண்டுமானால், உலகத்து மற்ற சமுதாயங்கள் எல்லாவற்றிற்கும் வழி காட்டும் கலங்கரை விளக்கமாக அமைந்திருக்க வேண்டுமானால், அதன் அடிப்படையாக அமைந்திருக்கும் கிராமங்களைப் பலப்படுத்த வேண்டும். படிப்படியாகச் சீர்குலைந்துவரும் அவற்றைச் சீர்படுத்தி, உரிய அந்தஸ்தில் வைக்க வேண்டும். அவைகளில் புது வாழ்வு மலரச் செய்ய வேண்டும். இப்படிச் செய்ய வேண்டிய அவசியத்தை, காந்தியடிகள் நமது பாரத நாடு சுதந்திரம் பெறுவதற்கு முந்தியே, அதாவது 1947–ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் பதினைந்தாம் தேதி வரை பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த காலத்திலேயே உணர்ந்தார். தமது திருப்பணிகளில், கிராமப் புனர் நிர்மாணத்திற்கு முதலிடம் கொடுத்தார். கிராமங்களைப் புறக்கணித்துவிட்டால், பாரத நாடு என்பது இல்லாதொழியும் என்பது அவருடைய திடமான கருத்தாயிருந்தது. இந்தக் கருத்தை அவர், இந்தியத் தேசிய இயக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட காலத்திலிருந்தே அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கிறார். அவர் சொன்னவற்றில் சிலவற்றைக் கேளுங்கள் :—

"கிராம சேவையின் மூலமே சுயராஜ்யத்தை ஸ்தாபிக்க முடியும்"

* * * *

G.N.—4

"கிராமங்கள் அழிந்துவிடுமானால் இந்தியா அழிந்துவிடுவது நிச்சயம். கிராமங்களில்லாத இந்தியா, இந்தியாவே அன்று. அதனால், உலகத்திற்கு அது தெரிவிக்க வேண்டிய பல விஷயங்கள் தெரிவிக்கப்படாமலே போகும்."

* * * *

"இந்தியா எவ்வளவு பழைமையானதோ அவ்வளவு பழமையானவை அதன் கிராமங்கள். இந்தக் கிராமங்கள் நிறைந்த இந்தியாவா அந்நிய ஆதிக்கத்தினால் தோற்றுவிக்கப்பட்ட நகரங்களைக் கொண்ட இந்தியாவா, எது நமக்குத் தேவை என்பதை நாம் நிச்சயித்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது நகரங்களே மேலோங்கி வருகின்றன. இவை, கிராமங்களில் உண்டாக்கும் பொருள்களை எல்லாம் பெற்றுக்கொள்வதன் மூலம் அந்தக் கிராமங்களை வரண்டு போகும்படிச் செய்துவிடுகின்றன."

* * * *

காந்தியடிகள் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினாரென்றால், அதற்கு முக்கியமான காரணம் இந்தியாவின் பரம்பரையான கிராம நாகரிகத்தை அழிவினின்று காப்பாற்ற வேண்டுமென்பதுதான். ஏனென்றால், அந்த ஆதிக்கத்தின் விளைவாகவே நமது கிராமங்கள் சீரழிந்துகொண்டு வந்தன. அந்தச் சீரழிவினின்று அவைகளைக் காப்பாற்ற வேண்டுமானால், அவை புத்துயிரும், புது வாழ்வும் பெற வேண்டும். அவற்றின் சீரழிவுக்குக் காரணமாயிருந்த பிரிட்டிஷ் ஆதிக்கத்தை முதலில் அகற்றவேண்டும்.

அந்நிய ஆதிக்கத்தின் பயங்கர விளைவு

அந்த ஆதிக்கத்தின் கீழிருந்துகொண்டே, கிராமங்களைச் சீரழிவினின்று காப்பாற்ற முடிந்திராதா என்றால், முடிந்திராது. ஏனென்றால், எந்த ஓர் அந்நிய ஆதிக்கமும் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ள தன் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கிற நாட்டின் நாகரிகத்தை முடிந்தால் அடியோடு அழித்துவிடப் பார்க்கிறது; முடியாவிட்டால், அந்த நாகரிகத்தை அந்த நாகரிகத்திலே வளர்ந்த மக்களே புறக்கணிக்கும்படியான சூழ்நிலையை உண்டுபண்ணிக்கொண்டே இருக்கிறது; மறைமுகமான சூழ்ச்சிகள் பல செய்துகொண்டே இருக்கிறது. எந்த் ஓர் அந்நிய ஆதிக்கமும் கடைப்பிடிக்கிற பொதுவான நியதி இது. இந்த நியதியையே, இந்தியா விஷயத்தில் பிரிட்டிஷ் ஆதிக்கம் கடைப்பிடித்தது. நமது நாகரிகப் பெருக்கிற்கு ஊற்றுக்கண்களாயிருந்த கிராமங்களை நாசூக்கான முறையில் மெது மெதுவாகச் சீரழித்து வந்தது; இந்தச் சீரழிவை யாராவது தடுக்க முன்வந்தால், அவர்களைத் தன்னுடைய விரோதிகளாகக் கருதி வந்தது. அவர்களுக்கு எந்த விதமான செல்வாக்கும் இல்லாதபடி செய்து வந்தது. ஆதிக்க சக்திகள் அனுஷ்டிக்கிற பொதுவான தருமம் இது என்பதை, தீர்க்கதரிசியான காந்தியடிகள் கண்டுகொள்ளாமலிருப்பாரா? கண்டுகொண்டார். பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினார்; வெற்றி கண்டார். கிராமங்கள் நல் வாழ்வும் நன் மதிப்பும் பெறக்கூடியசூழ்நிலை உருவாயிற்று. தோன்றின கிராமப் பஞ்சாயத்துக்கள்.

சுய ஆட்சி—மனிதனை ஊக்குவிக்கும் உயரிய சக்தி

யாருக்குமே சுதந்திரம் இருந்தால்தான் தன் சக்தியை வெளிப்படுத்த முடியும்; தனக்குத் தேவையானவற்றை முடிந்த மட்டில், தானே உண்டாக்கிக்கொள்ள முடியும். அப்படி உண்டாக்கிக்கொண்டதில், தான் உபயோகித்தது போக, மிஞ்சியதை, தேவையானவர்களுக்கு முடிந்த மட்டில் வழங்க முடியும்; இவை மட்டுமல்ல. தன்னுடைய உடலும், உள்ளமும் ஆரோக்கிய நிலையில் இருப்பதற்கான வழி வகைகளைச் செய்துகொள்ள முடியும்; அன்றாடப் பழக்க வழக்கங்கள் முதல், ஆடல் பாடல்கள் வரை எல்லாவற்றிலும் தன் முன்னோர்கள் அனுசரித்த முறைகளை அப்படியே பின்பற்றுவதோ, அல்லது இடத்தையும் காலத்தையும் ஒட்டி, அவற்றில் அவசியமான மாறுதல்களைச் செய்துகொள்வதோ அவனுக்குச் சாத்தியமாகும்.

மற்றும் பிரதியொரு மனிதனுக்கும் சுதந்திரம் இருந்தால்தான் அவன், தன்னுடைய அக வாழ்க்கையையும், புற வாழ்க்கையையும் அவ்வப்பொழுது பரிசோதனைக்குட்படுத்திப் பார்த்துக்கொள்ள முடியும். இந்தப் பரிசோதனையில் சில தவறுகள் நிகழலாம். இந்தத் தவறுகளை உணரக் கூடிய சந்தர்ப்பமோ, சூழ்நிலையோ தனக்குக் கிடைக்கவில்லையென்கிறபோது, அவன், தன்னுடைய வாழ்க்கையை திருத்திக்கொள்ள முடியவில்லையே என்று சங்கடப்படுகிறான். திருந்தாமலே போகிறான். அவனிடத்தில் இருக்கும் அற்ப சொற்பமான மனிதத் தன்மையும், காலக் கிரமத்தில் இல்லாதொழிகின்றது. பிறகு அவன் யார்? மனிதனல்லவென்பது நிச்சயம். ஆகவே, பிரதியொரு மனிதனுக்கும் தன்னுடைய தவறுகளை உணரவும், தன்னைச் சீர்திருத்திக்கொள்ளவும் சுதந்திரம் இன்றியமையாததாயிருக்கிறது. இதனால்தான், தவறு செய்வதற்குக் கூட, மனிதனுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று அறிஞர்கள் கூறுவார்கள்.

பஞ்சாயத்து—சுதந்திரத்தைச் செயல்படுத்தும் ஸ்தாபனம்

இந்த உண்மை, அதாவது சுதந்திரம் அவசியமானது என்கிற உண்மை, தனி மனிதனுக்கு மட்டுமல்ல, ஒரு கிராமத்திற்கும் பொருந்தும்; ஏன்? ஒரு சமுதாயத்திற்கும்பொருந்தும்; கிராமத்தைப் பொறுத்தமட்டில், அதன் சுதந்திரத்தைச் செயல் படுத்துகின்ற ஸ்தாபனம் தான் பஞ்சாயத்து.

இங்ஙனம் சுதந்திரத்தைச் செயல்படுத்துவது என்பது. பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் சாத்தியமில்லாதிருந்தது, ஆனால், சுதந்திரமே இல்லாதிருந்தபோது, அதனைச் செயல்படுத்துவதென்பது எங்ஙனம் சாத்தியமாயிருக்கக முடியும்? இப்பொழுது நாம் சுதந்திரத்தை அடைந்திருக்கிறோம். இந்தச் சுதந்திரத்தைச் செயல்படுத்த, கிராம அளவில் பஞ்சாயத்து அமைந்திருக்கிறது.

பஞ்சாயத்து ஸ்தாபனம், நமது நாட்டுக்குப் புதிதன்று. வெகு நூற்றாண்டுகளாகவே நடைபெற்று வந்திருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பிறகுதான், இது செயல் திறனற்றதாகிவிட்டது. இந்தப் பஞ்சாயத்தை "கிராமக் குடியரசு" என்றே அழைக்கிறார் காந்தியடிகள் 1931-ஆம் வருஷம் மே மாதம், "ஹரிஜன்" பத்திரிகையில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:—

"பஞ்சாயத்து என்பது பழைமையானது. அதில் பழமை மணம் வீசுகிறது. அது ஒரு நல்ல வார்த்தை. கிராமவாசிகளால் தெரிந்தெடுக்கப்பட்ட ஐவரைக்கொண்ட ஒரு குழு என்று அந்த வார்த்தைக்கு அர்த்தம். கணக்கிலடங்காக் கிராமக் குடியரசுகளின் நிர்வாக முறைக்குப் பிரதிநிதியாயிருந்தது இந்தப் பஞ்சாயத்து"

—

தாய்மொழி மூலம் கல்வி :

கல்லூரிகளில் தமிழ் மொழிப் பயிற்சி

[தமிழ் நாட்டுக் கல்லூரிகளில், கலைப்பகுதிப் பாடங்களில் (Humanities) தமிழைப் பயிற்சி மொழியாக்கவேண்டு மென்று முடிவு செய்து, அரசாங்கம் ஓர் அறிக்கையை 1959-ஆம் ஆண்டில் விடுத்தது. இதனைச் செயல்படுத்துவதற்குத் திட்டங்களைத் தீட்டவும் அறிவுரை கூறவும் கல்லூரித் தமிழ்க் குழுவினை அமைத்தது. கோவை அரசினர்க் கல்லூரியை முன்னோடிக் கல்லூரியாக (Pilot College) ஏற்று, 1960-ஆம் ஆண்டிலிருந்து, வரலாறு, அரசியல், பொருளாதாரம், உளவியல், நிலவியல் முதலிய பாடங்கள் தமிழில் புகட்டப்பட்டு வருகின்றன.

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குப் போதனுமொழியை மாற்றும்போது, சில சிக்கல்கள் ஏற்படும். அந்தச் சிக்கல்களைப் பற்றி ஒன்றாகக் கூடிச் சிந்தித்து முடிவும் தீர்வும் காண்பதற்கு வாய்ப்பாகவே, பயிற்சிகள் அவசியமாகின்றன. இத்தகைய புதுமுகப் பயிற்சி முதன்முறையாக 1960-ஆம் ஆண்டு மே மாதத்தில், கோவை அரசினர் கல்லூரியில் ஒன்று நடந்தது. அங்கு, அன்று பயிற்சிபெற்றவர்களே, கோவை அரசினர் கல்லூரியில் பாடங்களைத் தமிழில் புகட்டி வருகின்றனர். இவ்வாண்டு 1961-ஆம் ஆண்டு மே மாதத்தில் கோவை பி. எஸ். ஜி. பொறியியற் கல்லூரியில் இரண்டாவது புதுமுகப் பயிற்சி நடைபெற்றது. அதைப்பற்றி கல்லூரித் தமிழ்க் குழுவின் தலைவர் திரு ஜி. ஆர். தாமோதரன் அவர்களின் குறிப்பின் சாரத்தை கீழே வெளியிட்டுள்ளோம்.

ஆசிரியர்.]

புதுமுகப் பயிற்சியில் தமிழ்ப் போதனு முறைக்கென, இரண்டாவது புதுமுகப் பயிற்சி வகுப்பும், ஆங்கிலத்திற்கு முதலாவது புதுமுகப் பயிற்சியும் நடைபெற்றன. தமிழில் 74 ஆசிரியர்களும், ஆங்கிலத்தில் 24 ஆசிரியர்களும் பயின்றனர். தமிழ்ப் புதுமுகப் பயிற்சி வகுப்பில் அரசியல், பொருளாதாரம் வாணிகவியல், உளவியல், வரலாறு, பௌதிகம், வேதியல், உயிரியல், புள்ளியியல் வானவியல், ஆகிய துறைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், பங்குபெற்றுத் தனித்தனியே தங்கள் துறைகள்பற்றியும், கூடியும் ஆராய்ந்தனர். அவர்கள் 22 நாட்களும் ஆங்கிலப் பகுதியினர் 15 நாட்களும் இக் கூட்டுப் பயிற்சியினைச் செம்மையாகச் செய்துள்ளனர்.

கை கண்ட பலன்

கருத்தரங்குகளும், பல மாதிரி வகுப்புக்களும் நடைபெற்றன. தமிழில் பேசமுடியாது என்ற எண்ணத்தோடு வந்தவர்கள்கூட, இப்பயிற்சியின் காரணமாக, மாதிரி வகுப்புக்களில் சிறப்பான முறையில், தமது பாடக் கருத்துக்களைத் தெளிவாக வுணர்த்தியுள்ளனர்.

என்ன செய்தனர் ?

சென்ற ஆண்டில் பல துறைகளுக்கும் கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்கிக் கல்லூரித் தமிழ்க் குழு வெளியிட்டுள்ளது. அவை முடிவானதில்லை யென்பதையும், சில இடங்களில் மாற்றங்கள் தேவை யென்பதையும் இன்னும் பல சொற்களைச் சேர்க்க வேண்டும் என்பதனையும், யாவரும் அறிந்ததே. பயிற்சி பெற்றோர், கலைச் சொற்களில் சில மாற்றங்களைச் செய்துள்ளனர். கலைச்சொல் அகராதியில் அடுத்த பதிப்பில் அவை சேர்க்கப்படும்.

மற்றொரு சிக்கல்

கலைச்சொல் ஆக்கத்தில் மற்றும் ஒரு இடர்ப்பாடும் உண்டு. பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றில் ஒரே ஆங்கிலச்சொல் இருக்கும். ஆனால், வெவ்வேறு பொருளில் பயன்படும். எனவே அதனை மனத்தில் கொண்டும், கலைச்சொல் அகராதியில், காணப்படும் கலைச்சொற்களின் பொருத்தத்தினை ஆராய்ந்தும், முடிவு கண்டுள்ளனர்.

உணர்ந்த பொருளை உணர்த்துவது எப்படி ?

ஒவ்வொரு துறையிலும் பயின்ற ஆசிரியர்கள் ஒன்றுகூடி எண்ணிப் பல புதுச் சொற்களைக் கண்டுள்ளனர். தமிழில் பாடத்தைப் புகட்டும்போதே பொருத்தமான பல கலைச்சொற்கள் தாமாகவே வருவதையும் உணர்ந்தனர். அவற்றைச் சேகரித்தும் வைத்துள்ளனர்.

ஒவ்வொரு துறையிலும் நுட்பமான கருத்துக்களைத் (Concepts) தமிழில் எவ்வாறு உணர்த்துவது என்பதுபற்றியும் தெளிவாக ஆராய்ந்துள்ளனர். அவைகள் கையேடாக வெளியிடப்படும். இஃது எல்லோர்க்கும் பயன்படும். இத்தகைய பயிற்சி வகுப்பில் ஈடுபடாதவர்க்கும் அஃது ஒரு நல்ல துணையாக அமையும்.

மாணவரை யெவ்வாறு ஈடுபடச் செய்வது ?

தமிழில் போதிக்கும் போது மாணவர்களின், திறமைகளையும் சிந்தனைகளையும் எவ்வாறு வளர்க்கலாம் என்று எண்ண இப்பயிற்சி வகுப்பு நல்ல

வாய்ப்பாகும். அங்கு எவ்வாறு அவர்களை ஈடுபடச் செய்யலாம் என்பதனை இங்கு அவர்களே செயல் படுத்திக் காட்டினர். பாடங்களை ஒட்டிய கருத்துக் களைத் திரட்டியும், பாடத்திற்குரிய நூல்களின் பட்டி யலைத் தொகுத்தும், மொழிபெயர்ப்புப் பயிற்சியில் பயின்றும், ஆங்கில வினாத்தாள்களைத் தமிழில் பெயர்த்தும், புது வினாத் தாள்கள் தமிழில் தயார் செய்தும் பயின்றுள்ளனர். இந்த முறைகளில் மாண வர்களை ஈடுபடச் செய்தால், அவர்களுடைய சிந்தனை ஆற்றலும் செயல் திறமையும் நன்றாக வளரும் என்பது உண்மை.

தமிழ் மரபைப் பற்றியும் எண்ணினர்

தமிழ் மொழியில் பெயர்க்கும் பொழுது தமிழ் மொழி யின் அமைப்பு, சொற்றொடர் அமைப்பும்முறை ஆகியன பற்றியும் அறிவதுநல்லது. இது பற்றி உயர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் அவ்வப்போது பயன் தரத்தக்க கருத்துக்களைவிளக்கியுள்ளார்.

எனது நம்பிக்கை

இவ்வாறு ஒன்று கூடிப் பழகியதால் கலைச் சொற்க ளோடு, அவர்களுக்கு நெருங்கிய பயிற்சி ஏற்பட்டுள்ளது. இப்பயிற்சி மேலும், மேலும் ஆசிரியர்கள் சிந்தனையைத் தூண்டும் என்றும் நம்புகிறேன். பயிற்சி பெற்ற ஆசிரி யர்கள் பணியாற்றும் கல்லூரிகளில் தமிழில் போதனா முறை இருக்கலாம், அல்லது இல்லாமல் போகலாம். ஆனால் இங்கு அவர்கள் பெற்ற பயிற்சியை மாணவர் கழகங்களின் மூலம் வளர்த்து வருவார்கள் என்றும் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்து அவற்றின் மூலமும் வளர்த்து வருவார்கள் என்றும், நம்பிக்கை ஏற்பட்டு உள்ளது.

அநுபவ உண்மை

சென்ற ஆண்டு அரசினர் கலைக் கல்லூரியில் கலையியல் பாடங்களைத் தமிழில் புகட்டத் தொடங்கினர். ஓராண்டு முடிந்தது. அவ்வகுப்புக்களை நடத்திய ஆசிரியர்கள் பல நல்ல அனுபவங்களைக் கூறியுள்ளனர். ஒரு மணி யில் நடத்தும் பாடத்தினை அரை மணியில் நடத்திவிட முடிகின்றது எனவும் தமிழாக இருப்பதனால் மாணவர்கள் சந்தேகங்களை வகுப்பிலேயே கேட்டுத் தெரிந்து கொள்ளுகின்றனர் என்றும், குறிப்பேடுகள் (Notes) கொடுத்து மனப்பாடம் செய் என்று சொல்ல வேண்டிய தொல்லைதொலைந்தது என்றும் கூறுகின்றனர். எனவே தாய்மொழி போதனா மொழியாக இருந்தால் மாணவர்க ளதுஎண்ணும் ஆற்றல் மிகுதியாகி, நல்ல கல்வி வளர்ச்சி ஏற்படும் என்பது உண்மை.

ஆங்கிலம் உலகமொழி

ஆங்கில மொழி உலக மொழியாக உள்ளது. உலக மக்களோடும், உலகப் பேரறிஞர்களோடும் தொடர்பு கொள்ள ஆங்கில மொழி அறிவு மிகவும் அவசியமாகும். இந்த உண்மையை யாரும் மறுக்க முடியாது. யாரும் மறுக்கவும் இல்லை.

எனவே ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குப் போதனா மொழியை மாற்றினால் மாணவர்க்கு ஆங்கிலப் மொழிப் பயிற்சி குறைந்துவிடும் என்ற குறையைக் கூறி வருகின்றனர். அக்குறையைப் போக்க ஆங்கில ஆசிரியர் களைக் கூட்டிச் சிந்திக்கச் செய்ய வேண்டும் என்று கல்லூரித் தமிழ்க் குழு எண்ணி அரசாங்கத்திற்கு எழுதி யது. அதன் விளைவாகவே இங்கு முதலாம் ஆங்கிலப் புது முகப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இத்தகைய பயிற்சிகள் ஆண்டுதோறும் தொடர்ந்து நடைபெறும் என்பதும், இதில் காணும் உண்மைகளை ஆராய்ச்சி செய்ய வகுப்புக்கள் ஏற்படும் என்பதும், நம் கல்வி அமைச்சர் அவர்கள் கூறியதாகும்.

மதிப்பீடு முறைகள்

நாம் இதுவரை மாணவர்களது திறமையை மதிப்பீடு செய்தோம். இனி எவ்வாறெல்லாம் செய்யலாம் என் பது பற்றியும் பயிற்சியில் ஆராய்ந்துள்ளனர்.

பயன்

இவ்வாறு நாம் முயன்றால், சிந்தனையாற்றல் மிகுவது பயிற்சி மொழி தமிழாக அமைவதாலும், உலக மக்க ளோடு தொடர்புகொண்டு முன்னேறுவது ஆங்கில மொழி யாலும் ஏற்படும்.

இந்த இரண்டு பயிற்சிகளினால் விளைந்த பயன் பெரிது, குறிப்பாக, தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்தை வெற்றி கரமாக நடத்திக்காட்ட, இவை உறுதுணையாக அமைந் தன என்று துணிந்து கூறலாம்.

—o—

அநுபவ அறிவுரைகள் :

மாவட்ட நிர்வாக அமைப்பைச் சீரமைப்பது

சமுதாய அபிவிருத்தி மகாநாட்டில் ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரி உரை

பஞ்சாயத்து ராஜ்யத்தின் தன்மைக்குப் பொருந்தும் படியாக ஜில்லா நிர்வாக அமைப்பு முழுவதும் சீரமைக் கப்பட வேண்டுமென்பதாக, திட்டக் கமிஷனின் முன்னுளைய துணைத் தலைவர் **ஸ்ரீ வி. டி. கிருஷ்ண மாச்சாரி**, ஹைதராபாத்தில் ஜூலை மாதத்தில் நடை பெற்ற சமுதாய அபிவிருத்தி வருடாந்திர மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார். இம்மகா நாட்டில் எல்லா ராஜ்யங்களின் அபிவிருத்திக் கமிஷனர் களும் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஸ்தாபனங்கள்

ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரி பேசுகையில், ஜில்லா ஸ்தாப னங்கள் ஒருங்கிணைப்பாக வளர்ச்சியடையவில்லையென்றும் ஒரே துறையிலேயே பல ஸ்தாபனங்கள் வேலை செய்து கொண்டு வருகின்றனவென்றும் அதனால் ஒரு வேலையே மறுபடியும் மறுபடியும் நடைபெறுவதோடு, முயற்சியும் வீணாகிற தென்றும் கூறினார். ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒரு ஜில்லா தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கு சிறந்த முறையில் ஸ்தாபன அமைப்புப் பாணி உருவாக்கப்படவேண்டு மென்றும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் பிற பகுதி களில் பஞ்சாயத்து ராஜ்யம் அமையும்போது, இந்த அமைப்புப் பாணியை அங்கும் மேற்கொள்ளப்படலா மென்றும் அவர் கூறினார்.

“விஞ்ஞான ரீதியான விவசாய முறை பரவுவதற்கு, இரண்டு விஷயங்கள் மிகவும் அவசியமானவை, முதலாவ தாக, விவசாயிகளுக்கு வேண்டிய விதைகளையும், ரசாயன உரங்களையும் பிற உதவிகளையும் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடு ராஜ்ய மட்டத்திலிருந்து கிராம மட்டம் வரையி லிருக்கவேண்டும்; இரண்டாவதாக, இந்த வசதிக ளெல்லாம் சரியாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்ப தைத் தெரிந்துகொள்ள விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட ஸ்தாபனங்கள் இருக்கவேண்டியது முக்கியம். இந்த விஷயத்தில் நமக்குப் பொருத்த மானது பஞ்சாயத்து ராஜ்யம்தானென்றும், அதன் கீழ் கிராமப்புறங்களில் அமைதியான மாற்றத்தைக் கொண்டு வந்து நமது லட்சியத்தை நிறைவேற்ற முடியுமென்று தாம் நிச்சயமாக நம்புவதாகவும்” அவர் கூறினார்.

பஞ்சாயத்து ராஜ்யத் திட்டம் 7 கோடி குடும்பங்களின் மனப்பான்மையிலும் எண்ணத்திலும் மாறுதல் ஏற் படுத்துவதற்குரிய, புரட்சிகரமான திட்டமென்றும், அத் தகைய புதிய சமுதாயத்தை அமைக்கும் பணியில் மக்களை ஈடுபடச்செய்யவேண்டுமென்றும், ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரி கேட்டுக்கொண்டார்.

வேளாண்மைத் தொழில் வளர....

“விளைபொருள் உற்பத்தியைப் பெருக்குவதன் மூல மாகத்தான் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை வெற்றி பெறச் செய்ய முடியும். ஆகவே, நிர்வாகம், தொழில் நுட்பம், சப்ளை, ஏற்பாடு ஆகிய எல்லா துறை களிலும் இடைவிடாமல் முயற்சியை மேற்கொண்டால் பத்து ஆண்டுகளில் விளை பொருள் உற்பத்தியை, இரட் டிக்க வேண்டுமென்றுள்ள லட்சியம் ஈடேறும்.”

“பெரிய-நடுத்தர-சிறிய அணைத் திட்டங்கள், காடு வளர்த்தல், மண்ணரிப்புத் தடுப்பு, வரம்பு கட்டுதல், திருந்திய விதைகளைத் தயாரித்து வினியோகித்தல் ஆகிய மூன்று முக்கிய வேலைகளும் போதுமான அளவு திறமை யாக நடைபெறுததால்தான் சமுதாய அபிவிருத்தித் திட்டம் சமன ரீதியாக முன்னேறவில்லை. பாசனத் திட்டங்களின் மூலம் பயன்பெறும் விவசாயிகளைக் கொண்டே வயல் கால்வாய்களையும் அமைத்துப் பரா மரிக்கச் செய்ய வேண்டும்”.

சமுதாய அபிவிருத்தித் திட்டங்களும், பிற அபிவிருத்தி திட்டங்களும் பல்வேறு ஸ்தாபனங்களின் மூலமாக நிறை வேற்றப்படுகின்றனவென்றும், இவையெல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு ஒருங்கிணைப்பாகக் கவனிக்கப்படவேண்டு மென்றும் அவர் கூறினார்.

“கிராமம், அபிவிருத்தித் தொகுதி, ஜில்லா ஆகிய கட்டங்களிலுள்ள அதிகாரிகளுக்கு விசேஷப் பொறுப்பு இருக்கிறதென்றும், அவை திட்டவட்டமாக நிர்ணயிக்கப் பட்டு அமுல்செய்யப்படவேண்டுமென்றும், சமுதாய அபி விருத்தித் திட்டத்தை முன் நின்று நடத்தும் பொறுப்பு தொகுதி சமிதிகள், ஜில்லா பரிஷத் அங்கத்தினர்களின் பொறுப்பாகும்” என்றும்,

பஞ்சாயத்து, கூட்டுறவு சங்கங்களின் காரியதரிசிகளுக் கும் அங்கத்தினர்களுக்கும் பயிற்சியளிக்கப்படவேண்டியது மிகவும் அவசியம் என்றும் பொருளாதார ரீதியில் பின் தங்கிய குடும்பங்களுக்கு அபிவிருத்தித் திட்ட நன்மைகள் பூரணமாகக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்” என்றும் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரி வலியுறுத்தினார்.

“பஞ்சாயத்து ராஜ்ய ஸ்தாபனங்களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்குமிடையேயான உறவு திட்டவட்டமாக நிர்ண யிக்கப்படவேண்டுமென்றும், மத்திய பாங்குகளும் உச்ச ஸ்தான பாங்குகளும் கூட்டுறவு இயக்கத்தின் நிதி அம்சங்களைக் கவனித்துவர வேண்டுமென்றும், ஆனால், இச் சங்கங்களை, வளர்க்கும் பொறுப்பு பஞ்சாயத்து சமிதி களுடையதும் ஜில்லாபரிஷத்துகளுடையதுமாகு”மென்றும் அவர் கூறினார்.

கலைவளர்ச்சி—தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் சீரிய பணிகள்

நட்டுவாங்கப் பயிற்சிக்கான உபகாரச் சம்பளம்

பரத நாட்டியம் கற்றுகொள்ள விரும்புகிறவர்கள் பெருகிவரும் இக் காலத்தில், நல்ல சம்பிரதாய முறையில் பயிற்சி கொடுக்கக் கூடிய நடன ஆசிரியர்கள் குறைவாய் இருப்பதால், அக் குறையை ஒருவாறு தீர்ப்பதற்காக, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் நடனப் பயிற்சிக்கு உதவிச் சம்பளம் கொடுப்பதற்காக ஒரு திட்டம் வகுத்திருக்கிறது, அதன்படி அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையங்களில் போதுமான நட்டுவாங்கப் பயிற்சி பெற்றுக் கொள்வதற்காக, அடிப்படையில் திடமான ஸ்வர ஞானமும் லய ஞானமும் சேர்ந்த நல்ல சங்கீத ஞானம் கொண்டுள்ள நான்கு நபர்களைப் பரீட்சை செய்து தேர்ந்தெடுத்திருக்கிறது. அவர்கள் ஒவ்வொருவரும் நான்கு வருஷம் நட்டுவாங்கப் பயிற்சி பெற்றுக்கொள்ளவேண்டும். பயிற்சி பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு நபருக்கும் ஜீவனத்துக்காக ரூ. 75-ம், ஆசிரியரின் ஊதியத்துக்காக ரூ. 50-ம், ஆக ரூ. 125 மாதா மாதம் உபகாரச் சம்பளமாக நான்கு வருஷங்களுக்குக் கொடுக்கப்படும். பயிற்சி மூலம் பரத நாட்டியத்தில் போதிய லட்சண, லக்ஷிய ஞானம் பெறுவதற்கான பாடத் திட்டமும் அமைக்கப்பட்டிருக்கிறது. பயிற்சி பெற்ற பிறகு ஒவ்வொருவரும் குறைந்தது ஐந்து வருஷங்களுக்காவது நடன ஆசிரியர்—நட்டுவனராகத் தொழில் செய்ய வேண்டும். இப்படி உபகாரச் சம்பளத்துக்காக பின்கண்ட மாணவர்களும், அவர்கள் பயிற்சிபெற வேண்டிய நிலையங்களும், ஆசிரியர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கல்யாணசுந்தர ராமய்யா, திருப்பாம்புறம்—பாலசரஸ்வதியின் பரத நாட்டியக் கல்லூரி.

திரு. டி. ஆர். தேவநாதன், (திருக்கடையூர்)—கலாக்ஷேத்திரா.

திரு. சி. எஸ். சுவாமிநாதன், (சென்னை)—திரு. வி. பி. ராமய்யா பிள்ளை.

திரு. எஸ். ராமசாமி, (திருவீழிமழலை)—பந்தநல்லூர் சொக்கலிங்கம் பிள்ளையை ஆசிரியராகக் கொண்ட இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் பைன் ஆர்ட்ஸ்.

—o—

அகதி வித்வான்களுக்கு ஜீவன உதவி மானியம்

தமிழ் நாடு சங்கீத நாடக சங்கம், வயோதிக அகதி வித்வான்களுக்கு ஜீவன உதவி மானியம் அளிக்கும் திட்டத்தின்படி, 1961–62 வருஷத்திற்கு பின்கண்ட 30 வித்வான்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் மாதா மாதம் ரூ. 50 கொடுக்கப்படும். அவர்களின் வயது பிராக்கட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நாடக நடிகர்கள்.—சி. ஜி. நம்மாள்வார் ரெட்டி, சென்னை (78), ஸ்ரீமதி பி. ஜெயலக்ஷ்மி, மதுரை (52); எம். ராமசாமி முதலியார், சேலம் (75); ஏ. சுந்தரம் எல்லைப்பட்டி, மதுரை ஜில்லா (69); டி. எஸ். குறுநலலிங்கம் பிள்ளை, அச்சம்பட்டி, மதுரை ஜில்லா (63); ராஜா ஷண்முக தாஸ், மதுரை (70); எம். ஆர். பாலகிருஷ்ண நாயுடு, நெம்மேலி, செங்கல்பட்டு ஜில்லா (73); ஜோகர் ராமுடு, சென்னை (66); ஐ. கிருஷ்ணமாச்சாரி சென்னை (66); சி. கே. கோபால் பிள்ளை, சென்னை (62); ஸ்ரீமதி சொர்ணத்தம்பாள், மதுரை (56).

நாட்டியக் கலைஞர்கள்.—ஸ்ரீமதி முத்துரத்னம்பாள், திருநெல்வேலி டவுன் (68); என். எம். முத்துசாமி நட்டுவனர், பிரான்மலை, ராமனாதபுரம் ஜில்லா (65); ஸ்ரீமதி ஆண்டாளம்மாள், தஞ்சாவூர் (66); ஸ்ரீமதி செய்யூர் ஜெகதாம்பாள், காஞ்சீபுரம் (78).

சங்கீத வித்வான்கள்.—வி. குருசாமி பிள்ளை, நாதஸ்வரம், பந்தநல்லூர் (86); கே. வி. ராமசாமி அய்யர், வயலின், தாராபுரம் (69); ஆபத்சஹாய சாஸ்திரிகள், வயலின், சென்னை (71); எஸ். ரத்னவேலு பிள்ளை, மிருதங்கம், மாயூரம் (66); சேதுராஜ பிள்ளை, தவில், ராமனாதபுரம் (67); டி. எஸ். ரங்கம்மாள், வாய்ப்பாட்டு, மன்னார்குடி (68); திருவீழிமிழலை கோபால் பிள்ளை, நாதஸ்வரம், திருவீழிமிழலை (84); சின்னையா என்ற ராமசாமி பிள்ளை, தவில், திருக்கடையூர் (61); சி. எம். ராஜரத்ன முதலியார், வயலின், செய்யூர் (64); திருவாரூர் சுப்பையர், வயலின், மன்னார்குடி (69); எஸ். ஜி. காசி அய்யர், சங்கீதம், சென்னை (62); கே. சேத்தூர் சுந்தரேச பட்டர், வயலின், மதுரை (68); ஏ. கே. சுப்பையர், ஜலதரங்கம், திருப்பூர் (80); டி. வி. பார்த்தசாரதி நாயுடு, கஞ்சிரா, சென்னை (65); கே. பாலகிருஷ்ண பிள்ளை, நாதஸ்வரம், கோவில்பட்டி (68).

அகதி வித்வான்களுக்கு ஜீவன உதவி மானியம் அளிக்கும் இந்த திட்டத்தின்படி உதவி பெற்ற நபர்கள் முதல் வருஷமான 1956–57-ல், 12-ம், 2-ம் வருஷம் 15-ம், 3-ம் வருஷம், 17-ம், 4-வது, 5-வது வருஷங்களில் 25-ம், 6-ம் வருஷத்தில் 30-ம் ஆக வருடா வருடம் வந்திருக்கிறார்கள்.

கேள்வியும் பதிலும்

கேள்வி 1.—ஒரு பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்யும் ஆசிரியரை மற்றொரு பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்ற முடியுமா? அம் மாற்றத்துக்குரிய அதிகாரம் யாரிடம் அளிக்கப்பட்டுள்ளது? அதற்கான சட்ட திட்டங்கள் என்ன?

[எஸ். கிருஷ்ணன், ஆசிரியர், கரையாம்பட்டி, போடி வட்டாரம்]

பதில்.—தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 60 (2) பிரிவின்படி, ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்தில் வேலை செய்யும் எந்த ஒரு அதிகாரியையும், அல்லது பணியாளரையும் (பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப்பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் உள்பட), வேறு ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்றம் அல்லது நகர மன்றத்துக்கு (Municipality) மாற்ற அரசாங்கம் அதிகாரம் பெற்றிருக்கிறது. அத்தகைய மாற்றத்தை (Transfer) செய்வதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன், அல்லது நகர மன்றம் (Municipality) கலந்தாலோசிக்கப்படும். இந்த மாற்றங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள், தமிழ்நாடு கிராம அபிவிருத்திக் கமிஷனர், மாவட்டக் கலெக்டர் ஆகியோரிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அரசாங்கப் பிரதம செயலாளரின் ஆளுகைக்கும், திருத்தத்துக்கும் உட்பட்டு, கீழ்க்கண்டவாறு இந்த அதிகாரங்களை அவர்கள் உபயோகிப்பார்கள்.

கிராம அபிவிருத்திக் கமிஷனர்.—எந்த ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்தில் வேலை செய்யும் அதிகாரி அல்லது பணியாளரையும், மாநிலத்தின் வேறு எந்த ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்றம் அல்லது நகர மன்றத்துக்கும் மாற்றுகின்ற அதிகாரம் பெற்றிருக்கிறார்.

மாவட்டக் கலெக்டர்.—எந்த ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்தில் வேலை செய்யும் அதிகாரி அல்லது பணியாளரையும், சம்பந்தப்பட்ட மாவட்டத்துக்குள், வேறு எந்த ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்றம் அல்லது நகர மன்றத்துக்கும் மாற்றுகின்ற அதிகாரம் பெற்றிருக்கிறார்.

கேள்வி 2.—1961, ஏப்ரல் 'கிராம நல' இதழ் 'கேள்வி-பதில்" பகுதியில், 'முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு மட்டும் திருத்தச் சம்பள விகிதத்தை அனுமதித்து அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளதாகக் கூறியுள்ளீர்கள்? ஆனால், நிர்வாக அதிகாரியுள்ள இரண்டாம் வகுப்பு பஞ்சாயத்துக்களில், 1960-ஜூன் முதற்கொண்டு எந்த விகிதத்தில் சிப்பந்திகளுக்கு சம்பளப் பட்டுவாடா செய்யலாம்? புதிய சம்பள விகிதம் இந்தச் சிப்பந்திகளுக்குப் பொருந்துமா?

[எம் வேலுச்சாமி, உறுப்பினர், கணியூர் ஊராட்சி மன்றம், கோவை மாவட்டம்.]

பதில்.—கிராமப் பஞ்சாயத்துக்கள் (ஆ) இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுடைய சம்பள விகிதத் திருத்தத்தைப் பற்றி எந்த ஒரு ஆணையும் பிறப்பிப்பது அவசியம் என்று அரசாங்கம் கருதவில்லை. (இது சம்பந்தமாக 1961ஆ ஜூலை 14-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 106204-ஐப் பார்க்க.)

மேலும், இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்களில் பெரும்பாலும் பகுதி நேர அடிப்படையில் (Part-Time Basis) வேலை செய்யும் ஊழியர்கள் எந்த ஒரு திருத்தச் சம்பள விகிதத்திலும்—ஊதியம் பெறத்தக்கவர்கள் அல்லர்.

பஞ்சாயத்து நிர்வாகத்தின் புதிய அமைப்பில், அதாவது, 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் அமுலில் இருக்கும் பகுதிகளில், நகரப் பஞ்சாயத்துக்களில் மட்டுமே தான் **நிர்வாக அதிகாரிகள்** அமர்த்தப்படுவார்கள்.

சாதனைக் குறிப்புகள் :

அனைவரின் கவனத்தையும் கவர்ந்து நிற்கும் ஆமூர்

மூர்த்தி சிறிது-கீர்த்தி பெரிது

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஆமூர் ஒரு சிறிய கிராமம். கிராமம் சிறிதே தவிர அதனுடைய கீர்த்தி பெரிது. 1955-ம் ஆண்டிலேயே இந்தக் கிராமம் 'மாதிரிக் கிராமமாகத்' தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆயிரம் ரூபாய் பரிசாகவும் பாராட்டுப் பத்திரத்தையும் பிரதமர் நேரு அவர்களிடமிருந்து பெற்ற தனிப் பெருமை இந்தச் சின்னஞ் சிறு ஊருக்கு உண்டு.

தலைவரின் சலியாத உழைப்பு

இந்த ஊரின் சிறப்புக்கு காரணம், இந்த ஊரின் பஞ்சாயத்துத் தலைவர் ஸ்ரீ தியாகராஜ பிள்ளை அவர்களின் சலியாத உழைப்பும், நம்பிக்கையும்தான். இந்த ஊர் அடைந்துள்ள சாதனைகள், வெற்றிகள் எல்லாம் அவர் உழைப்பில், அறிவால் ஆக்கத்தினால் உருவானவையே.

கிராமத்திற்கு குடி தண்ணீர் வசதியை ஊர்ப் பஞ்சாயத்து செய்து தந்திருக்கிறது. 12,000 ரூபாய் செலவில் குடித் தண்ணீர் டாங்க் கட்டியுள்ளார்கள். ஊரில் ஆறு இடங்களில் குடி தண்ணீர்க்குழாய் போட்டிருக்கிறார்கள்.

"பகடு நடந்த கூழ் பல்லோரோடும் உண்க"

வேளாண்மைத் துறையில் சிறந்த முன்னேற்றங்களை அடைந்துள்ளது இந்த ஊர். கூட்டுறவுச் சங்கங்களின் மூலம், பொறுக்கு விதைகள், ரசாயன உரங்கள், பூச்சி நாசினிகளெல்லாம் கிராம மக்களுக்கு குறைந்த விலையில் அளிக்கப்படுகின்றன. கூட்டுறவு கடன் பாங்க் ஒன்று இயங்கி வருகிறது. கூட்டுறவு முறையில் பால் வழங்கும் நிறுவனம் ஒன்று திறம்பட நடந்து வருகிறது.

அறிவொளி பரவ..

பஞ்சாயத்தால் நடத்தப்பெறும் செய்தி நிலையம் உருப்படியான வேலைகளைச் செய்து வருகிறது. கிராம மக்களுக்கு தேவையான செய்திகளை அளிக்கும் ஸ்தாபனமாக இந்த நிலையம் செம்மையுடன் நடைபெற்று வருகிறது. அறிவொளி பரப்பும் திருப்பணி அழகாக நடைபெற்று வருகிறது ஆமூரில்.

பொதுச் சுகாதாரம் கண்ணைபோல் பாதுகாக்கப்படுகிறது. பொதுக் கக்கூசுகள் ஊரில் கட்டப்பட்டுள்ளன. ஒருவார்தா கக்கூசும் கட்டப்பட்டுள்ளது கிராம மக்களுக்கு குளிக்கும் அறைகள்கூட கட்டப்பட்டு உள்ளன. குப்பை சானங்களைப் போட்டு வைக்க குப்பைத் தொட்டிகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன.

மக்கள் முன்வந்து பணியாற்றினால்....

திருச்சி-சேலம் பெரிய பாதையிலிருந்து அரை மைல் தொலைவில் உள்ளது இந்த ஆமூர்க் கிராமம். நல்ல பாதை வசதிகள் உள்ளன. சமீபத்தில் மூன்று வாய்க்கால்கள் மீது பாலம் கட்டப்பட்டது. சுற்றுப் புறத்தில் உள்ள பத்துப் பனிரெண்டு கிராமங்களை இணைக்கும்படியாக, ரோடு போடப்பட்டுள்ளது. இதற்காக கிராம மக்களே ரூபாய் மூவாயிரம் திரட்டி நன்கொடையாகத் தந்தனர். கிராம மக்களுக்கு வேலை அளிக்கவும், அவர்களுடைய உழைப்புச் சக்தியை பயன் படுத்திக் கொள்ளவும் பஞ்சாயத்து மிகுந்த கவனம் செலுத்துகிறது. கிராம அபிவிருத்தி வேலைகளில் கிராம மக்களே ஈடுபட்டுப் பணி புரியும் வகையில் கிராமப் பஞ்சாயத்து செயல் புரிந்து வருகிறது.

வெற்றிக்கு காரணமும் உறுதுணையும்.

ஆமூர் கிராமம் அற்புதக் கிராமமாக மிளிர மிகச் சிறந்த காரணம், அந்த ஊருக்கு கிடைத்த அருமையான தலைமைதான். கிராமப் பஞ்சாயத்து ஊக்கத்துடனும், ஒற்றுமையுடனும் திறம்படச் செயலாற்றுகிறது. அடித்தளம் வலுவாக இருந்தால் கட்டிடத்தைக் நல்ல முறையில் கட்டுவது சுலபம். ஆமூரின் அடித் தளம் அந்த ஊர்ப் பஞ்சாயத்து—அருமையாக செயலாற்றுகிறது. பின்பு வெற்றிக்கும், பெருமைக்கும் கேட்கவா வேண்டும்? ஆமூர் போல் அனைத்துள்ள ஊர்களிலும் பணியாற்றினால், பாலைவனமெல்லாம் சோலைவனமாகி மாறிவிட வெகுகாலம் பிடிக்காது அல்லவா?

["பஞ்சாயத்து ராஜ்" என்ற பத்திரிகையிலிருந்து.]

கடிதக் கருத்தரங்கு

அன்புள்ள ஐயா,

அரசியற் சுதந்திரம் பெற்ற மக்களின் வாழ்வில் தற் சுதந்திரம் பேணி பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற வழி காட்டும் வளர் மதிபோல் திங்களொரு முறை வெளி வரும் அரசினர் துறையில் சிறப் பிதழாகக் கொள்ளும் "கிராமநலம்' நாட்டு நலமாக ஏன் உலக நலமாகக் கருதி வெளிவர எல்லாம் வல்ல இறையை இறைஞ்சுகின்றேன்.

எம்மான் காந்தியடிகளாரிடம் பல்லாண்டு வளர்ந்த கனவுலகை நனவாக்கும் இராம ராஜ்யம் என்ற கிராம ராஜ்யத்தை அடிகோலி இற்றைய பஞ்சாயத்து ஆட்சி முறையை செவ்வனே மக்கள் மனத்தே புகுத்தி, வாழ் வாங்கு வாழ வழிகாட்டும், "கிராம நலத்தை" வாழ்த்துகின்றேன்.

மக்கள் பெருக்கத்திற் கேற்றவாறு வாழ்வுப் பெருக்கம் காணத் துடிக்கும் அரசினர் நோக்கை, சிறு குடிசைத் தொழிலை புதுமை உழவுத் தொழில் போன்ற பொருளாதாரச் சிறப்பினைப் புகுத்தி, குடும்பக் கட்டுப்பாட்டைக் குறை கூறும் சிறுபான்மையினரின் கூற்றுக்குத் தக்க சான்றினைக் காட்டி குடும்பக் கட்டுப்பாட்டின் நலனையும் வழியையும். பறைசாற்றும் "கிராம நலத்தை" குன்றின் சுடரே எனக் கூறி வாழ்த்துகின்றேன்.

கற்பனைக் கதைக்கும். கட்சிப் பூசலுக்கும் இடந்தந்து வெளி வரும் திங்களிதழகளால் வீண்பொழுது கழிக்கும் பழக்கத்தை விரட்டி அறிவுக்கும் ஆண்மீகத்திற்கும் ஒளி விளக்காய் நின்று வெளிவரும் கிராம நலத்தை யாண்டும் வாழ்த்துகிறேன் வாழ்த்தி மகிழ்கிறேன்.

வணக்கம்.

அ. கந்தசாமி,
ஒட்டன் சத்திரம்.
பழனி தாலுகா,

"நவ இந்தியாவை உருவாக்கும் திருப்பணியில் இளைஞர்களின் பங்கு"

—o—

"மக்களாட்சியின் உண்மையான தத்துவம் என்ன வென்றால் அதிகாரம் செயல் முறையில் மக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்பதே. அத்தகைய ஜன நாயக அமைப்பு முறையில், பாராளு மன்றத்துக்கும் அடித்தளத்தில் உள்ள கிராமச்சபைக்கும் இடையே பிரதி நிதித்துவம் வாய்ந்த, பலம் பொருந்திய ஒரு தொடர் புச் சங்கிலியாக, பஞ்சாயத்து ஆட்சி மிளிர்கிறது என லாம்.

துடிப்புள்ள இளைமைக்கு தரவேண்டிய இடம்

எடுக்கின்ற நடவடிக்கைகள் அத்தனையிலும், நிறு வனங்கள் நிறைவேற்ற வேண்டிய பணிகளில் எல்லாம், இனிமேல் இளைஞர்களுக்கு உரிய இடத்தை அவர்களுக்கு அளித்து, துடிப்புள்ள ஆர்வமுள்ள இளமை சக்தி இதற்கெல்லாம் உறுதுணையாக நின்று, உத்வேகத்தையும் உற்சாகத்தையும் ஊட்டிச் செயலாற்றும் முறையில் அமைக் கப்பட வேண்டியது எதிர்காலத்தில் மிகவும் அவசியமா கிறது.

பழமை மெள்ள மெள்ள மறைந்து....

பழமையான எண்ணங்களும், பழக்க வழக்கங்களும் சுலபத்தில் போய்விடாது என்று சொல்கிறார்கள். சில விதிவிலக்குகளைத் தவிர, பழமையான பாரம்பரி யத்தினர், அமைப்பு முறைக்கு உட்பட்ட, திட்டவட்டமான பழக்க வழக்கங்களையும், மனவளம் பெருகுவதற்கான உயரிய சில அம்சங்களையும் கொண்டு இயங்குகின்றனர். இவையெல்லாம் திடீரென்று ஒரே நாளில் போய்விட வேண்டுமென்றோ, உடனடியாக மாறிவிட வேண்டுமென்றோ நினைப்பது நியாயமல்ல, தர்மமல்ல, கொள்கையுமல்ல. ஒரு புதுக் கருத்தை பழமையானவர்கள் ஒத்துக்கொள்ள வைக்க முடியும். ஆனால், அவர்கள் அந்தக் கருத்தை தாங்கள் இத்தனை ஆண்டுகளாக கடைப்பிடித்து வந்த வாழ்க்கை முறைக்கு புறம்பாக ஏற்றுக்கொண்டு அப்ப டியே உடனடியாகச் செயலாற்ற வேண்டு மென்று எதிர் பார்த்தால், அது பழமைக்கு நாம் செய்யும் துரோக மட்டுமல்லாமல், வரலாற்றையே கேலி செய்வதுடன், நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதற்கும் ஒப்பாகும். நவ இந்தியாவை பழமையான எண்ணங்களையும், உழைப் பையும், சிந்திய வியர்வையையும் வைத்துக் கொண்டு உருவாக்கிவிட முடியும் என்பது நடவாத ஒன்றாகும். புதிய மாளிகையின் அடித்தளம் உண்மையில், பழமை யான வலுவுள்ள நல்ல மண் மீதுதான் எழுப்பப்பட வேண்டும். ஆனால், கட்டிடத்தை கட்ட உபயோகிக்கின்ற கற்கள் புதிதாக வலுவுடையதாக இருக்க வேண்டும் சுண்ணாம்பு நல்ல புதிய சரக்காக இருக்க வேண்டும். கட்டிடத்திற்கான மற்ற சாதனங்களும் புதிதாகவும் வலுவுடையதாகவும் இருக்க வேண்டும். இளமையின் ரத்த முறுக்கேறி, உத்வேகம் நிறைந்த உடல்கள்தான் இந்த மாபெரும் சாதனையைச் செய்யப் பயன் படுத்தப் பட வேண்டும். ஒரு நாடு உருவாகிறதே இப்படித்தான். இதுதான் முறையான, நல்ல வழி. மனித வளர்ச்சியே, புது சமுதாயத்தின் தோற்றமே இளமையோடு இளமை கலக்கும்பொழுதுதானே ஏற்படுகிறது!

புதியதோர் உலகுசெய்வோம்

புதுக்கருத்துக்களையும், புது எண்ணங்களையும் இளமை உள்ளங்கள்தான் விரைவில் புரிந்து கொண்டு அதன்படி செயலாற்ற முடியும். புதிய தொழில்நுட்ப அறிவியலையும், புதிய எண்ணங்களும் சேர்த்து உரு வாக்குகின்ற சமுதாய அபிவிருத்தித் துறையில் எல்லா வேலைத் திட்டங்களும்—விவசாயம், கால் நடைப் பரா மரிப்பு, பொதுச் சுகாதாரம், கல்வி, சமூகக் கல்வி, மற்றும் கிராம வளர்ச்சிக்கான மற்ற மற்ற துறைகளுமே— செம்மையான முறையில் நிறைபெற வேண்டுமென்றால், துடிப்புள்ள இளைஞர்கள் முன்னோடியாக நின்று பணி யாற்றினால் தான் முடியும். நம்முடைய பழம் பெருமை வாய்ந்த பண்பாட்டில் தோய்ந்து கிடக்கும் அறிவுத்திறன் அத்தனையும் திரட்டப்பட்டு, அந்த அறிவுச்சக்தி நாட்டைப் புதுப்பிக்கும் திருப்பணியில் பயன்படுத்தப்படும் படியான முறையில் அதைத் தூண்டி விடும் நல்லதொரு ஆக்க சக்தியாக நாம் அமைக்கின்ற இளைஞர் பயிற்சி முகாம்கள் அமைய வேண்டுமென நான் விழைகிறேன்."

(மத்திய சமுதாய நல அபிவிருத்தி, கூட்டுறவுத் துறை அமைச்சர் ஸ்ரீ எஸ். கே. டே அவர்கள் சமீபத்தில் விடுத்துள்ள செய்தி ஒன்றின் சாரம்.)

["பஞ்சாயத்து ராஜ்" என்ற பத்திரிகையிலிருந்து]

—o—

அமெரிக்கத் தூதரின் சென்னை விஜயம்

அமெரிக்கத்தூதர் திரு ஜான் கென்னத் கால்பிரெய்த் 1961-ம் வருடம் ஜூலை மாதம் 18-ம் தேதி அன்று சென்னைக்கு வந்தார். விமான நிலயத்தில் அவருக்கு சிறந்த வரவேற்பு அளிக்கப் பட்டது.

தமிழ்நாட்டிற்குப் பாராட்டு

பத்திரிகை நிருபர்களிடம் தூதர் கால்பிரெய்த் பேசுகையில் சென்னைக்கு வந்துள்ளது குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் இந்திய யூனியனுள்ள மிகவும் முன்னேற்றமான மாநிலங்களில் ஒன்று என்ற நிலையான புகழைத் தமிழ் நாடு பெற்று வருவதாகவும் அவர் கூறினர். தமிழ் நாடு மத்திய உணவுத் திட்டம் தம்மைக் கவர்ந்துள்ளதென்றுர்.

தமிழ் நாட்டு மந்திரி திரு சி. சுப்ரமணியத்தை அண்மையில் தாம் அமெரிக்காவில் சந்தித்தது பற்றித் தூதர் குறிப்பிடுகையில் கல்வி, நிதி இலாக்காக்கள் இரண்டையும் அவரே வகித்து வருவது அமெரிக்கக் கல்வித் துறை அறிஞர்கள் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளதென்றுர். தமிழ் நாட்டு அமைச்சர் பெரிதும் மதித்துப் பாராட்டப் பெற்றதாகவும் கூறினர்.

கிண்டி தொழில்பேட்டை

கிண்டியில் உள்ள தொழில் பேட்டையை அமெரிக்கத் தூதர் பார்வையிட்டு மகிழ்ந்தார். தொழில் பண்ணையிலுள்ள நிலயங்களில் உற்பத்தியாகும் பல்வேறுபொருள்களில் அமெரிக்கத் தூதர் மிக்க அக்கறை காட்டினர். பண்ணையைப் பார்வையிட்டபின், பார்வையாளர் புத்தகத்தில் எழுதுகையில் தொழில் பண்ணையின் நற்பணியினைப் பாராட்டி, இங்குள்ள தொழில் நிலயங்களின் எதிர் காலம் சிறப்புறுமாறு வாழ்த்தினர்.

சத்துணவு பிரச்சார மோட்டார் வண்டி

சத்துணவு விருத்தித் திட்டத்துக்கு அமெரிக்கத் தூதரின் மனைவியார் திருமதி ஜான் கென்னத் கால்பிரெய்த் மோட்டார் வண்டி ஒன்று வழங்கினர். ‘உணவு சிறந்தால் வாழ்வு சிறக்கும்’ என்றுர் திருமதி கால்பிரெய்த். சத்துணவைப் பரப்பும் திட்டத்தில் அகில இந்திய உணவுக் குழு (சென்னைப் பிரிவு) சேவா சமாஜம் இவற்றோடு அமெரிக்கக் கோதுமைச் சங்கம் ஒத்துழைக்கிறது. குழுவின் தலைவர் திருமதி சி. சுப்ரமணியம், திருமதி கால் பிரெய்த்தினிடமிருந்து நன்கொடையைப் பெற்றுக் கொண்டார். அன்பளிப்பு விழா அரசாங்க மாளிகைப் பூங்காவில் மாநிலக் கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி தலைமையில் நடைபெற்றது.

செனெட் மண்டபத்தில் பேருரை

சென்னைப் பல்கலைக் கழகத்து செனட் மண்டபத்தில் அமெரிக்கத் தூதர் உரை நிகழ்த்தினர். “பொருளாதார வளர்ச்சிக் கண்ணோட்டம்” என்ற பொருள் பற்றி அவர் பேசினர். “பொருளாதார வளர்ச்சி தொடர்ச்சியான பணியாகும். வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் தகுந்த கொள்கைகள் அவசியம். ஒரு நாட்டில் அதன் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் முன்னேற்றத்திற்கு உகந்ததான ஒரு கொள்கை, வேறு ஒரு நாட்டிற்கு உகந்ததாக இருக்கலாமென்பதில்லை” என்றுர் அவர். மேலும், “ஒரே நாட்டிலும் கூட, பொருளாதார வளர்ச்சிக்குப் பொதுவான நிலையான விதி முறை கிடையாது. ஏனெனில், இந்தியாவைப் போன்ற ஒரு நாடு வளர்ச்சிப் பாதையில் முன்னேறுகையில், அது வளர்ச்சிப் பிரச்னையை மதிப்பிடுவதும் மாறும்” என்றுர். “எல்லாக் கட்டங்களிலும் சமுக அமைப்பு வளர்ச்சிக்கு சாதகமாக இருக்க வேண்டும். வளர்ச்சி என்பது ஒரு ஜனநாயக சாதனை; மக்களையும் சேர்த்துக் கொண்டால்தான் இது நடக்கும், பலன் கிட்டுவதாயிருந்தால் மக்கள் சேருவர்” என்றுர் அமெரிக்கத் தூதர்.

கால்பிரெய்த்—காமராஜ் சந்திப்பு

அமேரிக்கத் தூதர் முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்களைச் சந்தித்து அளவளாவினர். மற்ற அமைச்சர்களை முதல் அமைச்சர், தூதருக்கு அறிமுகம் செய்து வைத்தார் இதற்கு முன்பு, தமிழ் நாட்டு அரசாங்கத் தலைமைக் காரியதரிசி திரு ஆர். ஏ. கோபாலசாமி அவர்களை தூதர் கால்பிரெய்த் சந்தித்துப் பேசினர்.

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், அமெரிக்கத் தூதருக்கு சிற்றுண்டி விருந்து ஒன்று அளித்தார்.

பத்திரிகை நிருபர்களிடம்

பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து அமெரிக்கத் தூதர் பேசினர். “இந்தியா நிலையான அரசாங்கம் உள்ள நாடு என்பதையும், உலகத்தில் பெரிய தொழில் வளமுள்ள நாடுகளில் ஒன்றுக அது விளங்கப்போகிறது என்பதையும் உணர்வதால் முதலீட்டாளர்களின் மனப்பான்மை சாதகமாக அமையும்” என்று அவர் பேசுகையில் குறிப்பிட்டார். [படங்கள் கடைசி அட்டைப் பக்கம் பார்க்க]



1-2. சென்னை மாவட்ட மத்திய நூல் நிலைய விஸ்தரிப்புக் கட்டிடத்தை உள்துறை அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் 11—7—61 அன்று திறந்துவைத்தார்.

3. சென்னை பால மந்திர் நடத்தும் சத்தியமூர்த்தி உயர்நிலைப் பள்ளித் திறப்பு விழா முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் தலைமையில் 23—6—61 அன்று நடைபெற்றது.

4. 20—7—61 அன்று அகில இந்திய கைவேலைப் பொருள்கள் போர்டின் தலைவி ஸ்ரீமதி கமலாதேவி சட்டோபாத்யாய ஆவடியில் உள்ள விசேஷ ஆயுதப் படையினரின் விடுதியைப் பார்வையிட்டார்.

5. இலங்கை அரசாங்கத்தின் சார்பாக சென்னையில் உள்ள இலங்கை உதவி ஹைகமிஷனர் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுககாக 24—7—61 அன்று அளித்த தேயிலையை முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ், மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்கிறார்.

எழில் கொஞ்சும் ஏலகிரி

வடஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்காவில் உள்ளது ஏலகிரி மலைப்பகுதிகளாகும். நல்ல சீதோஷ்ண நிலை, இயற்கையின் எழில், அமைதியான சூழ்நிலை, அழகான சுற்றுப்புறக் காட்சிகள் அத்தனையும் சேர்ந்து ஏலகிரி பகுதியை எழில் கொஞ்சும் பகுதியாகவும், உல்லாசப்பயணம் செய்வோரின் உள்ளத்தைக் கவரும் இடமாகவும் மாற்றியமைக்க உதவும். கிராமியச் சூழ்நிலை மனத்திற்கு அமைதியைத் தருவது. தேக ஆரோக்கியத்திற்கும் உகந்த இடம் இது. இந்தப் பகுதி மக்கள் நீண்ட ஆயுளுடன் வசிக்கிறார்களாம். அழகு தவழும் ஏலகிரி எதிர்காலத்தில் உல்லாசப் பயணத்திற்கு உகந்ததோர் இடமாக அமையலாம்.





1–2. வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரை அடுத்த பெரியகசிநாய்க்கம்பட்டி, பெரியகரம் கிராமங்களில் ஈ தடுப்பு விழா, கம்போஸ்ட் வார விழா கொண்டாடப்பட்டது.

4. திருவரங்குளம் பஞ்சாயத்து யூனியன் மணியம்பலம் ரோடு வேலை 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் தேதி அன்று துவக்கிவைக்கப் பட்டது. 3. அதே யூனியனில் திருக்கட்டளை கிராமத்தில் பள்ளி சீரமைக்கப்பட்டு, மாணவர்கள் பள்ளிக்குச் செல்லும்பொழுது எடுத்தபடம்.

5–6. கன்னியாகுமரி மாவட்டம் இராஜக்கமங்கலம் வட்டாரத்தில் பாதை அமைக்கும் வேலை காவலர் படையினரால் செய்யப்பெற்றது.

7. தஞ்சை மாவட்டத்தில் குத்தாலம் வட்டாரம் 1959-60ல் சிறந்த வட்டாரம் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான சுழலும்கேடயம் அந்த வட்டாரத்திற்கு அளிக்கப்பட்டது.



1—2. மதுராந்தகம் அருகாமையில் உள்ள பட்டாளத்தில் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரைத் தொழிற்சாலை 6-7-61 அன்று முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

3—4. கிழக்குப் பகுதி நைஜீரியாவின் பிரதமர் டாக்டர் ஒக்பகரா அனகா புத்தூரில் உள்ள நெசவு நிலையத்திற்கு 13-7-61 அன்று விஜயம் செய்தார்.





6. 12-7-61 அன்று ஸ்ரீவில்லி புத்தூரில் ராமநாதபுரம் கூட்டுறவு நூற்புத் தொழிற்சாலையை முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் திறந்து வைத்தார்.

கிராமிய மறுமலர்ச்சியில் நூலகங்களின் பங்கு

திரு. நா. சி. அரங்கசாமி

[" பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும் " என்பது பாரதியார் வாக்கு. உடல் வளர்ச்சிக்கு உணவு எப்படித் தேவையோ, அதுபோல உள்ள வளர்ச்சிக்குக் கல்வி இன்றியமையாதது. இவை இரண்டும்நிறைந்த வாழ்வே முழு வாழ்வாகும். மனிதனை முழுமனிதனுக்கும் இத் திருப்பணியில் நூலகங்களின் பங்கு என்ன என்பதைப்பற்றி இக்கட்டுரை ஆசிரியர் ஆராய்கிறார்.

—ஆசிரியர்]

நம் நாட்டின் எழுத்தறிவின் தரம், மிகக் கீழ்நிலையில் உள்ளது. சராசரி வீதம் 23.7 தான். எனவே, கல்வித் துறையில் நாம் செய்ய வேண்டிய பணி மிகவும் பிரம்மாண்டமானது. மக்களிடையே இத்துறையில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படச் செய்ய வேண்டும். இத்தகைய விழிப்புணர்ச்சியை உண்டாக்கும் வகையில், நூலகங்களின் பங்கு மிக இன்றியமையாததாக உள்ளது.

தனி மனிதனுக்கு வழிகாட்டி

தனி மனிதனின் முன்னேற்றத்தில்தான் நாட்டின் முன்னேற்றம் அடங்கி உள்ளது. இன்றைய உலகில் ஒருவரைப் போலவே மற்றெருவர் இருப்பதில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்ட திறமைகளும், ஆர்வமும், தேவைகளும் இருக்கின்றன. இவையே ஒருவனுடைய ஆளுமையை நிர்ணயிக்கின்றன. மேலும் இன்றைய விஞ்ஞான உலகில் நாளுக்கு நாள் மனிதனுடைய தேவைகளும், பிரச்சினைகளும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. ஒவ்வொருவரும் நல்லமுறையில் வாழ, தன்னையும் சுற்றுப்புறத்தையும் அறிந்து, வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். இதன் பொருட்டு மக்களுக்குப் பல விதங்களில் கல்வி அளிக்கப்படுகிறது. தனி மனிதனது தேவைக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் ஏற்ப, கல்வி புகட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு, அவ்வப்போது நம் கல்வி முறையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனால், தனி மனிதன் முழு ஆளுமை உள்ளவனாக வளர உதவ வேண்டும், அவனைத் திறமை, ஒழுங்கு, உபயோகம் உள்ள குடிமகனாக, சமூக அங்கத்தினனாக உருவாக்க வேண்டும் என்ற நம் கல்வியின் குறிக்கோளும், நோக்கமும் எவ்வித மாற்றத்தையும் காணவில்லை. காரணம், நம் கல்வி முறை ஆண்டாண்டு காலமாக ஒரே பாடத்திட்டத்தின் அடிப்படையில் போதித்துவரும் கல்வியாக உள்ளது. அமெரிக்கர், ரஷ்யர்களது வான வெளிப்பயணத்தையோ, அல்லது நம் பஞ்சாயத்து கூட்டாட்சி முறை அமைப்பையோ, அதில் காண முடியாது. இவற்றை நாம் பாடத்திற்கப்பாற்பட்ட நூல்களிலும், செய்தித்தாள்களிலும்தான் காண முடியும்.

நாளும் நூற்றுக் கணக்கான நூல்கள் வெளியிடப்படுகின்றன. அவை அனைத்தையும் தனி மனிதன் வாங்கிப் படிக்க முடியாது. எனவே அவ்வப்போது வெளியாகும் நூல்களை, நூலகம் வாங்கி வைக்கிறது. பொதுவாக நூல்களைப் படிக்கும் பழக்கம், அறிவையும், ஆளுமையையும் வளர்க்கிறது. எனவே தொடர்ந்து நூல்களை விநியோகித்து, பொதுமக்களிடையே படிக்கும் பழக்கத்தை உருவாக்கலாம். அகராதி (Dictionary) அனைத்து கால அகராதி (Encyclopaedia) உலகப் படப் புத்தகம் (Atlas), உலகப்பட உருண்டை (globe), தேவைப்படும் போது திருப்பும் நூல்கள் (Reference books) இவை அடுக்கி வைத்திருப்பவற்றைக் கண்டு, அற்புதமான அழகுப் பொருள்கள் என்று கருதுவோரும், அதை உபயோகிக்கும் முறை தெரியாதவர்களும் அனேகர் உள்ளனர். இவர்களுக்கு அவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி, அவற்றை உபயோகிக்கும் முறையும் சொல்லித்தரும் பொறுப்பு நூலக அதிகாரியைச் சார்ந்ததாகும். இத்தகைய உதவிகளால் நிச்சயம் தனி மனிதர்கள் நல்லறிவு பெருவர். நாடும் நன்மை அடையும்.

கிராமத்திலுள்ள சங்கங்களுக்கு வழிகாட்டி

நம் கிராம மக்கள் பண்டுதொட்டே தெய்வ பக்தியும் தேச பக்தியும் மிக்கவர்கள். சுதந்திரப் போராட்டத்தில் கோடிக் கணக்கான கிராம மக்கள் கிளர்ந்தெழுந்து உடல், பொருள், ஆவி அனைத்தும் தியாகம் செய்தமை உலகறிந்த உண்மை. பழங்காலம் முதல் பல தன்னிச்சை சங்கங்கள் நம் கிராமங்களில் பணி புரிந்து வருகின்றன. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ஒவ்வொருகிராமத்திலும் இளைஞர் சங்கம், மாதர் சங்கம், சமுதாய மன்றம் முதலான சங்கங்களை ஏற்படுத்தி கிராம மக்களிடையே கூட்டு முயற்சியை உண்டாக்கப் பாடுபடுகின்றனர். இத்தகைய சங்கங்கள் நூலகங்களிலிருந்து ஒழுங்காக நூல்களை எடுத்துச் சென்று படிக்கலாம். நாட்டில் நடக்கும் கிராம மறுமலர்ச்சிப் பணிகள், பஞ்சாயத்துக் கூட்டாட்சிப் பணிகள் போன்ற செய்திகளை நூலக வாயிலாக அறிந்து கொள்ளலாம். இவை அன்றி, ஐந்தாண்டுத் திட்டம், சமுதாய நலத் திட்டம் போன்ற தேசியத் திட்டங்கள் பற்றிய அரசினர் வெளியீடுகளை இத்தகைய சங்கங்களுக்கு விநியோகித்து, தேசியத் திட்டத்தின் முக்கியத்துவத்தையும், பொறுப்பையும் எடுத்துக்கூறி, தேசியப் பணிகளில் ஈடுபடுவதற்கு மக்களைத் தட்டி எழுப்பும் பொறுப்பும் நூலக அதிகாரியைச் சார்ந்ததே.

புதிய சங்கங்களை உருவாக்குதல்

'நம் நாட்டு இளைஞர்களிடையே தங்களைப்பற்றியே தாழ்வு மனப்பான்மை இருந்து வருகிறது; எதிலும் முன்னேக்கும் திறன் கிடையாது; எண்ணித் துணியும் ஆற்றல் கிடையாது. தலைமையும், பொறுப்பும் வகிக்க அஞ்சுகின்றனர்' என்று அடிக்கடி சொல்லி வருகின்றனர். இவற்றை அவர்களது உள்ளத்திலிருந்து அகற்றி, பொறுப்பும், ஆர்வமும், மிக்கவர்களாக ஆக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே சமுதாய நலத் திட்டத்தில் சமூகக் கல்வி ஊழியரை நியமித்துள்ளனர். இச் சமூகக் கல்வி ஊழியரும், நூலக அதிகாரியும் ஒன்று கூடிப் பணியாற்றினுல் இப் பணி எளிதில் நடந்தேறும். கேள்விக் காட்சிக் கருவிகளைக் கொண்டு அவர்களது உள்ளத்தைத் தூண்டி, உற்சாகமூட்டி அவர்களது உடனடித் தேவைகளுக்கேற்ப சமூகக் கல்வி ஊழியர், இளைஞர் சங்கம், மாதர் சங்கம், போன்றவற்றை ஏற்படுத்தி அங்கத்தினர்களுக்கிடையே தலைவர், செயலர், பொருளர் என்பன போன்ற பொறுப்புகளைக் கொடுக்கலாம். நூலக அதிகாரி, படிப்புக்குழு (Reading clubs) ; படிப்புக் கழற்குழு, (Study circles) கவனிப்போர் குழு (Listening groups), போன்ற சங்கங்களை அமைத்து, குறிப்பிட்ட திட்டத்தையோ, செயலையோ அவர்களுக்கு கொடுத்து சிறு ஆய்வு நடத்தும்படி தூண்டலாம். இவைகளை அமைத்தபின் அவற்றினின்று விலகி, அவைகளின் செயல்களைக் கவனிப்பதோடு, அவ்வப்போது தேவையான ஆலோசனை கூறி, அவர்களது பொறுப்பை உணர்த்தி அவற்றை தன்னியக்கச் (Self governing) சங்கங்களாக இயங்கும்படி செய்ய வேண்டிய பொறுப்பு நூலக அதிகாரியைச் சார்ந்ததாகும். இத்தகைய செயல்களால் நாட்டு இளைஞர்களிடையே பொறுப்பும், தலைமையும் பெரும் திறமை வளரும். நாடு விழிப்படையும்.

நல்ல இலக்கியங்களைப் பெருக்குதல்

நாளும் நூற்றுக் கணக்கான நூல்கள் வெளியிடப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை தரக்குறைவானவையாகவும், படிப்பவர்களிடையே கெட்ட உணர்ச்சிகளைத் தூண்டுபவையாகவும், ஒரு சார்புக் கொள்கையை வளர்ப்பவையாகவும் உள்ளன. நல்ல செய்திகளுடன், தரம் மிக்க நூல்கள் மிகச் சிலவே வெளியாகின்றன. நூலகங்கள் நல்ல இலக்கியங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தர வேண்டும். உதாரணமாக இங்கிலாந்தில் வெளியாகும் நூல்களில் 15 சத வீதம் அங்குள்ள நூலகங்களே வாங்குகின்றன. இது பெரும் தொகைதான். இந்த நிலை நம் நாட்டிலும் ஏற்பட வேண்டும். இதனுல் நாட்டில் வெளியிடப்படும் நூல்களின் தரத்தையே மாற்றியமைக்கும் சக்தி, நூலகங்களுக்கு உண்டு என்பது ஒரு தலை. நல்ல, தரமுள்ள நூல்களை நூலகங்களே விளம்பரப் படுத்தலாம். நூலக மலரில் இத்தகைய நூல்களின் மூலக்கருத்தை அச்சிட்டு விமரிசனம் செய்யலாம். கண்காட்சிகள் ஏற்பாடு செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களுக்கு பரிசுகள் கொடுத்து உற்சாகமூட்டலாம். இவ்வாறு செய்வதால் நாட்டில் நல்ல பல நூல்கள் பெருக, நாட்டு மக்களிடையே நல்லுணர்ச்சி வளர ஏதுவாகும்.

நடைமுறை எழுத்தறிவு வளர . . .

நம் நாட்டில் எழுத்தறிவு 23.7 சத வீதமாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக 7.1 சத வீதம்தான் கல்வி அறிவு பெற்றுள்ளனர். இது மிக மெதுவான முன்னேற்றமென்றே கூறலாம். எனவே இந்தியாவில் கல்வியில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படவேண்டுமாளுல் அகர வரிசையிலேயே திரும்பத் திரும்பச் சொல்லும் முறைமாறி, உபயோகமுள்ள, வாழ்க்கைக்கான, நடைமுறை எழுத்தறிவை புகட்டவேண்டும். இம்முறைக் கல்வி, கற்போருடைய அறிவை விரிவுபடுத்தும் கருவியாக அமையும். வாழ்க்கைக்கான, உடனடித் தேவையைத் தீர்ப்பதற்கான நடைமுறைக் கல்வி கொடுப்பதே நூலகத்தின் முக்கிய நோக்கமாகும். இத்தகைய பணியால் நாட்டு மக்களிடையே விழிப்புணர்வும், நாட்டில் மறுமலர்ச்சியும் ஏற்படும். மேற்கூறிய பணிகள் அனைத்தும் நன்முறையில் நடக்க நூலகம் போதுமான வசதிபெற்றிருக்க வேண்டும். நூலக அதிகாரி போதிய திறமையும் சமூக மனப்பான்மையும் கொண்டவராக இருக்கவேண்டும்.

நூலகத்தின் அமைப்பு

நம் நாட்டில் நூலகத்துறை இன்னும் குழந்தைப் பருவத்தில்தான் உள்ளது. நாடு முழுவதும் மொத்தம் 32,000 நூலகங்கள் இருந்தாலும் அவற்றில் மிகப்பல போதிய வசதி பெற்றதாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு நூலகத்திலும் வேண்டப்படாத பகுதிகள் பல இருக்கின்றன. சுருங்கக் கூறினுல், நம் நாட்டில் சராசரி 50 பேருக்கு ஒரு புத்தகம் இருக்கிறது. 10 பேர் சேர்ந்து ஒரு ஆண்டு முழுவதும் ஒரு நூலைப் படிப்பதாக கணக்கீடு கூறுகிறது. இந்த நிலை மாறவேண்டும். நூலகங்கள் சமுதாயத்தின் பகுத்தறிவுச் செயலுக்காக கூடும் இடமாக இருக்க வேண்டும். செய்திகளுக்காகவும், நடைமுறை கல்விக்காகவும், பொழுதுபோக்குக்காகவும் மக்கள் ஒன்று சேரும் இடமாக இருக்க வேண்டும். படக் காட்சி காட்டல், நாடகம் நடத்துதல், நல்ல தலைப்புகளில் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல், பொது மக்களுக்கு விருப்பமான தலைப்புகளில் குழுச்சர்ச்சைகளும், ஒட்டி வெட்டிப் பேசும் கூட்டங்களையும் நடத்துதல் மூலமாகப் பொது மக்களைக் கவர வேண்டும். வண்டிச் சக்கரத்தில் பல ஆரங்கள் அதன் கும்பத்தில் வந்து சேருவது போல இத்தகைய நிகழ்ச்சிகள் அனைத்தும் சேர்ந்து சமுதாயத்தின் பகுத்தறிவுச் செயல்களின் கும்பமாக நூலகத்தை ஆக்கிவிடுகின்றனர். கேள்விக் காட்சிக் கருவிகள் இத்தகைய செயலுக்கு மிகப் பயன்படுவன

படக் காட்சியும், வானொலியும் பெரும் திரளான மக்களுக்குக் கல்வி போதிப்பதற்கான சாதனங்கள். முக்கியமாக படக் காட்சி முதலிடம் வகிக்கிறது. பொருள்கள் இயற்கையில் இருப்பது போலவும், மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதையும் நேரடியாகக் காட்டுவதால் இதனை எல்லோரும் விரும்புகின்றனர். இவை எழுத்தறிவு அற்றவர்களுக்குக் கல்வி போதிக்கின்றன, எனவே சினிமா படக் கருவியும், வானொலிப் பெட்டியும் ஒவ்வொரு நூலகத்திலும் அவசியம் இருக்கவேண்டும். எழுத்தறிவின் தொடக்க நிலையில் உள்ளவர்களுக்கு உதவும் வகையில் நூல்களைச் சேகரித்து அழகாக அவர்களைக் கவரும் வகையில் அடுக்கி வைக்கப்பட்டிருக்க வேண்டும். குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும், இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் தொடர்ந்து கற்க அவரவர்களுக்குத் தேவையான நூல்களைத் தந்து, அவர்களது ஓய்வு நேரத்தை நன் முறையில் கழிக்க நூலகம் உதவ வேண்டும். தனி மனிதர்களுக்கு மட்டுமின்றி குழுக்களின் முன்னேற்றத்திற்கும் நூலகம் உதவவேண்டும். எழுத்தறிவு பெற்றோருக்கு மட்டுமின்றி எழுத்தறிவற்றவர்களுக்கும் கல்விக்கூடமாக அமைய வேண்டும். பல சிறு நூலகங்களையும் இணைத்து பணிபுரிய வேண்டுமென்ற எண்ணம் கொண்ட இந்திய சர்க்கார், மாவட்டத் தலைமை நூலகங்களை ஏற்படுத்தி வருகின்றனர். இந்தியாவிலுள்ள 320 மாவட்டங்களில் 100 மாவட்டங்களில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே தலைமை நூலகங்கள் நிறுவப்பட்டுவிட்டன. மற்றவை நிறைவேறிக்கொண்டுள்ளன. ஒவ்வொரு தலைமை நூலகத்திற்கும் கேள்விக் காட்சிக் கருவிகள் விநியோகிக்கப்பட வேண்டும். சுற்றிலும் நல்ல மைதானம் இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நூலகக் கட்டிடத்தின் தோற்றம் உள்ளும் புறமும் மற்றவர்களைக் கவரும் வண்ணம் இருக்கவேண்டும். நான் பார்த்த நூலகங்களில் கல்கத்தா தேசிய நூலகம் அனைத்து வசதியும் பெற்று மிக நல்ல சூழ்நிலையில் அமைந்துள்ளது.

நூலக அதிகாரி

நூலகத்தில் நல்ல நூல்கள் நிறைந்திருந்தால் மட்டும் போதாது. நூல்கள் படிப்பவர்களை நாடிச் செல்லாது. அல்லது சாதாரண கிராம மக்கள் நல்ல நூல்களைத் தேடி எடுக்கவும் முடியாது. எனவே நூல்களையும், படிப்பவர்களையும் இணைக்கும் பிரதிநிதியாக நூலக அதிகாரி இருக்க வேண்டும். இவர் ஒழுங்கும், திறமையும் பெற்றவராக இருந்தால்மட்டும் போதாது. சமூக மனப்பான்மையும், உற்சாகமும் உள்ளவராக இருக்கவேண்டும். நூல்களை விநியோகிப்பது மட்டுமே இவரது பணியன்று. சமூக நல வேலைகள் செய்வதற்கும், மக்களது மன மாற்றத்திற்கெனச் செய்யப்படும் அனைத்து செயல்களிலும் உற்சாகத்துடன் பங்கு கொண்டு உழைக்கவும் எப்போதும் தயாராக இருப்பவராக இருக்கவேண்டும். கிராமப் பணிகளை அமைதியாக இருந்து கவனிப்பவராக இல்லாமல், அவற்றில் பெரும் பங்கு கொண்டு உழைக்கக்கூடியவராக இருக்க வேண்டும். அப்போதுதான், கிராமத்தின் எச்செயலுக்கும் நூலகம் ஒரு வழி காட்டும் நிலையமாக இருக்க முடியும். சுருங்கக் கூறின் எத்தகைய கிராம முன்னேற்றப் பணியும் ஆரம்பிப்பதற்கு முன் நூலக அதிகாரியை ஆலோசனை கேட்கவேண்டும் என்று மக்கள் நினைக்குமளவு நூலக அதிகாரி செல்வாக்கு பெற்றிருக்க வேண்டும். நூலக அதிகாரி சமூக நல ஊழியருடன் இணைந்து பணியாற்றவேண்டும். இவர்களுடைய ஒன்றுபட்ட முயற்சியால் சமூகக் கல்வித் துறையில் பல முன்னேற்றங்களைக் காண முடியும். இதையே "நூலக ஆலோசனைக் கமிட்டி" தன் அறிக்கையில் "நூல்களையும் மக்களையும் இணைக்கும் தன் முயற்சி வெற்றி பெற, நூலக அதிகாரி சமூகக் கல்வி ஊழியருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவரது ஒத்துழைப்பைப் பெறவேண்டும். நூலக அதிகாரி சமூகக் கல்வி பற்றிய பொது அறிவு பெற்றிருப்பது போலவே சமூகக் கல்வி ஊழியரும் நூலகம் சம்பந்தமான பொது அறிவு பெற்றிருக்க வேண்டும். இருவருக்கும் பொதுவான கல்வித்துறையில் நன்கு பணியாற்ற, அடிக்கடி ஒன்றுபட்ட செயலுக்கான திட்டங்களை உருவாக்க வேண்டும்" என்று கூறுகிறது.

எனவே நல்ல வசதி பெற்ற நூலகமும், நூலக அதிகாரியும், நாட்டின் மறு மலர்ச்சிப் பணியில் நூலகத்தின் பெரும் பங்கை நன்குணர்ந்து, நல்ல முறையில் பணியாற்றினால் கோடிக் கணக்கான மக்கள் சுடர்மிகு அறிவொளி பெற்று, நல்ல குடிமக்களாக, மக்களாட்சியின் காவலர்களாக விளங்குவர்; நாடும் நலம் பெறும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற பேருண்மையாகும்.

(12-ம் பக்கம் தொடர்ச்சி)

வேகத்தைப் பொருத்தும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும். ஒவ்வொரு பொருளுக்கும் நிறையுண்டு. இதன் விளைவாக அதற்கு ஆற்றல் ஏற்படுகிறது. இந்த ஆற்றலின் அளவு பொருளின்நிறைக்கு ஏற்ப உண்டாகும். உதாரணமாக ஒரு குழாயின் மூலமாக ஓடி வரும் தண்ணீரின் வேகத்தை மாற்றாமல் அதன் அளவை மட்டும் இரண்டு மடங்காக மாற்றினால் தண்ணீரின் ஆற்றல் இரண்டு மடங்காக அதிகரிக்கும். அதன் அளவை மாற்றாமல் வேகத்தை மட்டும் இரண்டு மடங்காக மாற்றினால் தண்ணீரின் ஆற்றல் நான்கு மடங்கு அதிகரித்து விடுகிறது ; வேகத்தை மூன்று மடங்காகச் செய்தால் ஆற்றல் ஒன்பது பங்கு அதிகரித்து விடுகிறது. எனவே தண்ணீரின் அளவு குறைவாக இருந்த போதிலும் அது கடுமையான வேகத்துடன் ஓடி வரும்போது அதன் ஆற்றல் அதிகமாகவே இருக்கும். ஆறுகள் உற்பத்தி ஆகும் இடங்களிலேயே நீரோட்டத்தின் வேகம் அதிகம். உயரமான மலைகளில் மழை பெய்யும் போது பல நீரோட்டங்கள் ஒன்று சேர்ந்து ஆறுகள் தோன்றுகின்றன. ஆறுகள் உற்பத்தி ஆகும் இடங்களில் குறுகலாகவே இருக்கும் மேட்டிலிருந்து பள்ளத்துக்கு ஆறுகள் ஓடிவரும்போது, வேகம் அதிகரித்து அதன் விளைவாக நீரின் ஆற்றல் வர்க்கவிகிதத்தில் அதிகரித்து விடுகிறது. அவ்விடங்களில் ஆறுகள் கற்பாறைகளையும் புரட்டிக்கொண்டு வருவதை கவனிக்கும்போது இவற்றின் ஆற்றலை நன்கு அறியலாம். கற்பாறைகள் உருண்டு வரும்போது ஒன்றோடொன்று மோதி, சிறு கற்பாறைகளாகவும், கூழாங்கற்களாகவும் மாறிவிடுகின்றன.

தமிழகத்தை தழைக்க வைக்கும் தண்டமிழ்ப்பாவை

தமிழ்நாட்டுக்குச் சிறப்பாயுள்ள காவேரி ஆறு குடகு நாட்டில் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தி ஆகிறது. இது கடல் மட்டத்துக்குச் சுமார் நாலாயிரம் அடி உயரத்தில் உற்பத்தி ஆகிறது. தென்மேற்குப் பருவக் காற்றினால் ஏற்படும் மழையே இதன் நீரோட்டத்துக்குக் காரணம். குடகு நாட்டில் சுமார் முப்பது மைல்கள் ஓடிய பின்னர், காவேரி ஆறு மைசூர் பிரதேசத்தில் நுழைகிறது. மைசூரை தாண்டி சேலம் மாவட்டத்தின் வழியாகச் சென்று திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் பாய்ந்து வங்காளக்குடாவில் கலக்கிறது. நீர்வீழ்ச்சியாக விழும் இடங்களில் நீரோட்டத்தின் ஆற்றல் அளவு கடந்து அதிகரித்துவிடுகிறது. காவேரி ஆறு மைசூர் பிரதேசத்தில் சுமார் நூற்றிருபது மைல்கள் ஓடியவுடன், சிவசமுத்திரம் என்னுமிடத்தில் நீர் வீழ்ச்சியாக விழுகிறது. இங்கு தான் மைசூர் அரசாங்கம் நீரோட்டத்தின் ஆற்றலை பயன்படுத்தி மின்சார சக்தியை உற்பத்தி செய்கிறார்கள். காவேரி ஆறு சிறிது தூரம் மலைப் பிரதேசங்களில் ஓடி வந்து சேலம் மாவட்டத்தில் மேட்டூருக்குச் சமீபத்தில் சமவெளியை அடைகிறது. இங்குதான் மேட்டூர் அணை காவேரியின் குறுக்கே கட்டப்பட்டிருக்கிறது. திருச்சி தஞ்சை மாவட்டங்களுக்கு வற்றாத நீர்ப்பாசன வசதி இது கட்டப்பட்டபின்னரே உண்டாயிற்று. வெள்ளத்தை ஓரளவுக்கு தடுத்துக்கொண்டு நிற்கிறது இந்த அணை. இது இல்லாவிடில் இப்போது ஏற்பட்டிருக்கும் சேதத்தை விட பல மடங்கு அதிகமாக சேதம் ஏற்பட்டிருக்கும். இப்போது ஏற்பட்டுள்ள பெருத்த மழையை அணையினால் சமாளிக்க முடியவில்லை. வருங்காலத்தில் காவேரியின் வெள்ளத்தை எதிர்க்க இந்த ஒரு அணை மட்டிலும் போதாது என்ற படிப்பினையை நாம் இதிலிருந்து உணர வேண்டும்.

ஆறுகள் மலைகளைத் தாண்டி சமவெளியில் ஓடிவரும்போது அவற்றின் நீரோட்டத்தில் கற்கள், மணல் சேர்ந்து ஓடிவருகின்றன. இக்கற்களும் மண்ணும் தான் கரையோரங்களின் அழிவுக்குக் காரணம். நீரோட்டம் கரையோரங்களையும் தரையையும் தாக்கிக்கொண்டே வருவதினால் அவற்றை கரைத்து வண்டலாகத் தள்ளிக்கொண்டு செல்லும். கரையோரங்கள் பலம் குறைந்து இருக்குமிடங்களில் நீரோட்டத்தை தாங்கமாட்டாமல் இடித்துவிடுகின்றன. அதன் பயனாக அங்கு ஆற்றின் திசையே மாறிவிடுகிறது. நீரோட்டம் அடித்து வரும் மண்ணும் வண்டலும் தான் நிலத்தின் வளத்தை மேம்படுத்துகின்றன. வளம் மிகுந்த நிலத்தில் வெள்ளம் பாயும்போது நிலத்தின் சாரத்தை அடித்துச் சென்று அது மண்ணின் தரத்தை குறைத்து விடுவதுண்டு. வெள்ளத்தினாலும், நீரோட்டத்தினாலும் நிலத்துக்கு ஏற்படும் முக்கிய கெடுதலை நில அரிமானம் (Soil erosion) என்று கூறுவார்கள். நம் நாட்டின் பெரும் பிரச்சினைகளில் நில அரிமானமும் ஒன்றாகும். ஆறுகளில் வெள்ளம் ஏற்படாதவாறு பார்த்துக்கொண்டாலன்றி நில அரிமானத்தைத் தடுக்க முடியாது. நிலம் சரிவான இடங்களில் நீரோட்டத்தைக் கட்டுப்படுத்துவது முடியாத காரியம். ஆற்றின் திருப்பங்களிலேயே நீரோட்டத்தின் அழிவுவேலை நன்கு நடைபெறும். திருப்பங்களில் தகுந்த முன் ஏற்பாடுகளை செய்து வெள்ளத்தின் கொடுமையை நாம் ஓரளவு தடுத்துக்கொள்ளலாம். மேலும் நீரோட்டத்தின் வலிமை எதிர்க்கமுடியாத அளவுக்கு அதிகரிக்குமுன்னரே இந்த ஏற்பாடுகளை உடனடியாக செய்யவேண்டும். மரங்களை அதிகமாகப் பயிரிட்டு அவ்விடங்களில் நீரோட்டத்தின் வலிமையைக் குறைத்து விடலாம்.

அமெரிக்க நாட்டில் எப்படிச் சமாளிக்கிறார்கள் ?

அமெரிக்கா நாட்டிலும் நம் நாட்டை போல ஆறுகள் அதிகமாக இருக்கின்றன. விஞ்ஞான முறையில் நீரோட்டத்தைக் கண்காணிக்க அங்குள்ள விஞ்ஞானிகள் அநேக முறைகளைக் கையாண்டுவருகிறார்கள். இதற்கென்று ஆறுகளின் கரையோரங்களில் பல இடங்களில் சோதனைச் சாலைகள் (River Physics Laborataries) நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் நடை பெற்றுவரும் சோதனை

களில் ஒன்றிரண்டை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஒரு ஆற்றின் வேகம் அதன் ஆழத்தினால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை அறிய வசதி செய்திருக்கிறார்கள். மேலும் அதில் கலந்து வரும் வண்டல் மண்ணின் அளவை அவ்வப்போது அறிவதற்கு உண்டான வழியையும் வகுத்துள்ளார்கள். இத்துடன் ஆறு அடித்துக் கொண்டு வரும் பொருள்களின் திண்மை **(Density)**, பருமன் **(Volume)** ஆற்றின் அடிப்பாகத்தின் அமைப்பு இவற்றுக்குண்டான விவரங்களையும் சேகரிப்பதற்கு முறைகளை வகுத்துள்ளார்கள். இச்சோதனைகளிலிருந்து பெறப்படும் முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு அந்நாட்டில் உள்ள பல ஆறுகள் சீர்திருத்தப்பட்டிருக்கின்றன. மேலும் மழை பெய்யும் காலங்களையும், இடங்களையும் முன்னதாகவே அறிந்து, வெள்ளம் ஏற்படாதவாறு பாதுகாத்து வருகிறார்கள். இதுபோன்ற சோதனைச் சாலைகள் நம் நாட்டிலும் ஏற்படவேண்டும். நாட்டிலுள்ள எல்லா ஆறுகளின் போக்கும் கண்காணிக்கப்பட வேண்டும். அப்போதுதான் கிராம மக்கள் வெள்ளத்தின் கொடுமையில் அவதிப்படாமல் பாதுகாக்க முடியும். இதற்கு உதவி அளிக்க வேண்டியது இந்திய விஞ்ஞானிகளின் கடமையாகும். மக்கள் அரசாங்கமும் இதற்கு வேண்டிய உதவியை அளிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

யாளரான உயர்திரு. எஸ். வி. பழனியப்பன் அவர்களை செயலாள **(Correspondent)** ராகவும் உடைய 17 பேர்கள் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் அமைத்தனர்.

"உயர்நிலைப் பள்ளி அமைக்க ரூ. 35,000 பிணைத் தொகை **(Security)** கட்ட வேண்டும்" என்ற சட்டத்தைக் கல்வி அதிகாரி அவர்கள் கூறினார். இவ்வூரிலோ யாரும் பெரும் பணக்காரர்கள் கிடையாது. அனைவரும் சாதாரண நிலச்சுவான்தார்களும் விவசாயிகளும் நெசவு, தச்சு முதலான தொழிலாளர்களும் கூலிகளுமே யாகும். எனவே, மறுபடியும் ஒரு கிராமக் கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் ரூபாய் 39,200 மதிப்புள்ள 64 குழி நிலங்களை 25 பிரமுகர்கள் தானமாகக் கொடுத்தனர். அந்நிலங்கள் பிணைத்தொகை கட்ட உதவுவதுடன் இவ்வாண்டுக்கு ரூபாய் 1,852-க்கு குத்தகைக்கு ஏலம் போயிருக்கிறது. மேலும் பலர் நிலதானம் தர அன்புடன் வாக்களித்துள்ளனர்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"

"ஊர்கூடி செக்குத் தள்ளுதல்" என்ற பழங்காலப் பழமொழி ஒன்று உண்டு. இக்காலத்திலும் ஊர்கூடிச் செய்யும் காரியங்களில் எத்தனை அபிப்பிராய பேதங்கள்? ஆயினும் புத்துணர்வும் புது விழிப்பும் ஏற்பட்டிருக்கும் இந்நாளில் எல்லாத் தடைகளையும் எளிதில் கடந்து பள்ளி நிர்வாகக் குழு உறுப்பினர் உயர்திரு. ஆர். ரகுராம் அவர்கள் முயற்சியால் பள்ளி சட்ட திட்டங்களைப் பதிவு செய்தபின் உயர்நிலைப்பள்ளி அமைத்து நடந்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

பள்ளி அமைத்து விட்டால் மட்டும் போதுமா? குழந்தைகளின் பொது அறிவு வளர்ச்சிக்கு நூல் நிலையங்கள் வேண்டாமா? இவ்வூரில் வாலிபர் சங்கத்தாரால் நடத்தப் பெறும் "காந்திஜி நூல் நிலையம்" ஒன்று உளது. மதுரை மாவட்டத்தில் தனியார் நடத்தும் நூல் நிலையங்களில் இதுவே பெரியதென்று சொல்லப்படுகிறது. இதற்கு சர்க்கார் ஆண்டுதோறும் உதவித்தொகை அளிப்பதுடன் மாவட்ட நூலக ஆணைக்குழுவில் ஒரு மெம்பர் பதவியும் கொடுத்து கௌரவிக்கின்றனர். இதையன்றி பஞ்சாயத்திலிருந்து நடைபெறும் சிறு நூல் நிலையம் ஒன்றும் உளது. எனினும் போதிய இட வசதியின்மையால் பெரியவர்களன்றி படிக்க விரும்பும் சிறார்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. எனவே மாவட்ட நூலக ஆணைக்குழுவிலிருந்து மனமகிழ் மன்றக் கட்டிடத்தில் 24-3-1961 தேதி ஒரு நூல் நிலையம் திறக்கப்பெற்று குழந்தைகள் புத்தகங்களும் பத்திரிகைகளும் படிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. "மேலும் பள்ளிகள் இரண்டிலும் நூல் நிலையங்கள் உண்டு" என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஏழைக் குழந்தைகள் அனைவருக்கும் பகல் உணவு அளித்தல், மிக மிக ஏழைக் குழந்தைகளுக்கு உடைகள், புத்தகங்கள், சிலேட்டுகள் வழங்கல் முதலிய திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பள்ளிக்கு வராத குழந்தைகளை அழைத்து வருதல், இரவில் வீட்டில் குழந்தைகள் படிப்பதைக் கண் காணித்தல், முதலிய காரியங்கள் ஆசிரியர்களால் கவனமுடன் செய்யப்படுகிறது.

இத்தகைய காரணங்களால் 6 வயது முதல் 11 வயது வரையுள்ள குழந்தைகளில் நூற்றுக்கு எண்பது பேருக்கு மேல் பள்ளிக்குச் செல்கின்றனர். மற்ற குழந்தைகளையும் பள்ளிக்கு அனுப்பக் கல்விக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆவன செய்ய முயற்சி எடுத்திருக்கிறார்கள். இந்நிலைமையில் கட்டாயக் கல்விச் சட்டமும் இவ்வூருக்கு அமுலுக்கு வந்திருக்கிறது.

மேலும் ரூபாய் 16,000 மதிப்பில் மற்றொரு பள்ளிக் கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்து வேண்டிய கற்களும் செங்கற்களும் வரவழைத்தும் பஞ்சாயத்து யூனியன் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களும் மற்றவர்களும் வசதியாய்க் குடியிருக்க 40 அங்கத்தினர்களைக் கொண்ட வீடுகட்டும் சங்கம் ஒன்றும் பதிவு செய்யப்பெற்று வீடுகள் கட்ட நிலம் வாங்க ஏற்பாடு ஒரே இடத்தில் செய்யப்பட்டிருக்கிறது. நிலம் வாங்கியவுடன் காலனி முறையில் சுகாதாரமான வீடுகள் கட்டும் வேலை தொடர்ந்து நடைபெறும். மேலும், இவ்வூரில் கால்நடை வைத்திய நிலையம் ஒன்று அமைக்கவும் மற்றும் பல திட்டங்கள் நிறைவேற்றவும் தக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன; குழந்தைகள் பூங்கா, பொது ரேடியோ அமைப்பு போன்ற இன்னும் சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும் இருக்கின்றன.

கிராமத்தின் தேவைகளோ மிகப்பல; செய்திருக்கும் வேலைகளோ வெகு சொற்பம். எனினும் "நல்ல காரியம் செய்கிறோம்" என்ற பெருமையுடன் அனைவரும் ஒருமனப்பட்டு ஊரை உயர்த்தும் திருப்பணியில் ஒற்றுமையாய் ஒத்துழைத்து வருவது வருங்கால முன்னேற்றத்துக்கு ஒரு அறிகுறியே. இது ஒரு மாதிரி கிராமமாக வளர வேண்டுமென்பதே எனது ஆவல்.

வழிகாட்டி

திரு எஸ். சினுவாசன்

நாடகத்தில் வரும் பாத்திரங்கள்

ஆதிமூலம்	வீரம்மாள்
செல்வநாயகம்	செங்கமலம்
முத்துவேலன்	கண்ணம்மா.
பாண்டியன்	முனியன்
அழகப்பன்	சோலையப்பன்
நல்லப்பன்	மருதமுத்து
சங்கிலி	சாமிக்கண்ணு

மலையப்பன், மற்றும் பலர்

காட்சி 1.

இடம் : ஆதிமூலத்தின் வீடு. பாத்திரங்கள் : ஆதிமூலம் விரம்மாள், முத்துவேலன், பாண்டியன், அழகப்பன், செங்கமலம்.

(குடிசை வாசலை மாவிலைத் தோரங்களால் அலங்கரித்து வர்ணங்கள் பூசி, வாழை மரம் கட்டி மங்களகரமாக கொண்டாடுகிறார்கள்.)

ஆதிமூலம். "தை பொறந்தா வழி பொறக்குன்னு" சொல்லுவாங்க . . . .உண்மையிலேயே உணவு யில்லாமே தவிப்பவங்களுக்கு தைபிறந்தா வழிமட்டு மில்லே வயிறும் நிரம்பும்.

முத்துவேலன் : ஆமாம்பா, நீங்க சொல்றது நூத்துக்கு நூறு உண்மைதான். (செங்கமலத்தினிடம்) அது சரி மாட்டுக்கு பொங்கலிட்டாச்சா ?

செங்கமலம் : ஓ . . . .மாட்டுக்கு பொங்கலிட்டாச்சு, சலிலி கூட கட்டியாச்சு ! இனி வண்டியிலே கட்டி ஓட்ட வேண்டியதுதான் பாக்கி.

(அழகப்பன் செங்கமலத்தையே பார்த்துக் கொண்டிருப் பதைக்கண்டு பாண்டியன் . . . .)

பாண்டியன் : (கேலியுடன்) என்ன அழகப்பா, செங்கமலத் தேயே வெச்ச கண்ணு வாங்காமே பாத்துக்கிட்டே யிருக்கே . . . .என்ன சங்கிதி ?

முத்துவேலன். (பாண்டியனிடம்) அதுவா தம்பி, காளைக்கு பொங்கலிட்டாச்சு, சல்லிகூட கட்டியாச்சு, அப்படின்னு செங்கமலம் சொன்னதும் அழகப்ப னுக்கு நெனப்பெல்லாம் எங்கோ போயிடுத்து. நாம எப்படா செங்கமலத்தோட கழுத்திலே தாலிய கட்ட போறோம் என்கிறதையே எண்ணிக்கிட்டே அப்படி ஜாடையா பாக்கிறான். கவலைப்படாதே அழகப்பா எத்தனை யுகமானுலும் சரி, என் செங்கமலம் கிழவி யாக ஆனுலும் சரி அவ உனக்குத்தான் . . . நீ . . . . .

(எல்லோரும் கொல்லென்று சிரிக்க செங்கமலம் வெட்கத் தால் குடிசைக்குள் ஓடி மறைதல்.)

பாண்டியன். அண்ணு, கோழிப்பண்ணை நடத்தும் இந்த கோமான் மட்டுமில்ல, செங்கமலத்துக்கு கூடதான் தை பொங்கல் வந்தும் நாம இன்னும் அழகப்பனின் கையை பிடிக்க முடியலையேன்னு மனசு சஞ்சலப் படுது . . .

(அதே சமயம் குடிசையின் சாரளத்தின் வழியே செங்கம லம் அழகப்பனை பார்ப்பதைக் கண்டு . . .) அதோ பாரு . . . சாரளத்துவழியாக்கூட அழ கப்பனையே பார்த்துக்கிட்டுயிருக்கு . . . .

வீரம்மாள். அதுக்கென்ன இந்த தைப்போனுப்போவுது வர தையிலே இரெண்டு பேருக்கும் முடிச்சு போட் டுட்டா போவுது. ஆனு அது வரைக்கும் பொருத்துக் கிட்டிருக்கனும். (அழகப்பனிடம்) என்ன அழகப்பா? (கணவரிடம்) என்னுங்க நான் சொல்றது ?

ஆதி மூலம். நான் என்ன சொல்றது எல்லாம் உன் னிஷ்டம்.

பாண்டியன். (செங்கமலத்தின் குரல் போல்) என்னம்மா 365 நாளா . . .? 52 வாரமா ? அம்மாடி யோவ் ஒரு வருஷம் எப்படியம்மா பொருத்துக் கிட்டிருக்க முடியும் ? . . . என்ன செங்கமலம் அப்படித்தானே கேக்கத் துடிக்குது உன் மனசு. .

செங்கமலம். (சாரளத்தின் வழியாகவே) போங்கண்ணு . . . . உங்களுக்கு எப்பப் பார்த்தாலும் கேலி தான்.

முத்துவேலன். செங்கமலம் இத பாரு. நானும் தான் உன் கலியாணத்தை தடபுடலாய் நடத்துனுன்னு ரொம்ப ஆசைப்பட்டுகிட்டிருக்கேன். அதுக்காகத்தான் இராவு பகலா பாடுபடறேன். ஏதோ பாய் முடைஞ்சு, கூடை செஞ்சு சந்தையிலே வித்து பணம் திரட்டிகிட்டு வரேன்.

பாண்டியன். அண்ணு, உன் குடிசைக் கைத்தொழி லாலே கலியாணத்திற்கு வேண்டிய பணம் திரட்ட முடியுமா ?

ஆதிமூலம். பாண்டியா அப்படி சொல்லாதே. எவ்வ ளவுக்கௌவு பாடுபடுகிறோமோ அவ்வளவுக்களவு பலன் கிட்டும். மேலும் குடிசைத் தொழில் செய்து அடையும் வருவாயைப் பற்றி உனக்குத் தெரியாது. அது ஒரு நல்ல தொழில். அதை எல்லோரும் கற்று பழகிக்கொள்ள வேண்டும்.

அழகப்பன். மேலும் நாம ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிலே பாடுபடுகிறோம். உழைக்கிறோம். நம் கிராம மக்களில் பலரும் அவரவருக்கு விருப்பமான தொழில்கள் செய்துவருகிறார்கள். எதற்காக ? உன்னத வாழ்வுக்காக. நம்மை பார்த்து மற்றவர் களும் இம்முறையை கையாள, பின் பற்றி நடக்க நாம் வழிகாட்டிகளாக வாழ்கிறோம். இப்படிச் செய்வ தால் கிராமமும் சேமம் பெறும், செழிப்பும் அடை யும், செல்வம் பெருகும், வளம் பொங்கும்.

பாண்டியன். முத்து அண்ணன் குடிசைத் தொழில் செய்யறதும், நீ கோழிப்பண்ணை நடத்தறதும் சிறந்த தொழில்கள்தான் அதை நானும் வரவேற்கின்றேன். ஆனு நான் மட்டும் பாடுபடலேயா என்ன ?

முத்துவேலன். (ஏளனத்தோடு) ஓ . . . நாடகம் எழுதி, கூத்து போடறே, கதை யெழுதரே. வில்லுப் பாட்டு பாடறே. இதலே என்ன பலனை மற்ற கிராம மக்கள் அடைவார்கள்? ஏன்? நம் கிராம மக்கள் பெற்றுர்களா ? சொல்லு பார்ப்போம்.

பாண்டியன். அண்ணு, "சிறுதுளி பெரு வெள்ளம்." அது போல என்னுடைய சிறு நாடகங்கள் என்ற வித்து தான் வருங்காலத்தில் ஆலமர விருட்சமாக இருக்கும். அதனுல் அப்படிச்சொல்லாதே. கூத்துக்களால் அறி வை வளர்க்கிறேன். அறிவுரைகள் பல தருகின் றேன். சீர்திருத்தக் கருத்துக்களை மக்களின் சிறு மதியிலே புகுத்தப் பார்க்கிறேன். சீரிய வாழ்க்கை வாழ வழி வகைகள் சொல்லித்தருகிறேன். திட்டங்கள் சுயமாக தீட்டவும், அரசாங்க திட்டங்களுக்கு உதவிகள் புரியவும் நாம் எவ்வளவு கடமைப்பட்டவர்கள் என்பதை படம் பிடித்து காட்டுகிறேன். எதற்கு? வளம் பெற, வாழ்வு மலர, திட்டங்கள் பலனளிக்க, பசி, பஞ்சம், பட்டினி, பிணி ஒழிந்திட, ஜாதி பேதம் அழிந்திட, உயர்வு தாழ்வு அகன்றிட, சமத்துவமும், சகோதரத்துவமும் நிலைத்திட, சுயநல போக்கு ஒழிந் திட நாம் என்ன என்ன செய்யவேண்டும். ஏன் செய்யவேண்டும் என்பதை நாடகத்தின் மூலம் நம் கிராம மக்களுக்கு அறிவிக்க முயன்ற மட்டும் பாடுபடு கிறேன்.

அழகப்பன். முத்து, அவன் செய்யும் சேவை எல்லா கிராமங்களுக்கும் மிகமிக தேவை. பின்னடைந்தவர் கள் ஏழை மக்கள். புண்ணடைந்த அவர்களின் பேதலித்த உள்ளத்திலே உற்சாகம் வளர்ந்திட, உன்னத கருத்துக்களால் நன்மை பெற, நல்வழி தேட நாடகம் தான் சிறந்த சாதனம். இன்னும் கருத்துச் செறிந்த, உயர்ந்த சினிமா படங்களையும் அவர்களிடையே காட்டுவதால் ஒற்றுமையை வளர்க்க லாம், ஏரவஞ்சனையை ஒழிக்கலாம். அன்பை வளர்க் கலாம், ஆணவத்தை அகற்றலாம். இதனுல் மக்க ளையும் திட்டத்திற்கு உதவ அழைக்கலாம். சுயமாக திட்டம் தீட்டவும் செய்யலாம். அரசாங்கத்தின் ஆணைக் கடங்கிய **பஞ்சாயத்து** ஒன்றை அமைத்துவிட்டால் நம் கிராமம் வளத்தோடு குலுங்கும்.

ஆதிமூலம். உண்மைதான். ஒவ்வொருவரும் பாடு வது நல்லது தான். அம்முறைதான் கிராம நல் வாழ்வுக்கு சிறந்த வழிகாட்டியாகும். அதனுல் நல் வழியும் பிறக்கும்.

பாண்டியன். மேலும் கிராம மக்கள் அன்னத்தைப் போன்றவர்கள். நல்லவைகளையே பின் பற்றி நடப்ப வர்கள். ஆனுல், நகரவாசிகளோ ஆட்டு மந்தை கூட்டம் போன்றவர்கள். நாகரிகச் சேற்றில் விழுந்து புரளுபவர்கள்.

செங்கமலம். (குடிசையை விட்டு வெளியே வந்து) அண்ணு இன்னிக்கு கூட ஏதோ நாடகம் நடக்கப்போவுதுன்னு சொன்னையே. அதுக்கு நீ போகலே . . .

பாண்டியன். ஆமாம் போகனும். நீ வரலேயா செங் கமலம். முத்து, அழகா நீங்களும் கிளம்புங்க போகலாம்.

செங்கமலம். அண்ணு நான் கண்ணம்மாவை அழைச்சிக் கிட்டு நாடகத்திற்கு வர்ரேன் நீங்க போங்க . . .

முத்துவேலன். என்ன நாடகம் பாண்டியா ?

பாண்டியன். "வளம் பல பெற" என்பது நாடகத்தின் பெயர். கிராமப் புனர் வாழ்விற்கு எவை தேவை என்பதை சித்தரிக்கும் நாடகம். அப்பா நீங்க வரலீங்களா ?

ஆதிமூலம். நான் கொஞ்ச நேரம் கழிச்சு வரேன், நீங்க போங்க.

(பாண்டியன், அழகப்பன், முத்துவேலன் மூன்று பேரும் போதல். செங்கமலம் கண்ணம்மாளின் வரவுக்காகக் காத்திருப்பது.)

காட்சி 2.

இடம் : செல்வநாயகத்தின் வீடு.

பாத்திரங்கள் : செல்வநாயகம், கண்ணம்மா, முனியன்

(வீட்டின் உள்ளே கண்ணம்மா அலங்காரம் செய்துகொள் கிருள். அப்போது........)

செல்வநாயகம். கண்ணம்மா . . . .கண்ணம்மா . .

முனியன். "சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ ?" என்ன எஜமான் கூப்பிட்டீங்களா?

செல்வநாயகம். வாய்யா கவிஞரே . . . எய்யா விளக்கு வைக்கிற நேரத்திலே அழுவுற . . . .

முனியன். நான் அழுவலேயே எசமான் . . .

செல்வநாயகம். இப்போ ஏதோ இழுத்துக்கிட்டே வந்தேயே.

முனியன். (அசட்டு சிரிப்போடு) ஓ . . அதுங்களா பாடினேனுங்க . . . .

கண்ணம்மா (தலையிலே பூ வைத்தபடியே) என்னப்பா? கூப்பிட்டீங்களா ?

செல்வநாயகம். (அலங்காரத்தை பார்த்தபடி) எங்கேம்மா கிளம்பிட்டே? இந்த நேரத்திலே . . .

கண்ணம்மா. இன்னிக்கு தைப் பொங்கலாச்சே அப்பா . . . . சந்தை திடல்லே ஏதோ நாடகமாம். சல்லி காளை போட்டி கூட இருக்குதாம்பா. அதைப் பாக்கத்தான் கிளம்பிக்கிட்டிருக்கிறேன்.

செல்வநாயகம். நமக்கெதுக்கும்மா தைப் பொங்கலெல்லாம். அது விவசாயிகளுக்குத் தானே முக்கியம்.

முனியன். அதுலேயும் மாடுகளுக்குத்தான் முக்கியம். கரும்பு திங்கறவங்களுக்குத் தான் அந்த திருவிழா நாமதான் வேளாவேளைக்கு சோத்த திங்கறோமே !

கண்ணம்மா. என்ன ? தைப் பொங்கல் நமக்கெதற்கா? அப்பா பொங்கல் தமிழர் வாழ்விலே வரும் திருவிழா. அதுலேயும் கிராமத்திலே வசிப்பவர்கள் தைப் பொங்கல் கொண்டாடலேன்னு அதை விட அவமானம் வேறு எதுவுமில்லே. எப்படியப்பா நா கூசாமே உங்களால் சொல்ல முடிஞ்சுது . . . . இதுக்கு . . . .

முனியன். நாக்க புடிங்கிட்டு சாகலாமே . . . . . .

செல்வநாயகம். டேய் . . சரிதான் வரவர நீ மிஞ்சிக்கிட்டே போறே. ஏதோ தாயில்லாத பொண்ணு வாயில்லாத பூச்சி ஆச்சேன்னு தனி அன்பு காட்டின்னு நீ என்னுன்னு அளவுக்கு மீறிக்கிட்டே போறே. உம், அ ர சரி தனியா எங்கேயும் போகாதே . . . என்ன ?

கண்ணம்மா. இல்லேப்பா செங்கமலத்தோடத்தான் போறேன்.

செல்வநாயகம். என்னது . . . செங்கமலத்தோடையா ? அந்த அன்னக்காவடி ஆதிமூலத்தின் மகளுடவா ? சே.....சே....அப்புறம் நம்ப அந்தஸ்து என்னுறது.? நம்ம கௌரவம் என்னுறது? அவரும் அவ அப்பனும் வயல்லே வேலே செய்யறவங்க, நீயோ வட்டிக்கடை வெச்சு வரவுலே கண்ணுயிருந்து செலவுலே சிக்கனத்தையும் கொண்ட செல்வந்தர் செல்வநாயகத்தின் செல்லக்கிளி, செல்வபுதல்வி, செல்ல மகள்.

முனியன். செல் . .செல் . . .செல்ல............

கண்ணம்மா.—போதும் அப்பா போதும். இந்த மாதிரியெல்லாம் வித்தியாசம் பார்க்காதீங்க. அவங்க கையிலே பணமில்லே. அதனலே அப்படியிருக்காங்க. இந்த மாதிரி உயர்வு தாழ்வு பாத்துத்தான் உயர்ந்த பண்பாடும் படுகுழியிலே புதைஞ்சு கிடக்குது. அதனலேதான் நாட்டிலே வஞ்சனையும், வறுமையும், தீண்டாமையும், வேண்டாதவன் என்ற மனப்பான்மையும் மலிஞ்சு கிடக்குது. எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஒரு குலம், எல்லோருக்கும் ஓர் நீதி என்ற பரந்த எண்ணம் கொள்ளவேண்டிய நீங்க இதிலே ஏற்றத் தாழ்வு பார்ப்பதாலே என்ன பயன் கிட்ட போகிறது ?

(முனியன் படபட வென்று கைகளைத் தட்டுதல்.)

செல்வநாயகம். டேய் . . ஓ . . . அப்படியா ? இதையெல்லாம் யார்கிட்டே கத்துக்கிட்டு வந்தே. அந்த செங்கமலந்தான் சொல்லிக்கொடுத்திருப்பா. அவளுடைய அண்ணன் இருக்கானே, பாண்டியன் அவன் அவளுக்கு மேலே. இதுக்கு ஒரு வழிதேடறேன். அதுசரி நீ என்னமோ ஊர் பிள்ளைகளையெல்லாம் கூட்டி வெச்சுக்கிட்டு ஏதோ சொல்லிக் கொடுத்துக்கிட்டுயிருக்கையாமே ?

கண்ணம்மா. கிராம பிள்ளைகளின் அறிவை வளர்க்க படிப்பு சொல்லிக்கொடுக்கிறேன். இதில் என்ன தப்பு இருக்கிறது அப்பா ?

செல்வநாயகம். உனக்கு யார் படிப்பு சொல்லிக்கொடுத்தாங்க ? நான்தானே உன்ன படிக்கவெச்சேன். என் பணம் தானே செலவழிஞ்சது. நீ என்னுடான்னு பணத்தோடயிருக்கிற என்னையும் பண்டார மாகு என்கிற போலிருக்குது.

கண்ணம்மா. அப்பா நான் ஒன்றும் அப்படியெல்லாம் நெனைச்சதே கிடையாது. ஏதோ நம்மாலே முடிஞ்சு வரைக்கும் பிறருக்கு உதவி செய்யணும். மத்தவங்களுக்கு வழிகாட்டியாக வாழணும் என்ற எண்ணத்திலேதான்.

செல்வநாயகம். (குறுக்கிட்டு) உஸ் . . .சரி . சரி. வாயை மூடு . . .

கண்ணம்மா. அப்பா அப்போ நான் போயிட்டு சீக்கிரமா வர்ரேன்.

செல்வநாயகம். போ . . .போ . . டே முனியா குழந்தைகூட போடா ?

முனியன்.—நாடகம் பாக்கவாங்க . . . .

செல்வநாயகம்.—அட சீ . . . . .

(கண்ணம்மா போதல். முனியன் பின் தொடருதல்.)

காட்சி 3.

இடம் : அழகப்பனின் கோழிப்பண்ணை

பாத்திரங்கள் : அழகப்பன் சங்கிலி, நல்லப்பன், மலையப்பன்.

[நல்லப்பன், முத்துவேல், மலையப்பன் மூவரும் அழகப்பனைத் தேடி கோழிப்பண்ணைக்கு வருதல்.]

நல்லப்பன். என்ன அழகப்பா எப்படியிருக்கே ?

அழகப்பன். அடேடே வாங்க வாங்க . . .ஏதேது இவ்வளவு தூரம் ?

சங்கிலி. சும்மா உன்னே பாத்துட்டு போகலாம்னுதான் வந்தோம். அது சரி பண்ணையெல்லாம் எப்படி நடக்குது ?

அழகப்பன். ஏதோ நடக்குது. இப்போ கோழிப்பண்ணையுடன் தேனீ வளர்ப்பும் நடத்துகிறேன்.

நல்லப்பன். அழகப்பா பெருமைக்காக சொல்றேன்னு நெனைக்காதே. உண்மையிலேயே உன்ன மாதிரியே ஒவ்வொரு கிராம மக்களும் கோழிப்பண்ணை, ஆட்டு பண்ணை, தேனீ வளர்ப்பு இவைகளை வைத்து வளர்ப்பதாலே உபரி வருமானமும் கிடைக்கும் இல்லையா ?

அழகப்பன். நீங்க சொல்றது ரொம்ப சரியானதுதான். ஆனால் விவசாயிகள் தான் அக்கரை காட்டறது இல்லே. நல்லா, விவசாயிகளின் பலபேர் ஏழைகளாகவே யிருக்காங்க. அதனாலே அவங்களாலே கோழி, ஆடு இவைகளை வைத்து வளர்க்க முடியலே.

சங்கிலி.—அட நான் கூட இப்ப ஆடு வளர்ப்பு தொழில் செய்துக்கிட்டிருக்கேன் அழகப்பா.

நல்லப்பன். நம்ம மலையப்பன் கூட மண்பாண்டத் தொழில் செய்கிறானே. அந்த தொழில்கூட அழகப்பனுடைய அப்பாருதான் செய்துக்கிட்டிருந்தாரு. அப்புறம் அழகப்பன் தான் மலையப்பனுக்கு அந்த தொழில்லே ஈடுபாடு அதிகமிருக்கறதாலே அவங்கிட்டே கொடுத்திட்டாரு.

அழகப்பன். நல்லா, சங்கிலி ஒவ்வொருவருக்கும் விருப்பமான தொழிலே செய்ய நாம் ஆசைப்படவேண்டும். அதனால் வளம் பெருகும். அதை ஒவ்வொரு கிராமத்திலேயும் செயல்படுத்த வேண்டும். அதற்குத் தான் அரசாங்கத்தார் உதவி பெற்ற பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படுகின்றன.

நல்லப்பன்.—அப்படின்னு என்ன அழகப்பா ?

அழகப்பன்.—அதாவது " பஞ்சாயத்து நிர்வாகம் " என்ற பேரில் பஞ்சாயத்தின் சட்டப்படி ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் இப்பொழுது அமைக்கப்பட்டு வரும் புதிய உள்ளாட்சி நிர்வாக அமைப்பு முறையைக் குறிக்கும் மொத்தம் மாநிலத்தில் 374 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கும். இவற்றிற்காக 21 மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் இருக்கும்.

சங்கிலி.—இதனாலே கிராமங்களுக்கு என்ன பயன் கிடைக்கும் ?

அழகப்பன்.—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு தன்னுடைய பிரதேசத்திற்கு என்று ஓர் அபிவிருத்தி திட்டத்தை ஒவ்வொரு பஞ்சாயத்து நிர்வாகமும் தானே தயாரிக்கும். அந்த திட்டத்தில் ஐந்தாண்டுக் கால வரவு செலவுத் திட்டம், வேளாண்மை, தொழில், சாலைப் போக்குவரத்து கல்வி சுகாதாரம் மற்றும் பற்பல வழிகளில் கிராம நலத்திற்காக சேவை புரிவது.

மலையப்பன்.—இதற்கு அரசாங்கம் ஒரு உதவியும் புரியாதா அழகப்பா ?

அழகப்பன்.—ஏன் இல்லாமல் இல்லே. பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டத்தில் கண்டுள்ள படி விவசாய மானியங்கள் அளிப்பது, தேசீய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பணியாற்ற விரும்புவோருக்கும் வேலையளித்தல், அரசாங்க விதைப் பண்ணைகளில் தயாரிக்கப்படும் தரமான பொறுக்கு விதைகளை பணத்திற்கு அளிப்பது. அப்போதைக்கப்போது பஞ்சாயத்துக்கு தேவையானதை அளித்தல்.

சங்கிலி.—அப்படியென்றால் கிராம பஞ்சாயத்து கிராம மக்களுக்கு உதவுவதற்காகவே அமைக்கப்படுகிறது இல்லையா ?

அழகப்பன்.—ஆமாம், ஒவ்வொருவருக்கும் தெரிந்த தொழிலை செவ்வனே நடத்த ஊக்கமும், ஆக்கமும் தருகிறது. கிராமத்தை வளர்ச்சி பெறச் செய்ய, பாடுபடுகிறது. நம் கிராமத்திற்கும் பஞ்சாயத்து முறையைக் கொண்டு வர ஏற்பாடு செய்ய நானும் பாண்டியனும் எண்ணியுள்ளோம்.

நல்லப்பன் .—மலையப்பா, இவங்களெல்லாம் ஒவ்வொரு விதத்திலே நமக்கு வழிகாட்டிகள். . .

சங்கிலி.—உண்மை தான் நல்லா. . .இவங்களை பாத்து நாமும் நடக்கணும். அவங்க சொல்ற படி கேக்கணும். நாம மட்டுமிம்மல்ல; மற்ற கிராம மக்களும் நடந்தா கிராமமும் செழிக்கும், தொழில்களும் வளரும். செல்வமும் பெருகும். இல்லையா அழகா ?

அழகப்பன்.—ஆமாம் நீங்க வந்த விஷயம் என்ன அதை சொல்லவேயில்லையே ?

மலையப்பன்.—அதான் சொன்னேம்மே இந்தப் பக்கமா வந்தோம் உன்னையும் பாத்துகிட்டு, பண்ணையையும் பாத்துக்கிட்டு போகலாமுன்னு இங்கே வந்தோம் அப்போ நாங்க கிளம்பரோம் அழகா. . .

அழகப்பன்.—நல்லா போயிட்டு வாங்க.

காட்சி 4.

இடம் : ஆதிமூலத்தின் வீடு.

பாத்திரங்கள் : முத்துவேலன், பாண்டியன்.

முத்துவேலன்.—என்ன தம்பி எழுதிக்கிட்டு யிருக்கே ?

பாண்டியன்.—ம், அதுவா, ஒரு கட்டுரை எழுதிகிட்டு இருக்கேன் அண்ணு.

முத்துவேலன்.—எதுக்காக தம்பி எழுதரே ?

பாண்டியன் .—தமிழ் நாட்டு அரசாங்கத்தாராலே நடத்தப் படும் ஒரு பத்திரிகையிலே ஒரு கட்டுரைப் பரிசுத் திட்டம் நடத்தராங்க. அந்தப் பத்திரிகைக்காகத் தான் எழுதரேன்.

முத்துவேலன்.—தம்பீ, வீணுக பத்திரிகைகளையெல்லாம் ஏன் வரவழைக்கிறே. அதனுலே நமக்கு பணம்செல வாகலையா ? அந்தச் சிறு பணம் யிருந்தா. . .

பாண்டியன்.—அண்ணு அப்படிச் சொல்லாதீங்க அந்த பத்திரிகை எவ்வளவு சிறந்த பத்திரிகையினு உங்க ளுக்குத் தெரியுமா அண்ணு ? கிராம மக்களின் வாழ்வுக்காக பலவகையிலே அது உதவுது. நல்ல முறைகளை நமக்கு எழுத்து மூலம் எடுத்து தருது நீங்க வேண்டுமானுலும் படிச்சுப் பருங்க. அப்புறம் சொல்லுங்க. . . .

முத்துவேலன்.— நானும் நீ வாங்கற எல்லா பத்திரி கைகளையும் படிச்சுக் கிட்டுத் தான் வரேன் தம்பி. ஆனு நீ எழுதறதைப் பற்றிக் குறை சொல்ல வரலே. நீயும் ஏதாவது வேலை செஞ்சா நம் வரவு உயருமேன்னுதான் சொல்றேன். ஆமாம் தம்பி இப்போ எழுதரையே இதுக்கு ஏதாவது சன்மானம் தருவாங்களா. . . அல்லது . . .

பாண்டியன்.—அண்ணு, கட்டுரை நல்லாயிருந்தா எடுத்துக் கிட்டுப் பணம் தருவாங்க, ஆனு நான் பணத்துக் காக ஆசைப்பட்டு எழுதலே அண்ணு. . . . கிராம மக்கள் வாழ்வு வளம் அடைய, "பஞ்சாயத் தும், மேழிச் செல்வமும்" என்ற தலைப்பிலே உணவு உற்பத்திக்கு ஆதாரமான விவசாயத்தைப்பற்றியும் அதற்காக பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மேற்கொள்ள வேண்டிய பொறுப்புகள் என்ன என்பதைப் பத்தியும் எழுதறன்.

முத்துவேலன்.—ஆமாம் ஒரு தரம் ஏதோ நாகடப் போட்டி யின்னு எழுதினியே. . அது என்ன ஆச்சு தம்பீ. . .

பாண்டியன்.—இன்னும் விபரமொண்ணும் தெரிலே அண்ணு. . . கட்டாயமாக என் நாடகம் தேர்ந் தெடுக்கப்படும்.

முத்துவேலன்.—தம்பி நான் சொல்றேனு கோவிச்சுக் காதே நீயும் ,என்னேடு சேந்து தொழில் செய்யுனம்.

பாண்டியன்.—ஏன் இப்ப மட்டும் நான் வேலை செய்ய லையா அண்ணு ? எழுத்தினலே உன்னத கருத்துக் களை வடித்துக் கொடுப்பதும் ஓர் சிறந்த தொழில் தான் அண்ணு ! நாடகத்தின் மூலம், கிராமத்தில் உள்ள மக்கள் எப்படி பாடுபட வேண்டும், அரசாங்கத் திட்டங்களுக்கும், மற்ற செயல்களுக்கும் கிராம மக் கள் என்னன்ன செய்ய வேண்டும் என்பதை நடித்து காட்டி நல்லறிவை ஊட்டி, அவர்கள் அறி யாமையை அகற்றி, அறிவை வளர்க்கிறேன் அண்ணு.

முத்துவேலன்.—உம், என்னமோ போ. . . நன்மை என்ன கிடைக்குது. . . எப்போ கிடைக்க போவுதோ ?

பாண்டியன்.—ஏன் அண்ணு கிடைக்காது. . . கூடிய விரைவில் நம் கிராமத்தில் விடிவெள்ளி தோன் றிடும். அறிவு பெற்ற மக்களின் விழிப்பால், கிராமம் செழிப்படையும். அது மற்றமற்ற கிராம மக்களுக்கு நன்மைபோல் உயர்வு காண அழைப்புக் குரலாக மாறி ஒலிக்கும். பின் அவர்களும் நம்மைப் போல் உழைப்பார்கள். அதனல் வாழ்வில் காணு வோம் பெரு நன்மை. கிராம இல்லந் தோறும் இன்ப வாழ்வு ! தரித்திர வாழ்வில் தளர்ச்சிக் கண்டவர் களுக்கு வாழ்வில் மறுமலர்ச்சி !

முத்துவேலன்.—எப்படி நடக்கப்போவுதோ. . .?

பாண்டியன்.—புதிய பஞ்சாயத்துக்கு உதவ அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. நம் கிராம மக்கள் ஊரை உயர்த்தும் திருப்பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருப்பதையும் நீ காண்கிருய் இல்லையா. அதற்காக, அராசாங்கத்துக்கு நானும் அழகப்பனும் எழுதி போட்டிருக்கிறேம். விரைவிலே நம் கிராமம் செழிப்பு காணும். . . செல்வம் கொழிக்கும்.

முத்துவேலன்.—(சலிப்புடன்) உம் உன்னையும் என்னைப் போல குடிசைத் தொழில் செய்யச் சொல்றேன். . ஆன. . .

பாண்டியன். —அண்ணு. . .மீண்டும் மீண்டும் என்னை ... (என்ன சொல்வது என்று தெரியாமல் திணறுதல்)

முத்துவேலன்.—சரி. . .சரி.. . .

(முத்துவேலன் வெளியே போதல். பாண்டியன்மீண்டும் எழுத ஆரம்பித்தல்)

[அடுத்த இதழில் முடியும்]

கிராம நலம்-
பகுதி-௨. பஞ்சாயத்து-அரசினர் இதழ்

GRAMA NALAM PART II PANCHAYAT GAZETTE

தேசிய வளர்ச்சிப் பணித் திட்டம் ஒப்படைக்கப்பட்ட II-வது தொகுதியின் பஞ்சாயத்து யூனியன்களின் பொருளாதார, கணக்கு நடைமுறைகள் பற்றிய விளக்கம்.

Entrustment of National Extension Service Scheme of Community Development under section 66 of the Madras Panchayats Act, 1958, to the second batch of Panchayat Unions—Instructions regarding financial and accounting procedure.

கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை நெ. 838-ல், சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப் பணியை, சில விதிகளுக்குட் பட்டு, கீழ்க் குறித்தவாறு மூன்று தொகுதிப் பஞ்சாயத்து யூனியன் களிடமும் ஒப்படைக்க அரசாங்கம் ஆணைகள் பிறப்பித் துள்ளது.

முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள் 11-4-61.
இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள் 1-7-61.
மூன்ருவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள் 1-1-62.

கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 1961 ஆண்டு மார்ச் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 841-ல், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப் பட்ட சமுதாய அபிவிருத்தித் திட்டங்களிலும் மேற்குறித்த தேதிகளில் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப் படாத சமுதாய அபிவிருத்தித் திட்டங்களிலும், கிராம அபி விருத்தி-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1752-ன் படி, 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம்தேதி முதல் தேசிய வளர்ச்சிப் பணித் திட்ட வேலை ஒப்படைக் கப்பட்ட இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன் களிலும் கைக்கொள்ளப்பட வேண்டிய பொருளாதார நடைமுறைகளும், கணக்கு முறைகளும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

மேற்படி ஆணை 841-ல், இரண்டு முதல் ஐந்து வரை உள்ள பாராக்களில் பிறப்பிக்கப்பட்டுள்ள விதி முறைகள், 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியிலிருந்து, இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள 129 இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள் விஷயத்தில் பொரு ந்துவனவாகும் என்று அரசாங்கம் மறு முறையும் வலி யுறுத்துகிறது.

இணைப்பு

வரிசை எண்.	பஞ்சாயத்து யூனியன் பெயர்.
	வடார்க்காடு மாவட்டம்
1	கணியம்பாடி.
2	காவேரிப்பாக்கம்.
3	நெமிலி.
4	சோளிங்கபுரம்.
5	திருப்பத்தூர்.
6	வாலாஜா.
7	சேத்துப்பட்டு.
8	செய்யாறு.
9	பெரணமல்லூர்.
	தென்னர்க்காடு மாவட்டம்
10	காணை.
11	கோலியனூர்.
12	மரக்காணம்.
13	உளுந்தூர்ப்பேட்டை.
14	குறிஞ்சிப்பாடி.
15	மங்களூர்.
16	மேல் புவனகிரி.
17	நல்லூர்.
18	பறங்கிப்பேட்டை.
19	தியாக துர்க்கம்.
	செங்கற்பட்டு மாவட்டம்
20	கும்முடிப்பூண்டி.
21	காஞ்சிபுரம்.
22	கிட்டாங் குளத்தூர்.
23	குன்றத்தூர்.
24	மதுராந்தகம்.
25	மீஞ்சூர்.
26	பூண்டி.

27 பறங்கிமலே.
28 ஊத்துக் கோட்டை.
29 வில்லி வாக்கம்.

கோயமுத்தூர் மாவட்டம்

30 அம்மாப்பேட்டை.
31 பவானி.
32 பவானி சாகர்.
33 தாராபுரம்.
34 காங்கேயம்.
35 கொடுமுடி.
36 குண்டாடம்.
37 முடக்குறிச்சி.
38 மூலனூர்.
39 துக்கநாய்க்கன் பாளையம்.
40 வெள்ளக் கோயில்.
41 கிணத்துக் கடவு.
42 லட்சுமி நாய்க்கன் பாளையம்.
43 பொங்கலூர்.
44 சூலூர்.
45 தொண்டா முத்தூர்.
46 உடுமலேப் பேட்டை.

மதுரை மாவட்டம்

47 ஆத்தூர் I (செம்பட்டி).
48 ஆத்தூர் II (ரெட்டியார் சத்திரம்).
49 வத்தலகுண்டு.
50 திண்டுக்கல்.
51 கொடைக்கானல்.
52 நிலக்கோட்டை.
53 பழனி.
54 வேட சந்தூர்.
55 ஆண்டிப்பட்டி.
56 போடி நாய்க்கனூர்.
57 சென்னம்பட்டி.
58 கள்ளிக்குடி.
59 சேடப் பட்டி.
60 திருப்பரங்குன்றம்.

நிலகிரி மாவட்டம்

61 குன்னூர்.
62 கூடலூர்.
63 கோத்தகிரி.

இராமநாதபுரம் மாவட்டம்

64 பொகளூர்.
65 தேவகோட்டை.
66 கடலாடி.
67 காளேயார் கோவில்.
68 கல்லல்.
69 கண்ணன்குடி.
70 மானுமதுரை.
71 மண்டபம்.
72 முதுகுளத்தூர்.
73 ராஜசிங்க மங்கலம்.
74 இராமநாதபுரம்.
75 இராஜபாளேயம்.
76 சாத்தூர்.
77 வெம்பாக் கோட்டை.
78 விருதுநகர்.
79 வத்திராயிருப்பு.

சேலம் மாவட்டம்

80 பருகூர்.
81 மேச்சேரி.
82 மொரப்பூர்.
83 பாப்பிரெட்டிப்பட்டி.
84 பெண்ணுகரம்.
85 வேப்பன பள்ளி.
86 ஊத்தங்கரை.
87 ஆத்தூர்.
88 பரமத்தி.
89 சேந்தமங்கலம்.
90 தலவாசல்.
91 திருச்செங்கோடு.
92 வாழப்பாடி.

தஞ்சாவூர் மாவட்டம்

93 ஆனேக்காரன் சத்திரம்.
94 கோட்டூர்.
95 குத்தாலம்.
96 கொடவாசல்.
97 முத்துப்பேட்டை.
98 நாகப்பட்டினம்.
99 செம்பனூர் கோவில்.
100 ஆவுடையார் கோவில்.
101 அம்மாப்பேட்டை.
102 ஒரத்தநாடு.
103 பூதலூர்.
104 சேது பாவா சத்திரம்.
105 திருவிடமருதூர்.
106 திருப்பனந்தாள்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

107 ஆண்டி மடம்.
108 அரியலூர்.
109 மணி கண்டம்.
110 பெரம்பலூர்.
111 தாத்தய்யங்கார் பேட்டை.
112 துறையூர்.

113 திருமானூர்.
114 உப்பிலியா புரம்.
115 அரவக்குறிச்சி.
116 கரம்பக்குடி.
117 கீரனூர்.
118 தாந்தோணி.

திருநெல்வேலி மாவட்டம்

119 கருங்குளம்.
120 மேல நீலிதநல்லூர்.
121 புதூர்.
122 ஒட்டப்பிடாரம்.
123 சாத்தன் குளம்.
124 வாசுதேவ நல்லூர்
125 உடங்குடி.
126 ஆலங்குளம்.
127 ராதாபுரம்.
128 தென்காசி.
129 வள்ளியூர்.

(கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 28—6—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1781)

பஞ்சாயத்துக் கூட்ட நாட்களை கிராம சேவக்குகளுக்கு அறிவித்தல்.

Panchayat meetings—Intimation to Gramasevaks.

1960-ம் ஆண்டு நவம்பர் மாதம் கடலூரில் (தென்னார்க்காடு) கூடிய கிராம சேவக்குகளின் இரண்டாவது வருடாந்தரக் கருத்தரங்கத்தில், பஞ்சாயத்துக் கூட்டங்களில் கிராம சேவக்குகள் கலந்து கொள்வதற்காக, பஞ்சாயத்துக் கூட்டத் தேதிகளை சம்பந்தப்பட்ட கிராம சேவக்குகளுக்குத் தெரிவித்தல் நலம் என்று யோசனை கூறப்பட்டது. கிராம அபிவிருத்தித் துறையின் 1960-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 9-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 644-ல் கிராம நிலையில், கிராமப் பஞ்சாயத்துக்கள், திட்டத்தைச் செயல்படுத்தும் அமைப்புக்கள் என்ற முறையில், கிராமப் பஞ்சாயத்துக்களின் வேலைகளுக்கு கிராம அதிகாரிகள் துணையாக இருக்கவேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பஞ்சாயத்துக்கள் திட்டத்தைச் செயல்படுத்தும் அமைப்புக்கள் என்ற முறையில் பஞ்சாயத்துக்கள் செயல்படும் பொழுது, கிராம சேவக்குகளின் பணியும் அந்த வகையில் பயன்படும் என்று அரசாங்கம் கருதுகின்றது. அதன்படி, அறிக்கைப் பிரதிகளையும், கூட்ட நிகழ்ச்சி நிரலையும், கிராம சேவக்குக்களுக்கு அனுப்பி வைக்க மாவட்டக் கலெக்டர்கள் அவர்களுடைய பகுதியில் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் பஞ்சாயத்துக் கூட்டங்களுக்குக் கிராம சேவக்குக்கள் தவறுமல் ஆஜராகவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படவேண்டியதில்லை.

(கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 23—2—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 474)

மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழுவிற்கு (State Informal Consultative Committee) மேற்கொண்டு உறுப்பினர்கள் நியமனம்.

Appointment of additional members to State Informal Consultative Committee.

மாநில சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் ஆக்கப் பணிஊழியர்களுக்கும் போதுமான பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக, மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் தொகையை அதிகமாக்கும் பிரச்சினை குறித்து அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருந்தது. முன்பு இருப்பவர்களோடு இப்பொழுது கீழ்க்குறிப்பிட்டவர்களையும் மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழுவில் பணியாற்ற உறுப்பினர்களாக நியமித்து அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

1. **ஸ்ரீ பி. இராமச்சந்திரன், எம். எல். ஏ.,**
2. **ஸ்ரீ பி. ஜி. கருத்திருமன், எம். எல். ஏ.,**
3. **ஸ்ரீ எஸ். நாகராஜ மோனிகார், எம். எல். ஏ.,**
4. **ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம், எம். எல். ஏ.,**
5. **ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார், எம்.எல்.ஏ.,**
6. **ஸ்ரீ எம். சேஷாச்சாரியார், எம். எல். ஸி.,**
7. **ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலம், எம். எல். ஸி.,**
8. **ஸ்ரீமதி அம்புஜம்மாள், தலைவர், மாநில சமூக நல ஆலோசனை போர்டு, சென்னை.**

இவர்கள் 1962-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி வரையிலோ அல்லது மாநில சட்ட மன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள், அந்தப் பதவியிலுள்ளவரையிலோ எது முன்னால் காலாவதியாகிறதோ, அந்தத் தேதிவரையில், இந்தக்குழுவில் அங்கம்வகிப்பார்கள். இவர்கள்மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழுக் கூட்டங்களுக்கு வருவதற்காகும் பயணப் படிச் செலவு சம்பந்தமான விதி முறைகளும், பயணப்படிச் செலவுகள் பற்று வைக்கப்பட வேண்டிய கணக்குத் தலைப்பும், அவ்வப்போதைய திருத்தங்களின் படி உள்ள பொதுத் துறையின் (கிராம அபிவிருத்தித் திட்டங்கள்) 1957-ம் வருடம் நவம்பர் மாதம் 29-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 3336-ல் மற்ற உறுப்பினர்களைப்போன்றே இவர்களுக்கும் இருக்கும்.

(கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 28—6—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1780)

வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் (பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள்), வளர்ச்சிப்பணி அதிகாரிகள் ஆகியோருடைய சுற்றுப் பயண நிகழ்ச்சி நிரல் பிரதிகளை பஞ்சாயத்து யூனியன்கள் மன்றத் தலைவர்களுக்கு அனுப்புதல்.

Tour programme of Block Development Officers (Panchayat Union Commissioners) and Extension Officers—Sending of copies to Chairmen of Panchayat Union Councils.

வட்டார அபிவிருத்தி அதிகாரி (பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்), பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்திலுள்ள வளர்ச்சிப் பணி அதிகாரிகள் ஆகியோரின் சுற்றுப் பயண நிகழ்ச்சி நிரல், பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவருக்கு, முன்னதாக அனுப்பிவைக்கப்பட வேண்டுமா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது. அத்தகைய நிகழ்ச்சி நிரல்கள் அனுப்பவேண்டியது தேவை என்று அரசாங்கம் கருதுவதால், வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் (பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள்) வளர்ச்சிப் பணி அதிகாரிகள் ஆகியோர், அவர்களுடைய சுற்றுப்பயண நிகழ்ச்சி நிரல் பிரதி ஒன்றை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்களுக்கு முன்னதாகவே தவறாமல் அனுப்பிவைக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது.

(கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 13—2—61 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 5432)

மாநிலக் கதர்-கைத்தொழில் போர்டு உருவாக்கி செயல்படுத்தும் கிராமக் கைத் தொழில் அபிவிருத்தி திட்டங்களுக்கு முன்பணம் வழங்குதல்.

Formulation and implementation of schemes by the State Khadi and Village Industries Board—Advance—Sanctioned.

கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 1961-ம் வருஷம் எப்ரம் மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 964-ல், 1961-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து, சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் "கிராமியக் கலைகள், நுண் தொழில்கள், கைத் தொழில்கள்" பிரிவின் கீழ் வரும் திட்டங்களை, மாநிலக் கதர்-கிராமக் கைத்தொழில் போர்டிடம் ஒப்படைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், (1) "கிராமியக் கலைகள்—நுண்தொழில்கள்—கைத் தொழில்கள்" பிரிவின் கீழ் வரும் எல்லாத் திட்டங்களையும் உருவாக்கிச் செயல் படுத்துகின்ற பொறுப்பும், (2) அத்திட்டங்களுடன் தொடர்பு கொண்ட வரவு-செலவுத் திட்டங்களையும் அனுப்புகின்ற பொறுப்பும், (3) திட்ட வேலைகளின் முன்னேற்றத்தைக் குறித்து மூன்று மாதத்திற்கொருமுறை அறிக்கைகள் அனுப்பி வைக்கும் பொறுப்பும், (4) ஒவ்வொரு திட்டத்திற்கும், மூன்று மாதத்தில் ஆகின்ற செலவுகளின் அறிக்கை அனுப்புகின்ற பொறுப்பும், மாநிலக் கதர்-கிராமக் கைத்தொழில்கள் போர்டிடம் மேற்படி ஆணையின்படி, ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

மாநிலக் கதர் கிராமக் கைத்தொழில்கள் போர்டின் பொருளாதார நிலையை லகுவாக்கவேண்டியும் முதன் முறையாக இத் திட்டம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாலும், அரசாங்கம் இதுகுறித்துக் கவனமாக ஆராய்ந்த பின்னர், வட்டியில்லாத வழி வகை முன் பணமாக, கீழ்க்கண்ட தொகைகளை அங்கீகரிப்பதென்று முடிவு செய்துள்ளது:

(i) திட்டத்தில் சேர்க்கப்படாத வேலைகளுக்கு :

ரூ. 54,000 (ரூபாய் ஐம்பத்தி நாலாயிரம் மட்டும்).

(ii) திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வேலைகள் :

ரூ. 10,24,000 (ரூபாய் பத்து லட்சத்து இருபத்தி நான்காயிரம் மட்டும்).

இந்தச் செலவுகள், ஆரம்ப காலத்தில், மாநிலக் கதர்—கிராமக் கைத்தொழில்கள் போர்டால் ஆரம்பிக்கப்படும் "மாநில அரசாங்கம் அளிக்கும் கடன்களும்—முன் பணங்களும்—(f) பல் வகை—கடன்கள்—முன் பணங்கள்" என்ற தலைப்பின் கீழ், "கிராமக் கைத்தொழில்கள் நிதிக்கு முன் பணம்" என்ற துணைத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும். பின்னர், மாநிலக் கதர்—கிராமக் கைத்தொழில்கள் போர்டுக்கு, "கிராமியக் கலைகள்—நுண் தொழில்கள், கைத்தொழில்கள்" பிரிவின் கீழ் வரும் திட்டங்களை நிறைவேற்ற என்று அங்கீகரிக்கப்படும் உதவி மானியங்களின் கீழ் ஈடு செய்யப்பட வேண்டும்.

மாநிலக் கதர்—கிராமக் கைத்தொழில்கள் போர்டு, பஞ்சாயத்து யூனியன்களில் திட்டங்களை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதியிட்ட ஆணை 964-ல் கூறியுள்ளபடி, திட்டத்தில் சேர்க்கப்பட்ட வேலைகள், சேர்க்கப்படாத வேலைகள் ஆகியவற்றுக்காகும் செலவுகளைத்

தனித்தனியாக, ஒவ்வொரு மூன்று மாதத்துக்கும், மாநிலம் முழுதுக்குமான, அறிக்கைகளைத் தயாரித்து அனுப்ப வேண்டும்.

மாநிலக் கதர்—கிராமக் கைத்தொழில்கள் போர்டு "கிராமியக் கலை—நுண் தொழில்கள்—கைத் தொழில்கள்" பிரிவின்கீழ் வரும் திட்டங்களின் 1962-63 முதல் பஞ்சாயத்து யூனியன்களின் முழுமையான வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறைக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

(கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 5—7—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1864)

மாதிரி வளர்ச்சிப் பணி வட்டாரங்களாக (Pre-extension blocks) மாற்றப்பட்ட வரப்போகும் வட்டாரங்களிலிருந்து (Shadow Blocks) வட்டாரத் திட்ட அதிகாரிகள் (Block Planning officers), ரெவின்யு இன்ஸ்பெக்டர்கள் ஆகியோரைத் திரும்பப் பெறுதல்.

Withdrawal of the Block Planning Officers and Revenue Inspectors from the Shadow Blocks.

கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1616-ல், அவ்வாணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள 32 வட்டாரங்களிலும், விவசாயத்தில் மாதிரி வளர்ச்சிப் பணியைத் தொடங்க ஆணையிடப்பட்டது. அந்த ஆணையில், நான்காவது பாராவில் இந்த வேலைக்கென்று, ஒரு வட்டார அபிவிருத்தி அதிகாரி, ஒரு விவசாய வளர்ச்சிப் பணி அதிகாரி, ஐந்து கிராம சேவக்குகள், ஒரு தட்டெழுத்தாளர், ஒரு ஏவலர்(peon) வீதம் அமர்த்த, அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளது. கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 273-ன் படியும், 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 5-ம் தேதியிட்ட அதே துறையின் அரசாங்க ஆணை 1001-ன் படியும், அந்த 32 வட்டாரங்களிலும், இப்பொழுது, ஒரு வட்டாரத் திட்ட அதிகாரி, ஒரு ரெவினியூ இன்ஸ்பெக்டர், ஒரு கீழ்நிலைக் குமாஸ்தா, ஒரு ஏவலர் ஆகியோர் பணியாற்றிவருகின்றனர். கீழ்க்கண்ட 32 வட்டாரங்களிலும், வட்டார அபிவிருத்தி அதிகாரி (Block Development Officer), அல்லது பஞ்சாயத்து வளர்ச்சிப் பணி அதிகாரி (Extension Officer for Panchayats), வேலையில் அமர்த்தப்பட்டுப் பொறுப்பேற்றுக் கொண்ட உடன், வட்டாரத் திட்ட அதிகாரியையும் (Block Planning Officer), ரெவினியூ இன்ஸ்பெக்டரையும் திரும்பப் பெறவேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது :

வரப்போகும் வட்டாரம் (Shadow Block).

வடார்க்காடு மாவட்டம்

1 வந்தவாசி.
2 அனக்காவூர்.
3 கஸ்தம்பாடி.
4 திமிரி.

தென்னார்க்காடு மாவட்டம்

5 டி. வல்லம்.
6 விக்கிரவாண்டி.
7 கண்டமங்கலம்.
8 திருக்கோயிலூர்.

செங்கற்பட்டு மாவட்டம்

9 சோழவரம்.
10 திருவாலங்காடு.

கோயம்புத்தூர் மாவட்டம்

11 குடிமங்கலம்.
12 காரமடை (மேட்டுப் பாளையம்).
13 சர்க்கார் சாமக்குளம்.

மதுரை மாவட்டம்

14 தேனீ.
15 சின்னமனூர்.

இராமநாதபுரம் மாவட்டம்

16 திருப்புவனம்.

சேலம் மாவட்டம்

17 பாலக்கோடு.
18 ஓமலூர்.
19 தாரமங்கலம்.
20 நாமக்கல்.
21 மல்லசமுத்திரம்.
22 சேலம்.

தஞ்சாவூர் மாவட்டம்

23 பேராவூரணி.
24 திருவோணம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

25 அன்னவாசல்.
26 மருங்காபுரி.
27 பொன்னமராவதி.
28 புல்லம்பாடி.
29 ஜெயங்கொண்டான்.

திருநெல்வேலி மாவட்டம்

30 விளாத்திகுளம்.
31 திருச்செந்தூர்.
32 நாங்குனேரி.

கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 5-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1001-ன்படி, இரண்டாவது பாராவில் சொல்லப்பட்டுள்ள 32 வரப்போகும் வட்டாரங்களிலிருந்து ஏவலர்களும் (peons) திரும்பப் பெறப்படுவர். அவர்கள் வட்டார அலுவலகத்துக்கு நிர்ணயிக்கப்பட்ட ஏவலர் இடங்களில் ஒன்றிற்கு எதிராகக் கருதப்படுவர்.

மேற்குறித்த 32 வட்டாரங்களிலிருந்து, கீழ்நிலைக் குமஸ்தா திரும்பப் பெறமாட்டார்; அந்த மாதிரி வளர்ச்சிப் பணி வட்டாரங்களில் (pre-extention Block) அமர்த்தப்படும் துணைப் பஞ்சாயத்து அதிகாரிகளின்கீழ், (பஞ்சாயத்து வளர்ச்சிப் பணி அதிகாரிகள்) அந்த கீழ்நிலைக் குமஸ்தாக்கள் வேலைக்கு வைத்துக் கொள்ளப்படுவார்கள். கூடிய விரைவில், மேற்குறித்த 32 வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணி அதிகாரியை அமர்த்துவதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுத்துக் கொள்ளும்படி முனிசிபல் மன்றங்கள்—ஸ்தல ஸ்தாபனங்களின் மேற்பார்வையாளர் (Inspector of Municipal Councils and Local Boards) கேட்டுக் கொள்ளப்படுகிறார். பஞ்சாயத்து வளர்ச்சிப் பணி அதிகாரிகள், கீழ்நிலைக் குமஸ்தாக்கள் ஆகியோரின் சம்பளம்—படிச் செலவுகள்—கிராம அபிவிருத்தித் துறையின் 1961-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் தேதியிட்ட அறிக்கை 12682-ன் 2-வது பாராவில் கூறப்பட்டுள்ள கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

(கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 6-7-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1869)

மாநில சமூக நல போர்டு அமைப்பு-உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

State Social Welfare Board-Constituted

கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 1959-ம் ஆண்டு அக்டோபர் மீ 19-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 130-ன் படி அமைக்கப்பட்ட 'மாநில சமூக நல ஆலோசனை போர்டு' உறுப்பினர்களின் பதவிக் காலம் 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31-ம் தேதியுடன் முடிவடைகிறது. கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 20-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1433-ன்படியும், 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ந் தேதியிட்ட அறிக்கை எண் 96717-ல் அவ்வாணையில் செய்யப்பட்ட திருத்தத்தின் படியும், மாநிலமெங்கிலுமுள்ள மாதர்நலன்-குழந்தைகள் நலன் தொடர்புள்ள எல்லா நிறுவனங்களையும் திருத்தியும் இணைத்தும் அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன. இந்த ஆணையின் 7-வது பாராவின் படி, மத்திய சமூக நல போர்டின் ஆலோசனையுடன் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ந் தேதியிலிருந்து 21 உறுப்பினர்கள் (தலைவர் உள்பட) கொண்ட ஒரு 'மாநில சமூகநலபோர்டு' அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இந்த முறையில், சமூக நல போர்டு அமையும் வேலை 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ந் தேதிக்கு முன் முடியாது என்று கருதப்பட்டதால், முதலாவதாகக் கூறப்பட்ட ஆணையின்படி அமைக்கப்பட்ட 'மாநில சமூக நல ஆலோசனை போர்டு", இரண்டாவதாகக் கூறப்பட்ட ஆணையில் குறிப்பிடப் பட்டுள்ள, "மாநில சமூக நல போர்டின்' வேலைகளை மறு உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் வரையில், நிறைவேற்றி வரவேண்டும் என்று, கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 27-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1520-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னையிலுள்ள, மாநில சமூக நல போர்டின் தலைவி, மத்திய சமூக நல போர்டு தலைவருடன் கலந்தாலோசித்து, புதிய சமூக நல போர்டு அமைப்பிற்கான தம்முடைய யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

அரசாங்கம் அந்த யோசனைகளை ஆராய்ந்த பின்னர், கீழ்க்கண்டவர்களைக் கொண்ட மாநில சமூக நல போர்டை அமைத்து ஆணை பிறப்பிக்கிறது :—

தலைவர் :

(1) ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள், சென்னை.

உறுப்பினர்கள் :

(2) ஸ்ரீமதி எம். வி. ஜாதாவ், சென்னை.

(3) ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலம், சென்னை.

(4) ஸ்ரீமதி ஆர். ஏ. கோபாலசாமி, சென்னை.

(5) ஸ்ரீமதி பட்டம்மாள் அழகேசன், செங்கற்பட்டு.

(6) ஸ்ரீமதி பங்கஜம் வெங்கடாச்சாரி, வடார்க்காடு.

(7) ஸ்ரீமதி லட்சுமி நாராயண ரெட்டியார்: தென்னார்க்காடு.

(8) ஸ்ரீமதி வி. செல்லம்மாள், தஞ்சாவூர்.

(9) ஸ்ரீமதி கமலா சாரி, திருச்சிராப்பள்ளி.

(10) ஸ்ரீமதி கமலா சிவசுப்பிரமணியம், இராமநாதபுரம்.

(11) ஸ்ரீமதி புஷ்பம் நடராஜன், மதுரை.

(12) ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சிதபாதம், திருநெல்வேலி.

(13) ஸ்ரீமதி சங்கரன் பிள்ளை, கன்னியாகுமாரி.

14) ஸ்ரீமதி சாவித்திரி சண்முகம், கோயமுத்தூர்.

(15) ஸ்ரீமதி அக்கம்மா தேவி, நீலகிரி.

(16) ஸ்ரீமதி சீதாலட்சுமி ராமசாமி, சேலம்.

(17) ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி, கிராம அபிவிருத்திக் கமிஷனர், சென்னை.

(18) ஸ்ரீ கே. சுப்ரமணியம், ஐ.ஏ.எஸ்., அரசாங்கத் துணைக்காரியதரிசி (கிராம அபிவிருத்தி–தல நிர்வாகத்துறை), சென்னை.

(19) ஸ்ரீ எஸ். குஹன், ஐ.ஏ.எஸ்., அரசாங்கத் துணைக் காரியதரிசி (கல்வி–பொது சுகாதாரத்துறை), சென்னை.

(20) டாக்டர் (ஸ்ரீமதி) பி. லட்சுமி, மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு அதிகாரி, சென்னை.

போர்டுக்கு, மற்றொரு அதிகாரப்பற்றற்ற உறுப்பினரை நியமித்து, தனியாக ஆணை பிறப்பிக்கப்படும்.

இந்த போர்டின் பதவிக்காலம், இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றுண்டு காலமாகும்.

போர்டின் தலைமை நிலையம் சென்னையில் இருக்கும். எல்லா அதிகாரப்பற்றற்ற உறுப்பினர்களும்–பயணப்படியும், தினசரிப் படிச் செலவுகளையும் பெறுகின்ற விஷயத்தில் இந்த போர்டு ஒரு முதல் வகுப்புக் குழுவாகக் கருதப்படும். அதிகாரப்பற்றற்ற உறுப்பினரின் பயணப்படி, தினசரிப் படிச் செலவுகளை அளிப்பதனாலாகும் எல்லாச் செலவுகளும், "47–பல்வகைத் துறைகள்—ஜே. பல்வகை—ஏ. மாதர் நலத் துறை" என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும். மாதர் நலத் துறை இயக்குநராகிய, போர்டின் செயலாளர், அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்களின் பயணப்படிச் செலவுகளுக்கான பட்டியல்களில் எதிர்க் கையொப்பம் இடவேண்டும்.

(கிராம அபிவிருத்தி தல நிர்வாகத்துறையின் 13—7—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1951)

உணவு விவசாயத் துறையின் 1960-ம் ஆண்டு நவம்பர் மீ 16ந் தேதியிட்ட அரசாங்க ஆணை (3792)-ல் திருத்தம்.

[*Implementation of Gramasahayak Scheme—Amendment to G:O; Ms: No; 3792, Food and Agriculture, dated 16—11—60*]

[இந்த ஆணையை கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, "கிராம உணவு உற்பத்தித்திட்டம்"* என்ற தலைப்பில் தமிழ்ப்படுத்தி ஒரு தனிச்சிறு நூலாக வெளியிட்டுள்ளது.]

உணவு-விவசாயத்துறையின் 16—11—1960 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 3792-ன் இணைப்பில், 6-வது பகுதியில் 30-வது பாராவில் "ஸ்டாண்டர்டு ஏகர்" என்று இருப்பதற்குப் பதிலாக "ஏகர்" என்று திருத்திப் படிக்கவும்.

(உணவு-விவசாயத் துறையின் 29—6—61 தேதியிட்ட அறிக்கை எண் 58098)

*[கிராம உணவு உற்பத்தித் திட்டம்" என்ற நூலின் 13வது பக்கம் கடைசிப் பாராவில் குறிப்பிட்ட இடத்தில் இந்த திருத்தத்தைச் செய்து கொள்க.]

பஞ்சாயத்து வரி வசூல் வேலைகளும் தாசில்தார்களின் மேற்பார்வையும்

(*Progress of Collection of Revenues Due to the Panchayats by Village Officers—Check by Tahsildars*)

கிராம அபிவிருத்தித் துறையின் 9–8–1960 தேதியிட்ட அரசாங்க ஆணை 644-ல், பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் வரிவசூல் வேலையைக் கிராம அதிகாரிகளிடம் ஒப்படைத்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் 16–2–1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 411-ல், (பத்தாவது பாராவைப் பார்க்க) மாநில அரசாங்க நிலவரி வசூல் வேலையை மேற்பார்வையிடுவதைப் போன்றே, தாசில்தார்கள், கிராமத் தலைவர்கள்செய்யும் பஞ்சாயத்துக்களின் எல்லாவகையான வசூல்வேலைகளையும் மேற்பார்வையிட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

நிலவரி வசூலைப் பொறுத்த மட்டில், வசூல் காலத்தில் ஒவ்வொரு பிர்க்காவிலும் சில குறிப்பிட்ட இடங்களில் கேட்பு நிலையங்களை (Demand Centres) நடத்துவது இப்பொழுது பழக்கத்தில் இருந்து வருகிறது. கிராம அதிகாரிகள் இந்த நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், தாசில்தார்கள்,

வேண்டியிருந்தால் ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள் முதலியோர், வரிவசூல் வேலையின் முன்னேற்றத்தைப் பற்றித் தீர பரிசீலனை செய்து, வசூல் வேலையைத் துரிதப் படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பார்கள். இனிமேல், இத்தகைய நிலையங்களை நடத்தும் பொழுது, பஞ்சாயத்து யூனியன்கள்— பஞ்சாயத்துக்களின் வரிவசூல் வேலைகளையும் துரிதப் படுத்துவதற்காக ரெவினியூ அதிகாரிகள் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று யோசனை கூறப்பட்டுள்ளது. ரெவினியூ போர்டும் (நிலவரிப் பிரிவு) இந்த யோசனையை ஆதரித்துள்ளது.

பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் வரிவசூல் வேலை சரியாக நடைபெறத் தம் கீழ் உள்ள அதிகாரிகள் தேவையானபோதெல்லாம், மாநில அரசாங்கத்தின் நிலவரி வசூல் வேலைக்கு நடத்துவது போன்றே, இதற்கும் கேட்பு நிலையத்தை (Demand Centres) நடத்தும்படியான நிலையை உண்டாக்குவது மாவட்டக்கலெக்டர்களின் பொறுப்பாகும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது.

[கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறையின் 13—7—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1944.]

பஞ்சாயத்து யூனியன் மன்ற அமைப்பில், பஞ்சாயத்துப் பகுதிகளிலிருந்து தொத்துநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நகர மன்றத் தொத்துநோய் மருத்துவ மனைகளில் சிகிச்சை செய்தல் :

[Treatment of Patients of Infectious Diseases from Panchayat areas in the Municipal Infectious Diseases Hospitals—Procedure to be followed]

சுகாதாரத் துறையின் 3-9-1956 தேதியிட்ட அரசாங்க ஆணை 2622-ல், நகர மன்றத் தொத்து நோய் மருத்துவ மனையில், நகர மன்ற எல்லைக்கு வெளியே இருந்து வரும் நோயாளிகளுக்கான சிகிச்சை, உணவு வகைகளின் செலவுத் தொகையை, சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகம் (District Board) அல்லது பஞ்சாயத்து, சம்பந்தப்பட்ட நகர மன்றங்களுக்கு (Municipal Councils) நேரடியாகச் செலுத்தி விட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. புதியதாக அமைக்கப்பட இருக்கும் பஞ்சாயத்து யூனியன்கள், இது விஷயத்தில் கையாள வேண்டிய முறையைப் பற்றி ஒரு பிரச்சினை எழுப்பப் பட்டுள்ளது.

அரசாங்கம் இது விஷயத்தை ஆராய்ந்துள்ளது. 1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் கீழ், தொத்து நோய்த் தடுப்பு, சிகிச்சை–தொடர்புள்ள வேலைகள் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடம் விடப்பட்டுள்ளன. ஆகவே, நகரமன்றத் தொத்து நோய் மருத்துவ மனையில் சிகிச்சையளிக்கப்படும் பஞ்சாயத்துப் பகுதிகளைச் சேர்ந்த நோயாளிகளின் உணவு, சிகிச்சை முதலியவற்றுக்காகும் செலவைப் பஞ்சாயத்துக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவை யில்லை. அதனால், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் அமைக்கப்படுகின்ற வரையில், இந்தச் செலவுகளைச் சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த பஞ்சாயத்து அல்லது மாவட்டக்கழகம், சம்பந்தப்பட்ட நகர மன்றங்களுக்குச் செலுத்த வேண்டும் என்று ஆணையிடுகிறது. பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் அமைப்புக்குப் பின்னர் இது விஷயத்திலாகும் செலவுகளை ஏற்கும் பொறுப்பு அந்தப் பகுதி, தொத்து நோயாளிகளுக்கு தனிச் சிகிச்சை வசதி செய்து கொள்ளும்வரையில், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுடைய தாகும்.

[கல்வி-பொது சுகாதாரத் துறையின் 23—3—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 722.)

கிராமியக் கல்வி நிலையங்களில் சிறப்புப் பயிற்சி பெற, தகுதியுடைய கிராம சேவக்குகளுக்கு படிப்பு உதவி நிதி அளிக்கும் திட்டம் : பூர்வாங்க தேர்வுக்கு குழு அமைப்பு :

[Scheme for the grant of Scholarships to meritorious gramasevaks for advanced Courses of training in the rural institutions Committee Constituted for Preliminary Selection of Gramasevaks]

இந்திய அரசாங்க, சமுதாய அபிவிருத்தி—கூட்டுறவு அமைச்சகம், அவர்களின் 29-3-61 தேதிய கடிதத்தில், கிராமியக் கல்வி நிலையங்களில் சிறப்புப் பயிற்சி பெற தகுதியுடைய கிராம சேவக்குகளுக்கு படிப்பு உதவி நிதி (Scholarships) அளிக்கும் திட்டத்தை அங்கீகரித்துள்ளனர். அந்தத் திட்டம், தொடக்கத்தில் மூன்றாண்டுகளுக்கு, ஓராண்டுக்கு 100 பேருக்கு படிப்பு உதவி நிதி வீதமும், நடைமுறை ஆண்டுக்கு 80 பேருக்கு கிராமியக் கல்வி நிலையங்களில் வழங்கவும் வகை செய்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் நமது மாநிலத்துக்கு, மொத்தம் 21 பேருக்கு படிப்பு உதவி நிதியும் இந்த ஆண்டுக்கு 5 பேருக்கு படிப்பு உதவி நிதி அளிக்கவும் ஒதுக்கப்படுள்ளது. மேலும், மாநில அளவில் முதல் நிலையாகத் தகுதியுடைய கிராம சேவகர்களைத்

தேர்ந்தெடுக்கவும், முடிவான தேர்வுக்கு ஒரு வேலை முறையை வகுக்கவும் ஒரு குழு அமைக்க—இந்திய அரசாங்கம் யோசனை கூறியுள்ளது.

மாநில அரசாங்கம், இந்திய அரசாங்கத்தின் யோசனையை ஒப்புக்கொண்டு, கிராம சேவக்குகளின் பூர்வாங்க தேர்வுக்கென்று கீழ்க்கண்ட தேர்வுக் குழுவைஅமைத்து ஆணை யிடுகிறது :

தலைவர் :

கிராம அபிவிருத்திக் கமிஷனர், சென்னை-9

உறுப்பினர்கள் :

விவசாயத்துறை இயக்குநர், சென்னை-5.

கிராமியக் கல்வி நிலையத் தலைவர், காந்தி கிராமம், மதுரை மாவட்டம்.

இந்தக் குழு சென்னையில் கிராம சேவகர்களுக்குத் தேர்வுப் பேட்டியை நடத்தும். தேர்ந்தெடுக்கப்பட்டவர் முடிவான தேர்வுக்காக, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் படப்போகும் காந்திக் கிராமம், (மதுரை மாவட்டம்) கிராமியக்கல்வி நிலையத்தில் (Rural Instituto) நடைபெறும் தேர்வுக்கு ஆஜராக வேண்டும்.

சென்னையில் அளிக்கப்படும் தேர்வுப் பேட்டிக் குழுவில் அதிகாரப்பற்றற்ற உறுப்பினராகக் கலந்து கொள்ளும் காந்திக் கிராம, கிராமிய கல்வி நிலையத்தலைவர், அரசாங்க முதல் வகுப்புக் குழுக்களின் உறுப்பினருக்குரிய, பயணச் செலவுகள், பிற தினசரிப் படிச் செலவுகள் ஆகியவற்றைப் பெறத் தகுதி யுடையவராவார்.

[கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 22—7—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2079.]

வட்டார அபிவிருத்தி அதிகாரி அங்கீகாரம் அளிக்கின்ற கடன் தொகை அளவில் உயர்வு :

Community Development Programme—Loans and Advances—Powers of Block Development Officers to sanction loans.

கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 1961-ம் வருடம் ஜனவரி மாதம் 4-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 29-ல், ரெவினியூ போர்டு (உணவு உற்பத்தி) நிர்வகித்து வந்த புதிய கிணற்று உதவி நிதித் திட்டத்தையும் (New well Subsidy Scheme), வட்டாரக் கிணறு உதவிநிதித் திட்டத்தையும் இணைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இவ்வாறு, மாநிலமெங்கும், ரெவினியூ போர்டு (உணவு உற்பத்தி) நிர்வாகத்தில், ஒரே ஒரு கிணற்று உதவிநிதித் திட்டம் இயங்குமாறு அமைக்கப் பட்டது. ஒரே கிணற்று உதவி நிதித் திட்டமாக இருந்த போதிலும், வட்டார அபிவிருத்தி அதிகாரி தொடர்ந்து உதவி நிதி, கடன் இரண்டுமாக இருக்கும் இந்தத் தொகையை விநியோகிப்பவராகப் பணியாற்றுவார். இந்தத் திட்டம், ஒருவருக்கு ரூ. 2,000 வரை கடன் கொடுக்க வகை செய்கிறது. இப்போது வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், ஒருவருக்கு ரூ. 1,000 வரை மட்டுமே கடன் கொடுக்க அனுமதி வழங்க அதிகாரமளிக்கப் பட்டிருக்கிறது. வட்டார அமைப்பு இல்லாத பகுதிகளில் இந்தக்கடனைத் தாசில்தார் விநியோகிப்பார். அவர், ஒரு வருக்கு ரூ. 2,000 வரை கடன் அளிக்க அனுமதி வழங்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். ஆகவே ரெவினியூ போர்டு (உணவு உற்பத்தி), கடன் வழங்கும் விஷயத்தில் தாசில்தார் நிலையிலுள்ள வட்டார அபிவிருத்தி அதிகாரியும் தாசில்தாரைப்போன்றே, ஒருவருக்கு ரூ. 2,000 வரையில் கடன் அனுமதிக்கும் அதிகாரம் புதிய கிணற்று உதவி நிதித்திட்டத்தைப் பொறுத்த வரையில் அளிக்கப்பட சிபாரிசு செய்துள்ளது.

அரசாங்கம், ரெவினியூ போர்டின் இந்தச் சிபாரிசுகளை ஒப்புக்கொண்டு, வட்டார அபிவிருத்தி அதிகாரிகளுக்கு புதிய கிணற்றுஉதவிநிதித் திட்டத்தில் ஒருவருக்கு ரூ. 2,000 வரையில் கடன் கொடுக்க அனுமதி வழங்கும் அதிகாரத்தை அளித்து ஆணை பிறப்பிக்கிறது.

[கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 23-6-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண்1751)]

சமுதாய அபிவிருத்தி வேலைகளின் நீர்ப்பாசன வேலைகளில் பணியாளர் நிர்வாகமாறுதல்

Minor Irrigation Overseers transferred from the Revenue Department to the control of Chief Engineer, Highways Department under the reorganisation programme to suit the future pattern of the Panchayat Administration.

கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் 9-5-60 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 851-ல் சமுதாய அபிவிருத்தி வேலைகளில் பணிபுரியும் பொறியியல்பணியாளர்களும் (Engineering Staff) சிறிய நீர்ப்பாசனம் கிராமக் குடித் தண்ணீர் விநியோகம் (ஒருங்கிணைக்கப்பட்டது), தேசியக் குடிதண்ணீர் விநியோகம்—கிராமத் துப்புரவு திட்டம்,

ஆகியவற்றில் பணியாற்றும் பணியாளர்களும் பெரு வழித்துறைப் பணியாளர்களுடன் இணைக்கப்பட்டு 'பெருவழி—கிராமவேலைத் துறை" (Highways and and Ruralworks Department) என்ற ஒரு புதிய—இலாகா அமைக்கப்பட வேண்டுமென்றும், இந்தப் புதிய இலாகா, பிரதம எஞ்சினீயர் (பெருவழி—கிராம வேலை) ஆளுகையில் இயங்க வேண்டும் என்றும், அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்துள்ளது. அதன்படி, ரெவினியூ இலாகாவிலுள்ள சிறிய நீர்ப்பாசன மேற்பார்வையாளர் களின் (Overseers) பதவிகளை நீக்கி, அந்தப் பதவியில் வேலை செய்து வந்தவர்களை 1961-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் பெருவழி-கிராமத் துறையில் கண்காணிப்பாளர்களாக (Supervisors) ஏற்றுக்கொண்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 1961-ம் வருடம் மார்ச் மாதம் 21-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 841-ல், சமூதாய அபிவிருத்தி திட்டத்தின் வளர்ச்சிப் பணி அதிகாரிகளை, எந்த ஒரு செலவும் இன்றிப் பஞ்சாயத்து யூனியன்கள் பயன்படுத்திக் கொள்ள ஒப்படைத்தும், பஞ்சாயத்து யூனியன்கமிஷனர், வளர்ச்சிப்பணி கண்காணிப்பாளர்களுடைய சம்பளம், படிப் பணத்தைப் பெற்று விநியோகம் செய்யவும் அந்தச் செலவுகளை மாநில நிதிகளில் பற்றுவைக்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

பெருவழி - கிராம வேலைத்துறை பிரதம எஞ்சினீயர், வளர்ச்சிப்பணி கண்காணிப்பாளரின் (Extension Supervisors) சம்பளம்—படி முதலியவை வட்டார அபிவிருத்தி அதிகாரி என்ற முறையில், பஞ்சாயத்து யூனியன் கமிஷனரால் விநியோகிக்கப் படுவதைவிட, தம் இலாகா பகுதி என்சினீயர் (Divisional Engineer) மூலமாக விநியோகிக்கப்படலாம் என்று ஆலோசனை கூறியுள்ளார்.

அரசாங்கம் இந்த விஷயத்தைக் கவனமாக ஆராய்ந்த பின்னர், பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்களில் வேலை செய்யும் சிறிய நீர்ப்பாசன மேற்பார்வையாளர்களும் (Minor Irrigation Overseers) பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் ஆளுகையிலேயே இருக்கவேண்டுமென்று முடிவு செய்துள்ளது. அதன்படி, 1961-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் அவர்கள் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் கீழ் வேலை செய்ய ஆணையிடுகிறது. அவர்களுடைய பயணப்படி உட்பட, படியும் சம்பளமும் வளர்ச்சிப்பணி - பணியாளரின் சம்பளம்-படி போன்றே பஞ்சாயத்து யூனியன் கமிஷனரால் விநியோகிக்கப்படும்.

(கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத்துறையின் 7-6-61 தேதியிட்ட அரசாங்க ஆணை 1607ன்சுருக்கம்)

கிராமப் புறங்களில் மக்களின் உழைப்பைத் திரட்டிப் பயன்படுத்தும் திட்டத்தை மதுரை மாவட்டம், வத்தலகுண்டு வட்டாரத்துக்குப் பதிலாக, கோடைக்கானல் வட்டாரத்தில் செயல் படுத்துவதற்கான ஆணை:

Utilisation of man-power in rural areas: Implementation of the scheme in Kodaikanal Block instead of Batlagundu Block.

மதுரை மாவட்டக் கலெக்டர், தம்முடைய 23-4-1961 தேதிய கடிதத்தில் விளக்கியுள்ள நிலைமைகளைக் கொண்டு, கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் 1-2-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை (எண் 276)-ன் அனுமதிக்கப்பட்டுள்ள மக்களின் உடலுழைப்பைத் திட்டத்துக்குப் பயன்படுத்தும் திட்டத்தை வத்தலகுண்டு வட்டாரத்துக்குப் பதிலாக கோடைக்கானல் வட்டாரத்தில் செயல்படுத்துவதென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 14-6-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண்.1668)

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டாரத் தலைமை நிலைய அமைப்பு

Tirunelveli District—Shencottah Block—Fixation of headquarters—Ordered.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டாரத்தின் தலைமை நிலையத்தை, செங்கோட்டைக் கிராமத்தில், முனிசிபல் எல்லைக்கு வெளியே அமைக்கவேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 14-6-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1667)

பஞ்சாயத்து யூனியன்களின் அமைப்புக்குப் பின்னர், மாவட்டக் கழகங்களிடம் விடப்பட்டிருந்த பயணர் விடுதிகளின் (TRAVELLERS' BUNGALOWS) பராமரிப்புப் பற்றிய ஆணையின் திருத்தம் :

Travellers' Bungalows—Vested in District Boards—Maintenance after formation of Panchayat Unions.

தல நிர்வாகத் துறையின் 14—3—1960 தேதியிட்ட அரசாங்க ஆணை 478-ல், ஏற்கெனவே பெருவழித் துறையினரால் (Highways Department) பராமரிக்கப்பட்டு வந்த பயணர் விடுதிகளையும் (Travellers' Bungalows) ஓய்வு மனைகளையும் (Rest Houses), 1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் கீழ் மாவட்டக் கழகங்களிடமிருந்தும் பஞ்சாயத்துக்களிடமிருந்தும் மாற்றப்பட்ட பயணர் விடுதிகள், ஓய்வு மனைகள் ஆகியவற்றையும், மாநில நிதிகளைக் கொண்டு, பெருவழித் துறையினர் பராமரித்து வரவும், அவற்றின் மேற்பார்வை, அறைகளை விடுதல், முதலியவற்றை மாவட்டக் கலெக்டர்கள் கவனித்துக் கொள்ளவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர், மாவட்டக் கழகங்களின் ஆளுகையில் உள்ள பயணர் விடுதிகளையும், ஓய்வு மனைகளையும், ஒதுக்கிவைக்கக் கட்டணமும் (Reservation Charges), வாடகையும் மாவட்டக் கழகங்களால் முன்பணமாக வசூலிக்கப்பட்ட பின்னர், ஒதுக்கி வைக்க உத்தரவுகள் பிறப்பிக்கின்ற முறையினால், கலெக்டர் அலுவலகத்திற்கு இரண்டத்தனை வேலையும், வசூலிக்கப்பட்ட பணத்தைப் பாதுகாக்கின்ற வேலையும் எற்படுகின்றது என்று அறிவித்துள்ளார். ஆகவே அவர் டிவிஷனல் எஞ்ஜினியருக்கு (பெருவழித் துறை கிராம அபிவிருத்தி வேலைகள்) பயணர் விடுதிகளின் முழு நிர்வாகத்தையும், பராமரிப்பையும் கவனித்துக்கொள்ள கேட்டுக்கொண்டுள்ளார். டிவிஷனல் எஞ்ஜினியரின் முன்னதாகவே இடம் ஒதுக்கிவைக்கும் (Reservation) அதிகாரம் கலெக்டருடைய ஆளுகைக்கு உட்பட்டு செயல்படும். அவர் சில விசேஷ சந்தர்ப்பங்களில் டிவிஷனல் எஞ்ஜினியர் ஒதுக்கி வைத்துள்ள நிலையை நீக்கித் தாமே புதியதாக இடம் ஒதுக்கும் தகுதிபடைத்தவர். மாவட்டக் கழகங்களின் ஆளுகையில் உள்ள பயணர் விடுதிகள், ஓய்வு மனைகள் விஷயங்களில் இப்பொழுது நடைமுறையில் இருக்கும் ஒரு நாளைய கட்டணமும், வாடகையும் முன்னதாக வசூலிக்கின்றமுறை தொடர்ந்து இருக்கலாம் என்று அவர் (திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர்) ஆலோசனை கூறியுள்ளார். அவர் இந்த முறைகளைத் திருத்திக் கொள்வதில் தாம் எடுத்த நடவடிக்கைகளை அரசாங்கம் ஒப்புக்கொண்டு உறுதிப் படுத்த கேட்டுக்கொண்டிருக்கிறார். திருநெல்வேலி மாவட்டக் கலெக்டரால் யோசனை கூறப்பட்டுள்ள இந்தத் திருத்த முறைகள் மேற்கொள்ளப்படலாம் என்று ரெவினியூ போர்டும் சிபாரிசு செய்திருக்கிறது.

இது சம்பந்தமாக, தலைமை எஞ்ஜீனியர், (பெரு வழித் துறை, கிராம அபிவிருத்தி வேலைகள்), பெருவழித் துறையின் ஆளுகையில் உள்ள பயணர் விடுதிகள், ஓய்வு மனைகள், ஆகியவைகளை ஒதுக்கி வைக்கும் அதிகாரம், துணை என்ஜினியர், பெருவழி கிராம அபிவிருத்தி வேலைத் துறையின் பகுதி அதிகாரிகள் ஆகியோரிடம் ஒப்படைக்கப்படலாம் என்று அறிவித்துள்ளார். அரசாங்கம், திருநெல்வேலி மாவட்டக் கலெக்டருடைய ஆலோசனையையும், தலைமை எஞ்ஜீனியர் (பெரு வழித் துறை கிராம அபிவிருத்தி வேலைகள்) அவர்களுடைய ஆலோசனையையும் ஆராய்ந்து, தல நிர்வாகத் துறையில் 14—3—1960 தேதிய அரசாங்க ஆணை 478-ஐ ஓரளவுக்குத் திருத்தி, விசேஷ சந்தர்ப்பங்களில், முன்னால் இடம் ஒதுக்கி வைத்தலை (Reservations) ரத்து செய்து புதியதாக இடம் ஒதுக்கிவைக்கின்ற அதிகாரத்தை கலெக்டருக்கு அளித்து டிவிஷனல், எஞ்ஜினியர் (பெருவழித் துறை, கிராம அபிவிருத்தி வேலைகள்), பயணர் விடுதிகளின் பராமரிப்பு உட்பட மொத்த நிர்வாகத்தையும் கவனித்துக்கொள்ளவேண்டும். என்று உத்தரவிடுகிறது. மாவட்டக் கழகத்தின் பயணர் விடுதிகள் ஓய்வு மனைகள் ஆகியவைகளுக்கு ஒதுக்கி வைப்புக் கட்டணமும், ஒரு நாளைய வாடகையும் முன்னதாக வசூலிக்கும் இப்போதைய முறை இனியும் தொடர்ந்து அமுலில் இருக்கும். டிவிஷனல் எஞ்ஜினியர், (பெருவழித் துறை, கிராம அபிவிருத்தி வேலைகள்) இடம் ஒதுக்கி வைத்தல் (Reservation) வாடகை வசூல் வேலைகளைத் துணை எஞ்ஜினியர்கள் அல்லது பகுதி அதிகாரிகள் போன்ற தல அதிகாரி

களிடம் ஒப்படைக்கலாம். அவர்கள் டிவிஷனல் எஞ்ஜினியரின் மேற்பார்வைக்கும், ஆளுகைக்கும் உட்பட்டு இவ் வேலைகளைக் கவனித்துக்கொள்வார்கள்.

பயணர் விடுதிகளில் இடம் ஒதுக்கி வைக்கின்ற (Reservation) வேலையை டிவிஷனல் எஞ்ஜினியரிடம் (பெரு வழித் துறை கிராம அபிவிருத்தி வேலைகள்) ஒப்படைத்து நடவடிக்கை எடுத்துக் கொண்ட திருநெல்வேலி மாவட்டக் கலெக்டரின் நடவடிக்கைகளை அரசாங்கம் ஒப்புக் கொண்டு உறுதி செய்கிறது.

(கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் 11—5—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் : 1343.)

வாசகர்களுக்கு

நம்முடைய "கிராமநலம்" பத்திரிகையில், கிராம வளர்ச்சி சம்பந்தமாக நடைபெறும் வேலைகளைப் பற்றிய, நல்லவிதமான புகைப்படங்களை வெளியிடவேண்டுமென்பதே நம்முடைய விருப்பம். எனவே "கிராம நல"த்தில் வெளியிடுவதற்குரிய நல்ல புகைப்படங்களை அனுப்பிவைப்பதுடன், அந்தப் புகைப்பட சம்பந்தமான நிகழ்ச்சிகளையும் தனியாக ஒரு கடிதத்தில் எழுதி, படங்களையும் விவரங்களையும் "கிராம நலம்" ஆசிரியருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

புகைப்படங்கள் தேவை

அனுப்பப்பெறும் படங்கள் பிளாக் செய்வதற்கேற்ற முறையில் நல்ல விதமாக இருக்க வேண்டும். மிகச் சிறிய புகைப் படங்கள் பிளாக் செய்வதற்குப் பயன்படா. குறைந்தபட்சம் போஸ்ட் கார்டு அளவாவது இருக்க வேண்டும். நிகழ்ச்சிகள் ஊராருடைய ஒன்றுசேர்ந்த உழைப்பையும், மனோபாவத்தையும் காட்டக்கூடியவைகளாய் இருந்தால், மிகவும் நலமாக இருக்கும்.

உதாரணமாக, ஒரு பஞ்சாயத்துக் கவுன்சில் ஏகமனதாக, தலைவரையும், உபதலைவரையும் தேர்ந்து எடுத்திருந்தால், அப் பஞ்சாயத்துக் கவுன்சிலின் தலைவர், உபதலைவர்—இவர்களுடைய படம் நமக்குக் கிடைக்குமானால், அதை மகிழ்ச்சியுடன் வெளியிட உதவியாக இருக்கும்.

புகைப்படம் அனுபபி வைப்பது சம்பந்தமாக ஏதேனும் சந்தேகம் இருந்தால், "ஆசிரியர், "கிராம நலம்", கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற விலாசத்திற்கு எழுதிக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

அத்துடன், "கிராம நலத்"தில் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன. அவ்வப்போது வெளியிடப்படும் புது அம்சங்கள் பற்றியும், பொதுவாக "கிராம நலம்" பற்றியும் வாசர்களின் அபிப்பிராயங்களை அறிய விழைகிறோம். தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வாசகர்கள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அவை "கடிதத் தரங்கு" பகுதியில் இடம்பெறும்.

ஆசிரியர்,
"கிராம நலம்"

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள

பஞ்சாயத்துத் தலைவர்கள் - உபதலைவர்கள்

திரு ஆர். விஜயரங்க ஆள்வார்,
(தலைவர்) ராதாபுரம் பஞ்சாயத்து யூனியன்
திருநெல்வேலி மாவட்டம்

திரு டி. எல். ரகுபதி (தலைவர்)
பறங்கிமலை பஞ்சாயத்து யூனியன்

திரு ஆர். கண்ணன் (உப தலைவர்)
பறங்கிமலை பஞ்சாயத்து யூனியன்



திரு வி. எஸ். பெரியசாமி (தலைவர்)
வாழப்பாடி பஞ்சாயத்து யூனியன் (சேலம் மாவட்டம்)

திரு என். சி. மாரிமுத்து (உபதலைவர்)
வாழப்பாடி பஞ்சாயத்து யூனியன்

Regd.
No. M. 7277

©
தமிழ்நாடு
அரசாங்கம்
1961.

அமெரிக்கத் தூதரின் சென்னை விஜயம்

அமெரிக்கத் தூதர் டாக்டர் கால்பிரெய்த் (Professor John Kenneth Galbraith) 18-7-61 அன்று சென்னைக்கு விஜயம் செய்தார்.

1. அமெரிக்கத் தூதரும் தமிழகத் தலைவரும்-தேசத்தின் நலன்தான் உயர்ந்தது என்று கருதும் இருவரும் கூடி என்ன பேசினார்கள் ?

2. தமிழ்நாடு அரசாங்கப் பிரதமச் செயலாளர் ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி அவர்களுடன்.

3. சென்னைப் பல்கலைக் கழகத்துணைவேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அளித்த விருந்தில் தூதரும் அவர் மனைவியாரும்.

4. முதல் அமைச்சர் அளித்த விருந்தில் கலந்து கொண்டவர்கள்.

5. கிண்டி தொழில் பேட்டையில் அமெரிக்கத் தூதர்.

6-7. சத்துணவு பிரச்சார வண்டியொன்றை திருமதி கென்னத் கால்பிரெய்த் சேவா சமாஜத்திற்கு அன்பளிப்பாக அளித்தார்.